
GOKULAM செப்டம்பர் '93 ரூ. 3.00

கோகுலம்



குட்டிப் பையன் கையில் குட்டி முதலை!



Action has always been part of my success.
Through all the excitement, through all the glory and acti
action always keeps me ahead.



opener SKIPPER

SHOES FOR THE NEW GENERATION.

action®
SHOES



கோகுலம்

1993
செப்டெம்பர்
மாத இதழ்
மலர் : 11
இதழ் : 8

அருமைச் சிறுவர் சிறுமியரே,

எல்லோருக்கும் அன்பு வணக்கம்.

செப்டெம்பர் 5ஆம் நாள் 'ஆசிரியர் தினம்'. டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணனின் பிறந்த நாள்தான் அது. தாய் தந்தையர்க்கு இணையாக, வாழும் தெய்வமாக, ஆசிரியர்களையும் நமது முன்னோர்கள் போற்றிச் சிறப்பித்து வந்துள்ளனர். கல்விக் கண்களைத் திறந்து வைத்து பண்பாளனாக உயர குருவே வழிகாட்டுகிறார். உலகத்தை மேம்படுத்திய ஞானியர்கள், தலைவர்கள், விஞ்ஞானிகள், கவிஞர்கள், எழுத்தாளர்கள் ஆகிய எல்லோருமே தங்களுக்குக் கல்விக் கண்களைத் திறக்க வைத்த ஆசிரியப் பெருமக்களைப் பெருமையோடு நினைவுகூர்கிறார்கள்.



ஆசிரியர்களுக்குச் சிறப்பும் மரியாதையும் அளிக்காத நாடு, அணைந்த விளக்கைக் கொண்டு கும்மிருட்டில் வழி தேடக் கிளம்பிய மூடனுக்குச் சமானமானது என்கிறார் பெர்னாட்ஷா. ஒரு நல்ல மாணவன் நாட்டை உயர்த்தித் தானும் உயர்கிறான். ஓர் இலட்சிய குரு, ஆயிரக்கணக்கான நல்ல மாணவர்கள் உருவாகக் காரணமாகிறார். இதனால்தான் ஆசிரியப் பணி தன்னிகரில்லாப் பெருமைக்குரிய பணி என்று மதிக்கப்படுகிறது. ஒருவன் உயர்நிலை அடைந்ததும், அதைக் கண்டு உளமாரப் பெருமகிழ்ச்சி அடைபவர்கள் பெற்றோர்களுக்கு அடுத்த படியாக அவர்களுக்குக் கல்வி போதித்த ஆசிரியர்கள்தான். ஆசிரியர்கள் உங்களைக் கண்டிப்பதும், தண்டிப்பதும், திருத்த முயல்வதும் உங்கள் நன்மையைக் கருத்தில் கொண்டுதான் என்பதை எப்பொழுதுமே நீங்கள் மறக்கக் கூடாது. சிறுவர் சிறுமியரிடையே ஆசிரியப் பெருமக்கள் குறித்த மரியாதை உணர்வை மேம்பட வைக்க கோகுலம் முயன்று வருவதை அனைவரும் அறிவர். ஆசிரியர் தினத்தன்று நீங்கள் அனைவரும் உங்கள் ஆசிரியர்களைச் சந்தித்து வணங்கி, அவர்களது நல்லாசிகளைப் பெற வேண்டும் என்று விரும்புகிறேன்.





பேராசிரியர் 'கல்கி'யின் பிறந்த நாளும் இம்மாதம் 9-ஆம் தேதி வருகிறது. கல்கி இதழ்களில் அந்தக் காலத்திலேயே அவர் சிறுவர்களுக்கென ஒதுக்கிய வண்ணப் பக்கங்கள் இன்றைக்கும் பிரமிப்பை ஊட்டுகின்றன. பெரியவர்களுக்கென எழுதிக் குவித்த அவரது பேனா, சிறுவர் இலக்கியத்தையும் விட்டு விடாது வளப்படுத்தியுள்ள உண்மை குழந்தை இலக்கியம் படைப்போருக்கும், குழந்தைகளுக்கும் பெருமையூட்டுவதாகும்.

அறிவியல் செய்திகளை அனுப்புவோர் பலர், கலைக் களஞ்சியத்தின் பக்கங்களை அப்படியே எழுதி அனுப்பி விடுகிறாகள். கலைக் களஞ்சியத் தகவல்கள் பல ஆண்டுகளுக்கு முன்பு தொகுக்கப்பட்டவை. அதற்குப் பிறகு அதே பொருளைப் பற்றிப் புதிய கண்டுபிடிப்புகள் எத்தனையோ வந்து விட்டன. கலைக்களஞ்சியத் தகவல்களோடு இந்தத் தகவல்களையும் சேர்த்து அளித்தால்தான் ஒரு கட்டுரை முழுமை பெறும். ஒருவரது உழைப்பு இதில்தான் உள்ளது.

மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போமா?

அன்புடன்,

(கௌரவ ஆசிரியர்)

...பிர்களிடத்தில் அன்பு வேணும் -
...ய்வம்
...ண்மையென்று தானறிதல்
...வேணும். - பாரதியார்.

கோகுலம்


இந்த இதழில்...

❋ சைக்கிள் ஓட்டுவாய்! - பக்கம் 24






❋ எங்கேடா குடை? - பக்கம் 68



✱ முதலைப் பண்ணைக்குப் போகலாமா? பக்கம் 82



✱ வேதாளம் கொடுத்த வரங்கள் - பக்கம் 52

நியூயார்க் நகரம் என்றதும், கையில் சுதந்திர ஜோதியை உயர்த்திப் பிடித்து கம்பீரமாக நிற்கும் சுதந்திர தேவியின் சிலை நினைவுக்கு வருகிறது. லண்டன் நகரம் என்றதும் வரலாற்றுப் புகழ்மிக்க பிக்பென் கோபுர கடிகாரமும், லண்டன் டவரும்தான் முதலில் நினைவுக்கு வருகின்றன. இதைப் போல் பிரான்சின் தலைநகரான பாரீஸ் என்றதும் வானை முட்டி உயர்ந்து நிற்கும் ஈஃபல் கோபுரத்தின் நினைவு வருகிறது.

இந்த ஈஃபல் கோபுரத்தை யார் கட்டினார்கள்? எதற்காகக் கட்டினார்கள்?

1889-ஆம் ஆண்டு பாரீஸ் நகரில் ஓர் உலகக் கண்காட்சி நடைபெற்றது. இந்தக் கண்காட்சிக்காக ஓர் இரும்புக் கோபுரத்தை அமைக்கும் பொறுப்பை இரும்புக் கட்டட மந்திரவாதி என அழைக்கப்பட்ட அலெக்ஸாண்டர் கஸ்டாவ்

இணையில்லாத ஈஃபல் கோபுரம்!



ஈஃபல் ஏற்றார். கண்டோர் வியக்கும் இந்த கோபுரத்தை இரண்டு ஆண்டுகளில் கட்டி முடித்தார் ஈஃபல். இருநூற்று ஐம்பது தொழிலாளர்கள் இரவு பகல் பாராது உழைத்து இதை உருவாக்கினர். தொடக்கத்தில் இது டவர் ஆஃப் பாரீஸ் என்றே அழைக்கப்பட்டது.

இந்த எழில்மிக்க கோபுரத்தை எழுப்ப அரசு அனுமதி அளித்தவுடன், இந்தக் கோபுரம் வரலாற்றுப் புகழ் வாய்ந்த நகரமான பாரீஸின் இயற்கை அழகைப் பாதித்து விடும் என்றும், அதனால் இதைக் கட்ட அனுமதிக்கக் கூடாது என்றும் எல்லாத் தரப்பு மக்களும் எதிர்ப்புத் தெரிவித்தனர். கவிஞர் கிரிஃபோலி, எழுத்தாளர்

மாப்பஸான் போன்ற முக்கியப் புள்ளிகள் கூட இந்தக் கோபுரம் கட்டப்படுவதை எதிர்த்து எழுதினர். ஓர் இயக்கமே இதற்காக நடத்தப்பட்டது. உருவாகும் போதே இதைத் தகர்த்துவிடவும் முயற்சிகள் நடைபெற்றன. இத்தனை எதிர்ப்புகளையும், தடைகளையும் மீறி கோபுரம் உருவானது.

ஆனால் ஈஃபல் கோபுரம் கட்டி முடிக்கப்பட்டதும், பாரீஸ் நகரின் அழகுக்கு மேலும் மெருகூட்டி, ஒளிவீசச் செய்யும்படி இது இருந்த உண்மையை யாராலும் மறுக்க இயலவில்லை. எதிர்ப்புத் தெரிவித்தவர்கள் எல்லோரும் அதன் அழகில் மயங்கிப் புகழ் பாடினர்.

இந்த ஈஃபல் கோபுரத்தின் உயரம் 984 அடி. இதில் மூன்று பெரிய பிளாட்பாரங்கள் உள்ளன. முதலாவது 190 அடி உயரத்தில். இரண்டாவது 381 வது அடி உயரத்தில். மூன்றாவது 906 வது அடி உயரத்தில். மேலே செல்ல எலிவேட்டர்கள் எனப்படும் லிஃப்டுகள் இருக்கின்றன.

ஆரம்பத்தில் இதை, உலகக் கண்காட்சிக்கான ஒரு நினைவுச் சின்னமாக, இருபது ஆண்டுகள் வரை மட்டுமே வைத்திருக்கவும், பிறகு அழித்து விடவும் முடிவு செய்யப்பட்டது. ஆனால் கட்டி முடிக்கப்பட்டதும், அதன் அழகு, கம்பீரம், பெருமை, மக்கள் அளித்த பேராதரவு ஆகியவற்றைக் கண்டு, அரசாங்கம் தனது முடிவை மாற்றிக் கொண்டது. எதிர்ப்பாளர்கள் கூட அதை ஒரு நிரந்தர கலைப் பொருளாக ஆக்கி விடுங்கள் என்று கூறினர். அதற்கு ஏற்ப பல மாற்றங்கள் கோபுரத்தில் செய்யப்பட்டன.

இந்தக் கோபுரத்தின் உச்சியில் ஓர் வானிலை ஆராய்ச்சி நிலையம் அமைக்கப்பட்டு, காலநிலை வானியல் ஆராய்ச்சிப் பணிகள் இரவும் பகலும் நடைபெற்று வருகின்றன. இப்பொழுது செயற்கைக் கோள்களுக்கு இதிலிருந்து சமிக்ஞைகள் கூட அனுப்பப்படுகின்றன.




இந்த அற்புத கோபுரம் பிரெஞ்சுக் கலைஞர்களின் பெருமதிப்பைப் பெற்று நாடகம், திரைப்படம், ஓவியம், கவிதைகள் ஆகிய எல்லாவற்றிலும் இடம்பெற்றுள்ளது. இது செயற்கை நீரூற்றுகளும், மரங்களும், அருவிகளும், மலர்க் குவியல்களும் நிறைந்த மைசூர் பிருந்தாவனம் போன்ற பூங்காவில் அமைந்திருக்கிறது. இதைப் பாடாத கவிஞர்களே கிடையாது. பிக்காசோ சாகாவரம் பெற்ற தனது ஓவியங்களில் இதற்குத் தனி இடம் அளித்துள்ளார். எத்தனையோ திரைப்படங்களில் இது இடம்பெற்றுள்ளது. இதைக் கட்டி முடிக்க 10,00,000 பவுன் செலவானது.

இங்கிலாந்து மன்னர்கள், அமெரிக்கத் தலைவர்கள், ரஷ்ய சீன கம்யூனிஸ்ட் நாடுகளின் தலைவர்கள், உலக நாடுகளின் தலைவர்கள், கலைஞர்கள், மதத் தலைவர்கள், எழுத்தாளர்கள் ஆகிய எல்லோருமே ஈஃபல் கோபுரத்தைக் கண்டு வியக்க பாரீசுக்கு வருகை தந்துள்ளனர். பிரான்சில் மட்டுமல்ல, உலக சுற்றுலாத் தலங்களில் ஒன்றாகவும், இது விரைவில் இடம்பெற்றது.

இதன் எடை 7,300 டன்கள். இதைக் கட்டி, பாரீஸ் நகரின் பெருமையை உயர்த்திய ஈஃபலின் பெயராலேயே நாளடைவில் இது அழைக்கப்பட்டு இந்தப் பெயரே நிலைத்தும் விட்டது. இந்தக் கோபுரத்தைக் காண வரும் சுற்றுலாப் பயணிகளிடமிருந்து கட்டணம் வசூலித்துக் கொள்ளும் உரிமையை இருபது ஆண்டுகளுக்கு அரசு ஈஃபலுக்குக் கொடுத்து பெருமையளித்தது.

ஈஃபல் இந்த பாரீஸ் கோபுரத்தை மட்டும் கட்டவில்லை. பல புகழ்பெற்ற பாலங்கள், வானிலை ஆராய்ச்சி நிலையம் போன்றவற்றையும் கட்டினார். நியூயார்க்கின் சுதந்திர தேவி சிலையின் அடித்தளம் கூட இவர் வடிவமைத்துக் கட்டியதுதான். ஆனாலும் ஈஃபல் கோபுரத்தின் அளவுக்கு மற்றவை புகழ்பெறவில்லை. இதே போல் தங்கள் நாட்டிலும் ஒரு வானுயர் கோபுரத்தைக் கட்ட எல்லா நாடுகளும் முயன்றன. ஆனால் எந்த முயற்சியும் எடுபடவில்லை. அண்மையில் இந்தப் பெருமைமிகு கோபுரம் தனது நூற்றாண்டு விழாவையும் கொண்டாடியிருக்கிறது!

பாரீஸ் நகரத்தில் எங்கிருந்து பார்த்தாலும் தெரியும் இந்த கோபுரத்தில், ஓட்டல்கள், கடைகள், விளையாட்டுக் கூடங்கள், கலை அரங்குகள் எல்லாம் இருக்கின்றன. முயன்றால் மனிதனால் முடியாதது எதுவும் இல்லை என்பதை ஈஃபல் டவர் உலகத்திற்கு உணர்த்திக் கொண்டிருக்கிறது.



DIAMONDCOMICS

Presents an unending series of the most renowned comics in the world, like...

Phantom

A typical
racter of the
nic surviving
his own life
r hundred of
ars—like one
oul in a series
of bodies. He
has taken a
dge to efface
evil from the
rld. Although
dwells in the
se jungle, his
eld of action
ers the whole
rld. He is the
most helping
friend for the
needy,
tressed persons
t a vemitable death
his adversaries...



now available
No. 1 to 26



now available
No. 1 to 13

Mandrake


The most widely read comic character in the world, who can hypotise anyone merely by looking at him. His enemies are determined to end his existence but every time not he but they who lose before his mighty magic.

Spider Man

unbelievable
stence who in
eality is a very
vial handsome
uth, hating all
hat is criminal
and evil in the
orld. When he
comes in his
eadly Spider-
Form his
hemies cannot
and before his
mitable power.
No place is
naceesible for
him, even that
too which is
beyond the
ildest imagination.



now available
No. 1 and 2



now available
No. 1 to 13

James Bond

An ace British detective known for his daredevilry and love for all good things of life including the young beauties! An expert masqurader who newer fails in his mission howso-ever dangerous.

DIAMOND COMICS PVT.LTD. 2715, DARYA GANJ, NEW DELHI-110002



பட்டுக்கோட்டை ராஜா

''இன்று சாரணர் பயிற்சியின் இறுதி வகுப்பு. இதை ஒட்டி உங்களுக்கு இன்று ஒரு போட்டி வைக்கப் போகிறேன். இதில் வெற்றி பெறுகிற ஒருவருக்கு வெள்ளிப் பதக்கமும், சான்றிதழும் பரிசாக அளிக்கப்படும்!'' என்று பயிற்சி ஆசிரியர் பாலநாதன் அறிவித்ததும் அங்கே அணிவகுத்து நின்ற மாணவ, மாணவியர் மனங்களில் குதூகலம்.

செங்கற்பட்டிலிருந்த மேனிலைப் பள்ளி ஒன்றின் சாரணர் கூட்டம் அது. பயிற்சி ஆசிரியர் பாலநாதன் பயிற்சியில் சிறந்து விளங்கிய மாணவர்கள் ஐந்து பேரையும், மாணவிகள் ஐந்து பேரையும் தேர்ந்தெடுத்து அழைத்து வந்திருந்தார்.

ஒவ்வோர் ஆண்டிலும் பயிற்சியில் சிறந்து விளங்குகிற ஒருவருக்கு வெள்ளிப் பதக்கமும், 'சிறந்த சாரணன்' சான்றிதழும் வழங்கப்படுவது அந்தப் பள்ளியின் வழக்கம்.

பாலநாதன் தேர்ந்தெடுத்த பத்து மாணவ, மாணவியரோடு ஊருக்கு வெளியே இருந்த மலைப்பாங்கான இடத்துக்கு வந்திருந்தார். அதிகாலை நேரம். சூரியனின் ஆதிக்கம் இன்னும் தொடங்கவில்லை. விறைப்பான யூனிஃபாரம் அணிந்து நின்ற சாரணர்கள், ஆசிரியர் அறிவிக்கப் போகும் போட்டி பற்றி அறிந்திட ஆவலாய்க் காத்து நின்றனர்.

ஆசிரியரின் சுட்டு விரல் சற்றுத் தொலைவிலிருந்த ஒரு சிறிய குன்றினைச் சுட்டிக்காட்டியது.

''அதோ அந்தக் குன்றின் உச்சியில் ஒரு தேசியக் கொடி நடப்பட்டிருக்கிறது. அந்தக் குன்றில் ஏறுவதற்காக உங்கள் பத்துப் பேருக்கும் தனித்தனியே கயிறுகள் தொங்க விடப்பட்டுள்ளன... நான் 'ரெடி-ஸ்டார்ட்' சொல்லியதும் நீங்கள் இங்கிருந்து ஓடிக் கயிற்றின் வழியே குன்றின் உச்சியை அடைந்து அந்தத் தேசியக் கொடியை எடுத்து வர வேண்டும். அப்படித் தேசியக் கொடியை யார் எடுத்து வந்து என்னிடம் தருகிறீர்களோ அவருக்குத் தான் 'சிறந்த சாரணன்' பட்டமும், வெள்ளிப் பதக்கமும் அளிக்கப்படும்!''

மாணவர் ஒருவர், மாணவி ஒருத்தி என்று பத்துப் பேரும் அடுத்தடுத்து ஒரே கோட்டினில் நிறுத்தப்பட்டார்கள்.

பத்துப் பேர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அங்கே அழைத்து வரப்பட்டிருந்தாலும் உண்மையான போட்டி பாபு, சாந்தி, சரவணன் மூவருக்குள்தான் என்பது எல்லோருக்கும் தெரியும். இதற்கு முன் வைக்கப்பட்ட போட்டிகள் அனைத்திலும் அந்த மூவரும்தான் முதல், இரண்டு, மூன்றாம் இடங்களைப் பகிர்ந்து கொண்டனர். இப்போதிந்த வெள்ளிப் பதக்கமும், பட்டமும் யாருக்குக் கிடைக்கப் போகிறது?

''எனக்குத்தான்!'' என்ற சரவணன் சட்டைக் காலரைத் தூக்கி விட்டுக் கொண்டான். ''பார்க்கலாம்'' என்றான் பாபு. இருவருக்கும் மத்தியில் நின்ற சாந்தி எதுவும் சொல்லாமல் அமைதி யாய் நின்றாள்.


''கெட் ரெடி!'' என்று ஆசிரியர் சொன்னதும் அனைவரும் இரு கை களையும் தரையில் ஊன்றி முழங் காலில் நின்றனர். ''ஸ்டார்ட்!'' என்று அவர் 'பச்சைக் கொடி' காட்டியதும் எல்லோரும் மூச்சைப் பிடித்துக் கொண்டு ஓடினர்.

எதிர்பார்த்தபடியே பாபு, சாந்தி, சர வணன் மூவரும்தான் முதலில் ஓடினர். மூவரிலும் குன்றின் அடி வாரத்தை அடைந்ததும் சாந்தி கயிற்றைப் பற்றி விடுவிடுவென முதலில் ஏறத் தொடங் கினாள். இரண்டாமிடத்தில் பாபு. மூன் றாமிடத்தில் சரவணன்.

கயிறு பிடித்துத் தொங்கிப் பாதத் தால் குன்றில் உதைத்து உதைத்து லாவகமாய் சாந்தி ஏறிய காட்சி அழ காய் இருந்தது. பாலநாதன் கூட அவளுக்குத்தான் முதல் பரிசு என்று முடிவு கட்டினார்.

அப்போதுதான் அந்த அசம்பா விதம் நடந்தது. சாந்தி கயிற்றைப் பிடித்திருந்த கை நழுவிப் போக மல் லாந்து கீழே விழுந்து அடிவாரம் நோக்கிச் செலுத்தப் பட்டவளாய் உருண்டாள். அடிவாரம் வரை அப் படியே அவள் உருண்டால் உயிருக்கே கூட ஆபத்து ஏற்படலாம் என்கிற நிலை.

பாலநாதன் பதைத்துப் போய் ஓடி வந்தார். அதற்குள் இரண்டாம் இடத்தி லிருந்த பாபு சமயோஜித புத்தியோடு செயல்பட்டான். தான் ஒரு பாறை விளிம்பில் காலூன்றி நின்று கொண்டு, கீழே உருண்டு வந்த சாந்தியைத் தேக்கி நிறுத்திக் காப்பாற்றினான். மயங்கிய நிலையிலிருந்த சாந்தியைத் தானே தோளில் சுமந்து கொண்டு மெதுவாய்க் கீழே இறங்கினான்.



அவனை எதிர்கொண்ட பால நாதன், ''வெல்டன் மை பாய்!'' என்று முதுகில் தட்டிக் கொடுத்துப் பாராட்டி னார். சாந்தியைத் தரையில் கிடத்தி மயக்கம் தெளிவித்தார்.

மயக்கம் தெளிந்து எழுந்த சாந்தி, ''ஸாரி சார், கைப்பிடி நழுவிடுச்சி!'' என்றாள் பாலநாதனிடம்.

''எனக்கு ஸாரி சொல்றது இருக் கட்டும்மா... முதலில் பாபுவுக்கு நன்றி சொல்லு... அவன் இல்லேன்னா உன் உயிருக்கே ஆபத்தாகியிருக்கும்!''

சாந்தி, பாபுவை நோக்கிக் கைகூப் பினாள் - ''ரொம்ப நன்றி பாபு!''

''நான் என் கடமையைச் செய் தேன்... சக மனிதன் ஆபத்திலிருக்கிற போது அவன் உயிரைக் காப்பாற்ற வேண்டியதுதான் சாரணனோட முதல் கடமை... அதைத்தான் நான் செய் தேன்!'' என்றான் பாபு.

''சரியாகச் செய்திருக்கிறாய்!'' என்று பாராட்டினார் பாலநாதன்.

அப்போது சரவணன் பின்னால் வந்து, ''சார், நான் தேசியக் கொடியை எடுத்திட்டு வந்திட்டேன். பதக்கமும் சான்றிதழும் எனக்குத்தானே?'' என்று கேட்டான்.

''இல்லை சரவணன். தேசியக் கொடியை நீ எடுத்திட்டு வந்தாலும் ஒரு சாரணனாய் நீ செய்ய வேண்டிய முதல் கடமையிலிருந்து தவறிட்டே. அதனால பதக்கமும் சான்றிதழும் பாபுவுக் குத்தான்!'' என்று ஆசிரியர் குறிப்பிட்ட போது மற்ற மாணவர்கள் கைத்தட்டி ஆர்ப்பரித்தார்கள்.

பாபு பெருமிதத்தோடு புன்னகைத் தான்.



ஏழை துயரைக் கண்டதும்
இதயம் விரியும் வள்ளல்போல்
வீழும் மழையைக் கண்டதும்
விரியும் கொள்கை உன்னிடம்.

கையில் பற்றும் யாரையும்
கருணை யோடு காத்திட
வெய்யில் சூடு தாங்குவாய்
பெய்யும் மழையும் தாங்குவாய்.

கம்பி களின் பின்னலில்
கறுப்புத் துணியின் பந்தல்நீ
தம்பி களும் தாங்கிட
கனமும் இல்லை கொஞ்சமும்.

வட்ட மாக விரிகிறாய்
மற்ற நேரம் சுருங்குவாய்
குட்டை யாகத் தெரிகிறாய்
குடையென் றுன்னைக் கூறுவார்.

- சி. விநாயகமூர்த்தி.


விட்டுக் கொடுக்காமல்
ஒட்டிக் கொள்ளும்
அற்புதமான பசை வெமிக்கால்
பார்க்கப் பார்க்கப் பரவசமூட்டும் பொம்மை வீடு கட்டுவீர். ஃபர்னிச்சர்கள் போட்டுவீர். கைக்கடக்கமாய் மெத்தெனப் பஞ்சடைத்த மிருக பொம்மைகள், பயமுறுத்தும் முகமூடிகள், மரப் பாச்சிகள்... மரம், காகிதம், கார்ட்போர்டு, துணிகள் இவற்றின் துணையுடனே...
உங்கள் கற்பனையே வேடிக்கைக்கு எல்லை! உங்கள் ஓய்வு வேளையை உல்லாசமாய்க் கழித்திடச் சிறந்த வழி.
VAMICOL®
ஆர்ட் அண்டு கிராஃப்ட் அட்ஹெஸிவ்
வேம் ஆர்கானிக்
கெமிக்கல்ஸ் லிமிடெட்
VAMICOL
React/198/92 Tam.

கேளுங்கள் சொல்லப்படும் **சேரநம்பி**

கானல் நீர் என்பது என்ன?

★ **சூரிய பிரக்ஞப்தி என்ற நூல் எதைப் பற்றியது? இதை யார் எழுதினார்கள்? - வெ. நமசிவாயம், பள்ளத்தூர்.**

நீங்கள் கணித இயல் மாணவரா? இந்தப் பெயரை எங்கே கேள்விப்பட்டீர்கள்? இந்த நூல் சமண சமய நூல். இதை இயற்றியவர் பெயர் முடிவாக வில்லை. இதன் காலம் சுமார் கி.மு. 500 என்று ஆராய்ச்சியாளர்கள் மதிப்பிடுகிறார்கள். இது வான சாஸ்திரம் பற்றிய பல செய்திகளை அறிவியல் அடிப்படையாகத் தருகிறது. அதோடு கணக்கியலில் சாய்சதுரம், நீள் சதுரம், ஃபார்

* குழந்தைக் கவிஞர் :



* திருச்சி பாரதன் : கலைமாமணி



முலா போன்றவைகளுக்கு துல்லியமாக விளக்கமும் தருகிறது. இந்தியர்களின் அற்புதமான நுண்ணிய கணித அறிவியலுக்கு இந்த நூல் ஓர் எடுத்துக்காட்டு.

★ **பங்களாதேஷில் உள்ள பத்மா என்ற நதி எங்கு உற்பத்தியாகிறது? வரைபடத்தில் இது காணப்படவில்லையே! - பூ. வள்ளிநாயகம், திருமங்கலம்.**

நம்ம கங்கை நதிதான் பங்களாதேஷுக்குள் பாய்ந்ததும் பத்மாவாகி விடுகிறது. அவ்வளவுதான். கங்கை உற்பத்தியாகும் இடம் தெரியுமல்லவா? நம்ம இமயமலைதான்.

★ **பூமியின் ஆழமான இடம் எது? - எம். நாகராஜன், விக்ரவாண்டி.**

அண்டார்க்டிகாவுக்கு வெளியே பூமியின் ஆழமான இடம் டெட் சீ(DEAD SEA) தான்.

★ **பகவத்கீதை போல் சிவகீதை என்று ஏதாவது இருக்கிறதா? - வெ. கிருஷ்ணவேணி, நெய்வேலி.**


இருக்கிறதே. பத்மபுராணத்தில் இது வருகிறது. கண்ணன் அருச்சுனனுக்குக் கூறியது பகவத்கீதை. சிவபெருமான் இராமனுக்குக் கூறியது சிவகீதை.

★ **கடல் மட்டம் என்றால் என்ன? - சுப. முத்துராக்கு, திருமங்கலம்.**

கடல் எப்பொழுதுமே ஒரே மட்டமாக இருப்பதில்லை. அவைகள் உயர்ந்தும் தாழ்ந்தும் அலை வீசியபடி உள்ளன. இந்த உயர்வு தாழ்வுகளின் அளவை டைடு காஜ் (TIDE GAUGE) என்ற கருவிகளின் துணையால் அளவெடுத்து, இதன் சராசரி உயரத்தைக் (உயரம், தாழ்வு) கணக்கிடுகிறார்கள். இந்த சராசரி உயரத்திற்கும், சராசரி தாழ்வளவுக்கும் இடைப்பட்ட அளவே (இதைக் கணக்கிடுவார்கள்) கடல் மட்ட அளவு (SEA LEVEL) என்பது.

★ **சாட்டையைச் சொடுக்கியதும் சத்தம் கேட்கிறதே, இது எதனால்? - கோ. சபாபதி, சிதம்பரம்.**

சாட்டையைச் சொடுக்கும் போது, அழுத்தமெல்லாம் அதன் நுனியில் திரண்டு விடுகிறது. அந்த நுனி, காற்றை மிக மிக வேகமாக, கனமாக நெருக்கி அழுத்துகிறது. இதன் காரணமாகக் காற்று அலைகள் அதிவேகமாகத் தள்ளப்பட்டு நெருக்கியடிக்கப்பட்டு சத்தத்தை ஏற்படுத்துகின்றன.



★ கானல் நீர் என்பது என்ன? இதைப் புகைப்படம் எடுத்தால் விழுமா? - சுப்பு. ஆண்டியப்பன், கிருஷ்ணாபுரம்.

கானல் நீர் என்பது ஒரு பொய்யான தோற்றமே. ஆங்கிலத்தில் மைரேஜ் (MIRAGE) என்பார்கள். நாம் இதைக் காணும் இடத்திற்கு மேல்பரப்பில் வெப்பக் காற்று இருக்க வேண்டும். இதற்கு மேல் ஒரு அடுக்கு (Layer) குளிர்ந்த காற்று இருக்க வேண்டும். வானில் இருந்து ஒளிக் கற்றைகள் குளிர்ந்த காற்று அடுக்கைக் கடந்து ஊடுருவும். இதற்குக் கீழே உள்ள வெப்பக் காற்று அடுக்கை அடைந்ததும், இந்த ஒளிக்கற்றைகள் அதை ஊடுருவ இயலாது, வளைந்து மறுபடி மேல் நோக்கிப்பாயும். வானில் உள்ள குளிர்ந்த காற்றின் பரப்பு இந்த வளை வில் பிரதிபலித்துக் கொண்டிருக்கும். இதை நாம் காணும் போது நீர் ஓடுவது போன்ற ஒரு மாயத் தோற்றத்தை உரு வாக்கும். இதுவே கானல் நீர். இதை மிகச் சிறந்த காமிராவால் புகைப்படமும் எடுக்கலாம்.

★ மண் புழுவை இரண்டாக வெட்டினால், இரண்டு துண்டுகளும் மறுபடி வளருமா? - கு. முத்து மீனாட்சி, சிம்மக்கல்.

பயங்கரமான கேள்வி! வெட்டினதும் இரு துண்டுகளுமே சில விநாடிகள் வரை துடிக்கும். வெட்டுப்படும் போது

என்ன நாடுகள்? - போட்டி முடிவு



ஆயிரம் பேர்களுக்கு மேல் இப் போட்டியில் கலந்து கொண்டனர். இதில் 900 பேர்களுக்கு மேல் சரியான விடையை அனுப்பியிருந்தார்கள். பரிசு பெற்றவர் களைத் தேர்ந்தெடுக்க குலுக்கல் முறையே கைகொடுத்தது.

ரூபாய் பதினைந்து பரிசு பெறுவோர் :

1. T.N. யசோதா, உதகை.
2. க.வ. கதிர்வேலன், கோனாபட்டு.
3. கே. முகம்மது ஜாவித் - 632 003.
4. கே. நாச்சிமுத்து, செட்டிபாளையம்.
5. வி. ஸ்ரீவித்யா, திருச்சி - 5.
6. எம். மரியஜான்காந்தி, விளாம்பட்டி போஸ்ட்.
7. வ. கார்த்திக், கருங்கல்பட்டி.
8. எஸ். அமீர்அலி, நாகூர்.
9. என். பெரியசாமி, பம்பாய் - 16.
10. எம். ரியாகல்லா, சென்னை - 17.

பரிசு பெற்றவர்களுக்குக் கோகுலம் வாசகர் சார்பில் பாராட்டுகள். கலந்து கொண்டவர்களுக்கு நன்றி.

← சரியான விடை :

புழு முன்பக்கம் நகர்ந்தபடி இருந்து, வெட்டு கீழ் பாகத்தில் விழுந்திருந்தால் அந்தப் பாகம் மட்டுமே மறுபடி வளரும். துண்டாகிப் பிரிந்த பாகம் போனது போனதுதான். அது வளராது. வெட்டு நடுப்பாகத்தில் விழுந்திருந்தாலும் இதே நிலைதான். வெட்டிப் பிரிந்த கீழ்ப்பகுதி வளராது. ஒரு பாகம் மட்டுமே வளரும். மண் புழுக்கள் விவசாயிகளின் நண்பனாயிற்றே! இதைத் துண்டிக்க நினைப்பதே பாவம்!

★ **ரயில் பாதைகளுக்கு இரு பக்கமும் போகும் டெலிபோன் கம்பிகளில் இருந்து 'ஙும்' என்று சில நேரங்களில் சத்தம் கேட்கிறதே! இது எப்படி ஏற்படுகிறது? டெலிபோனில் பேசுகிறவர்கள் இசைக்கும் சங்கீதமா இது? - லா. பிச்சைக்கண்ணு, சாத்தூர்.**

இல்லை. காற்று என்ற கலைஞனின் கைவண்ணம்தான் இந்த இசை. கம்பிகள் தொங்கலாக இருக்கும் போது காற்றானது அவைகளுக்கிடையே புகுந்து அதிர்வுகளை உருவாக்கி இந்த இசை ஓசையை எழுப்புகிறது. அசைவுக்கு ஏற்ப இது மாறுபடும். கம்பிகள் கெட்டியாக இழுத்துக் கட்டப்பட்டுள்ள நிலையிலும் கூட இதே காரணத்தால் காற்று இந்த ஓசையை எழுப்புகிறது. இந்த ஓசை காற்றின் வேகத்திற்கு ஏற்ப மாறுபட்டு இருக்கும்.

★ **சேலத்தில் நடந்த ஒரு கண்காட்சியில், மாஜிக்காரர் ஒருவர் ஒரு பெரிய ஐஸ் கட்டியைக் காட்டினார். பார்த்துக் கொண்டிருக்கும்போதே அது கரைந்து மறைந்து விட்டது! ஆனால் கரைந்த நீர் எதுவுமே காணவில்லை! இதற்கு உங்கள் அறிவியல் விளக்கம் என்ன? - வி. தமிழ் மணி, வேலம்பட்டி.**


நீர் உறைந்து ஐஸ் கட்டியாகிறது. இது கரைந்தால் மறுபடி நீராகும். ஆனால் நீர் இல்லாமலும் ஐஸ் கட்டி செய்ய முடியும். கார்பன்டைஆக்ஸைடு வாயுவை சில ரசாயன மாற்றங்களுக்கு உட்படுத்தினால் அதுவும் ஐஸ் கட்டியாக உறையும். ஆனால் இது காற்றில் கரையும் போது, நீராக உருகாது. வாயுவாகக் கரைந்து, காற்றில் கரைந்து விடும். மாஜிக்காரர் பயன்படுத்தியது இந்த கார்பன்-டை-ஆக்சைடு வாயு ஐஸ் கட்டியாகத்தான் இருக்க வேண்டும். இதை டிரை ஐஸ் DRY ICE என்பார்கள். தொடக்க காலத்தில் இதுதான் ஐஸ்கிரீம் செய்யப் பயன்பட்டது.

★ **குழந்தைகளுக்காக எழுதுபவர்களுக்குள் யாருக்காவது 'கலைமாமணி' விருது கிடைத்திருக்கிறதா? குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா அவர்களுக்கு இந்த விருது கிடைத்ததா? - மு. சம்பந்த மூர்த்தி, வேலூர்.**

வள்ளியப்பா அவர்களுக்குக் கலைமாமணி விருது கிடைக்கவில்லை. ஆனால் குழந்தைகளுக்காக எழுதிய கவிஞர் திருச்சி பாரதன், கப்பு ஆறுமுகம் அமரர் புத்தனேரி ரா. சுப்பிரமணியம் ஆகிய மூவரும் கலைமாமணி பட்டம் பெற்றவர்களே. திருச்சி பாரதன் சிறுவர்களுக்காக பல முழு நேர மேடை நாடகங்களைப் படைத்தவர். இந்த நாடகப் பணிக்காக இவருக்குக் கலைமாமணிப் பட்டம் கிடைத்தது. இந்த மாதம் மணிவிழா ஆண்டில் இவர் காலடி வைக்கிறார்.

★ **குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா அவர்கள் எத்தனை திரைப்படங்களுக்குப் பாடல்கள் எழுதியுள்ளார்? - து. சரஸ்வதி, வெம்பாக்கம்புதூர்.**


ஏ.பி. நாகராஜன் தயாரித்த ''வா ராஜா வா'' திரைப்படம். இதற்கு முன்பே நரக ஸ்டோடியோஸ் தயாரித்த போர்ட்டர் கந்தன் என்ற திரைப்படத்திலும் ஒரு பாடல் எழுதியிருக்கிறார். இது சாரணர்களுக்கான ஒரு சேர்ந்திசைப் பாடல்.




''கப்பல் டீசலில் போகுதா? பெட்ரோலில் போகுதா?''
''தண்ணீரிலே போகுது சார்!''
- எஸ். விஜயகுமார்.

ரூபாய் நோட்டுகளில் ஒரு வெள்ளைப் பகுதி இருப்பதைக் கவனித்திருப்பீர்கள். நோட்டை வெளிச்சத்தில் தூக்கிப் பிடித்துப் பார்த்தீர்களானால் அந்த வெள்ளைப் பகுதியில் அசோக சக்கரம் இருப்பதைக் காணலாம். வாட்டர் மார்க் என்று இதை அழைப்பார்கள்.

இந்த வாட்டர் மார்க்கின் கதை என்ன? இதை எதற்காகப் போடுகிறார்கள்?



வாட்டர் மார்க் என்றால் தெரியுமா?



இந்த வாட்டர் மார்க்கின் தாயகம் இத்தாலி. தாங்கள் தயாரித்த காகிதங்களின் தனித்தன்மை, தயாரிப்பின் தரம் இவற்றை உறுதி செய்து கொள்ளவும், போலிகளை அறியவும் பிரபலமான காகிதத் தயாரிப்புக் கம்பெனிகள் இந்த வாட்டர் மார்க்கைப் போட்டன. கிராஸ், சக்கரம், கம்பெனிப் பெயரின் முதல் எழுத்து, சின்னம் போன்றவையே இதில் போடப்பட்டன. மெல்லிய இரும்பு ஒயரில் இந்தச் சின்னங்கள் தயாரிக்கப்பட்டு பேப்பர் கூழ் காயுமுன் அதில் அழுத்தப்பட்டு காய விடப்பட்டன. ஒயர் அழுந்திய இடத்தில் பேப்பரின் ஈரம் ஈர்க்கப்பட்டு, அப்படியே உலர்ந்து, அந்தச் சின்னம் காகிதத்தில் பதிந்து விடும். ஒவ்வொரு பேப்பர் ரோலிலும், மடிக்கப்பட்ட பீஸ்களிலும் முதலில் இது இருக்கும். இது போலித் தயாரிப்பைக் கண்டுபிடித்துத் தவிர்க்க மக்களுக்குப் பெரிதும் பயன்பட்டது.

காகித கரென்சி அறிமுகமானதும் உரிய அரசாங்கத்தின் சின்னத்தை வாட்டர் மார்க்காகப் போடத் தொடங்கினர். கள்ள நோட்டடிப்பவர்களுக்கு இது பெரிய இடியாக இருந்தது. காகிதம், அளவு, அச்சடிப்பு ஆகிய எல்லாவற்றையும் போலியாகத் தயாரித்து விட முடியும். ஆனால், வாட்டர் மார்க்கைப் போடுவது என்பது அவ்வளவு எளிதல்ல. இருந்தாலும், கள்ள ரூபாய் நோட்டுத் தயாரிப்புகளில், நிபுணர்களையே மயக்கும் அளவுக்கு இன்று இந்த முறை வளர்ந்துள்ளது! ஆனாலும் கள்ள நோட்டு என்பதைக் கண்டறிய உதவும் முதல் தடயம் இந்த வாட்டர் மார்க்தான். கள்ள கரன்சி நோட்டு வழக்குகளில், 80%



வாழ்த்துகிறோம்! பாராட்டுகிறோம்!

✱ மதி ஒளி பரிசுப் பெறுகிறார்.

மத்திய அரசின் என்.சி.ஈ.ஆர்.டி. ஒவ்வொரு இந்திய மொழியிலும் வெளியாகும் சிறந்த சிறுவர் இலக்கியப் படைப்புகளுக்கு (கையெழுத்துப் பிரதிக்கும் கூட) இரண்டாண்டுகளுக்கு ஒரு முறை பரிசு வழங்கி வருகிறது. சாகித்ய அகாதமி பரிசுக்கு இணையான இப்பரிசு தமிழில் அண்மையில் செல்வி மதிஒளியின் படைப்பு ''இணைந்து பாடுவோம்'' பாடல் தொகுதியின் கையெழுத்துப் பிரதிக்குக் கிடைத்துள்ளது. இது சிறுவர்களுக்கான பாடல்கள் நிறைந்த புத்தகம். தேன் போல் இனிக்கும் பாடல்களுக்கு ஓவியமணி மணியம் செல்வன் கண்கவர் படங்களை வரைந்துள்ளார். ஓவியத்திற்கான பரிசு இவருக்கே கிடைத்துள்ளது.



✱ ம.செ.

சிறுவர் நூல், அதிலும் பாடல் தொகுதி ஒன்றுக்கு மணியம் செல்வன் ஓவியம் வரைந்துள்ளது இதுவே முதல் முறை. பாடல்களைப் பாடலாமா, இல்லை ஓவியங் களையே பார்த்துக் கொண்டிருக்கலாமா என்று சிறுவர்கள் திகைக்கப் போவது உறுதி. தக்க புத்தகம் ஒன்றிற்கு ஓவியப் பரிசையும், ஆசிரியருக்கான பரிசையும் தந்துள்ள என்.சி.ஈ.ஆர். டி யைப் பாராட்டலாம். பரிசு பெற்ற கவிஞரையும் ஓவியரையும் பாராட்டி வாழ்த்துகிறோம்.

வழக்குகள் 'வாட்டர் மார்க்'கின் உதவி கொண்டே அறியப்பட்டு, குற்றவாளிகளைக் கண்டறியும் நடவடிக்கைகள் தொடங்கப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

இன்று காகிதத் தயாரிப்பு நவீனமயமாக்கப்பட்டு எத்தனையோ புதிய முறைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. வாட்டர் மார்க் உருவங்கள் மிக அழகாக, துல்லியமாகத் தயாரிக்கப்படுகின்றன. கைகள் செய்த வேலையை இன்று சிலிண்டர்கள் செய்கின்றன. இருந்தபோதிலும், வாட்டர் மார்க்கைப் போடும் முறை பழைய அடிப்படையிலேயே செய்யப்படுகிறது.

கள்ள கரன்சி நோட்டுகளைப் போலவே, கள்ள தபால் தலைகளை அச் சிட்டு ஏமாற்றும் வழக்கமும் பரவி வருவதால், இதைத் தடுக்க இன்று தபால் தலைகளையும் வாட்டர் மார்க் இடப்பட்ட காகிதங்களிலேயே அச்சடிக்கிறார்கள். பிரபலமான மருந்துக் கம்பெனிகள் தாங்கள் அச்சடிக்கும் லேபிள்களை, வாட்டர் மார்க் போடப்பட்ட கடிதங்களில் அச்சடிக்கிறார்கள். போலி தயாரிப்புகளைக் கண்டுபிடிக்க இது பெரிதும் உதவுகிறது. கள்ளத் தயாரிப் பாளர்களுக்கு வாட்டர் மார்க் ஒரு பெரிய தடைக்கல் என்பதை யாரும் மறுக்க முடியாது. வருங்காலத்தில் இதில் இன்னும் பல மாற்றங்கள் வரவுள்ளன. -

தேடி வந்தவரின் இடுப்பில் அழுக்கு அப்பிய வேட்டி; சட்டை போடாத தோளில் ஒரு கந்தல் துண்டு; எண்ணெய் காணாமலும், தூசு படிந்தும் கலைந்து கிடந்த தலைமுடி - இத்தனையும் அவரை ஒரு பரம ஏழை என்று பறை சாற்றின.

அவரை அழைத்துக் கொண்டு வகுப்ப



பாதி மார்க்தானா?

றைக்கு வெளியே வந்த ஆசிரியர் வாசுதேவன், ''ஐயா யாரு? என்ன வேணும்?'' என்று பரிவோடு விசாரித்தார்.

''எட்டாங்கிளாஸ் படிக்கிற முருகானந்தத்தோட அப்பா நான். அடிக்கடி பள்ளிக்கூடத்துக்குப் போக மாட்டேன்னு அடம்புடிச்சிக்கிட்டு எங்களோட மல்லுக்கு நிக்கிறான். அதுதான் ஒங்ககிட்ட சொல்லி கண்டிக்கச் சொல்லணும்னு...''

''எதுக்கு அப்படிப் பண்ணுறான்?'' என்று விளங்காமல் வினவினார் ஆசிரியர்.

''அந்தப் புத்தகம் வாங்கணும்; இந்தப் புத்தகம் வாங்கணுமின்னு வாரத்துக்கு மூணு வாட்டி பணம் கேக்குறான். கொடுத்தா ஒழுங்கா ஸ்கூலுக்குப் போறான். இல்லேன்னா, பையை வச்சுட்டு ஊர் சுற்றப் போயிடுறான். இந்தா பாருங்கய்யா! வருஷ ஆரம்பத்துலே நீங்க கொடுத்ததாச் சொல்லி இந்த லிஸ்டைக் காண்பிச்சி, நோட்டுப் புத்தகங்கள் வாங்க நூத்தம்பது ரூபாய் ஒரே நாள்லே வாங்கிட்டு வந்தான். இன்னமும் புத்தகம், புத்தகமுன்னு அடிக்கடி என் உசிரை வாங்குறான். தினம், தினம் கூலி வேலைக்குப் போற நாங்க அவன் கேட்கும்போதெல்லாம் பணம் புரட்டிக் கொடுக்க முடியுமா?'' என்று அழாக்குறையாகக் கூறி முடித்து விட்டு, தன் இடுப்பில் செருகி வைத்திருந்த ஒரு கசங்கிய பழைய துண்டுத் தாளை எடுத்து நீட்டினார்.


அந்தக் காகிதத்தை வாங்கி மேலோட்டமாக நோட்டம் விட்ட ஆசிரியர், அப்படியே அயர்ந்து போய் நின்று

சீனி. விஜயராணி

விட்டார். 'இது என்ன அபத்தமான லிஸ்ட்!' என்று எண்ணியவராக மீண்டும் அதில் நன்றாகக் கவனம் செலுத்தினார்.


'ஆங்கிலப் புத்தகம் - 6.50; இங்லிஷ் புக் 7.00; கணிதப் புத்தகம் 8.50; மேத்ஸ் புக் 9.50; அறிவியல் நூல் 10.00...' என்று இப்படி ஒவ்வொரு புத்தகமும் ஆங்கிலத்திலும், தமிழிலுமாக திரும்பத் திரும்ப எழுதப்பட்டு, பட்டியல் நீண்டு கொண்டு போய், மொத்த ரூபாய் 150 என்று பொய்க் கணக்கைக் காட்டி நின்றது!

'படிக்காத தந்தை என்பதால் முருகானந்தம் இந்த அப்பாவித் தந்தையை எப்படியெல்லாம் ஏமாற்றியிருக்கிறான்!' என்று நினைத்த போது ஆசிரியரின் வயிறு எரிந்தது! முருகானந்தம் அடிக்கடி பிற்பகலில் வகுப்புக்குக் 'கட்' அடித்ததன் காரணம் இப்போதுதான் அவருக்குப் புரிய வந்தது. 'வீட்டில் ஏமாற்றிப் பணம் வாங்கிப் பகல் காட்சிகளுக்குப் போவான் போலிருக்கிறது' என்று யூகித்துக் கொண்ட ஆசிரியர்



சற்றுச் சிந்தனையில் ஆழ்ந்தார்.

படிப்பைப் பொறுத்தவரை முருகானந்தம் முன்னணி மாணவன்தான். ஆனால் அவனிடமும் இப்படி ஒரு குறை இருக்கிறது. தன் மகனைப் பற்றி ஆயிரமாயிரம் கற்பனைக் கனவுகளை எழுப்பி வைத்திருக்கும் அந்த அப்பாவித் தந்தையிடம் மகனது ஒழுக்கக் கேட்டைப் பெரிதுபடுத்திப் பேசினால், அவரது ஏழை மனம் இடிந்து, நொறுங்கி விடுமே என்று பயந்தார் ஆசிரியர். 'முருகானந்தத்தை அவனது பாதையிலேயே சென்று மடக்குவதுதான் சரி!' என்று தீர்மானித்தார்.



''ஐயா, நீங்க நெனைக்கிற மாதிரி உங்க பையன் கெட்டவன் இல்லே. ரொம்ப நல்லவன். படிப்பிலே படு கெட்டிக்காரன். அவன் பொய் சொல்லவே மாட்டான். நிஜமாவே அவனுக்கு ஒரு நோட்டு தேவைப்படுது. அதைத்தான் கேட்டிருக்கான். அஞ்சு ரூவாதானே? கொடுத்து அனுப்புங்க. இல்லாட்டி நான் தர்றேன். அவனை மறக்காமே பள்ளிக்கூடத்துக்கு அனுப்பி வைங்க. இன்னும் ரெண்டு நாள்லே அரைப் பரீட்சை ஆரம்பிக்கப் போகுது.''

ஆசிரியரின் ஆறுதல் வார்த்தைகள் அந்த அப்பாவித் தந்தைக்கு ஆனந்தம் அளித்தன. ''ஆகட்டுங்க'' என்று வணங்கி அகன்றார்.

முருகானந்தத்தைத் திருத்துவதற்கான திட்டத்தில் முழு மூச்சாக இறங்கினார் ஆசிரியர்.

அரையாண்டுத் தேர்வு முடிந்து விடுமுறைக்குப் பின் பள்ளி திறந்த முதல் நாள். மதிப்பீடு செய்யப்பட்ட விடைத்தாள்களை மாணவர்களுக்கு வழங்கிடும் நாள்.

வழக்கமாக ஒவ்வொரு பாடத்திலும் நான்கு அல்லது ஐந்தாவது இடத்தைப் பெறும் முருகானந்தம் இன்று இருபதாவது இடத்தில் போய் நிற்கிறானே!

'பாதிக்குப் பாதியா?' என்று பதறிய அவன், விடைத்தாள்களோடு ஆசிரியரை அணுகினான். அவனது வரவை ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்த ஆசிரியர், ஒன்றும் தெரியாதவரைப் போல, ''என்ன வேண்டும் முருகானந்தம்?'' என்று வினவினார்.

''எல்லாத்துக்கும் பாதிக்குப் பாதி தான் மார்க் போட்டிருக்கிறார்கள் சார்'' என்று முறையிட்டான் அவன்.

அவனது தாள்களை வாங்கிப் பார்வை இடுவது போலப் பாவனை செய்த ஆசிரியர், ''சரியாகத்தானே போட்டிருக்கிறார்கள்?'' என்று உறுதியான குரலில் கேட்டார்.

''எப்படி சார்? முழுக்க முழுக்கச் சரியான விடையுள்ள கேள்விகளுக்குக் கூடப் பாதி மார்க்தானே போட்டிருக்கிறார்கள்?'' என்று தைரியமாக வாதிட்டான் முருகானந்தம்.

''தம்பி! நீ கணக்குப் பரீட்சையில் கணக்குக் கேள்விகளுக்கு மட்டும் விடை எழுதியிருக்கியே; மேத்ஸ் என்ன ஆச்சு? சைன்ஸ் பேப்பருக்கான ஆன்சர்களைக் காணோம்; அறிவியலுக்கு மட்டுந்தானே எழுதியிருக்கே? இங்கிலீஷ் எழுதினவன் ஆங்கிலத்தை ஏன் எழுதாமே விட்டே?'' என்று வசமாகப் பிடித்தார் ஆசிரியர். அவனோ 'திருதிரு' வென்று விழித்தான்.

''என்னப்பா! ஒண்ணும் விளங்கலையா? இதப் பாரு, நீ வாங்கியிருக்கிற புத்தக லிஸ்டை!'' என்று கூறித் தன் பர்ஸில் இருந்த அந்தப் பழைய தாளை எடுத்துக் காண்பித்தார். மீண்டும் அவர், ''நான் கேட்டதுக்குப் பதிலைக் காணோமே! கணக்குப் புத்தகம், மேத்ஸ் புக் ரெண்டுக்கும் பணம் வாங்கிய நீ, அந்தப் பரீட்சையிலே தமிழ், ஆங்கிலம் ரெண்டு மீடியத்திலும் பதில் எழுதினாத் தானே கெட்டிக்காரன்? ரெண்டு புத்தகம் வாங்கிட்டு, பரீட்சையிலே ஒன்றிற்கு மட்டும் விடையெழுதினா பாதி மார்க்தானே போடணும்?'' என்று சாதுர்யமாகக் கேட்டார்!

பெற்றோரை ஏமாற்றிப் பணம் பறிக்கத் தான் கைப்பட எழுதிய அந்தப் பொய்ப் புத்தகப் பட்டியலைப் பார்த்ததும் அப்படியே கூனிக்குறுகி நின்றுவிட்டான் முருகானந்தம். தன் குற்றத்தை உணர்ந்ததால் அவனது விழிகள் இப்போது குளமாகி நின்றன.

''இதோ பார் முருகானந்தம், படிப்பில் வல்லவனா இருந்தா மட்டும் போதாது; பண்பாலே நல்லவனாவும் இருக்கணும். பெற்றோரையும் ஆசிரியரையும் ஏமாற்றுவது தெய்வத்தையே ஏமாற்றுவது மாதிரி!'' என்று மிகவும் உருக்கமாக எடுத்துரைத்தார் வாசுதேவன்.

''என்னை மன்னிச்சிடுங்க சார்! இனிமே இப்படித் தவறுகளைச் செய்ய மாட்டேன்'' உணர்ந்த உள்ளத்தின் உறுதி அவனது சொற்களிலே தொனித்தது!


''சந்தோஷம்; உன்னைத் திருத்தத்தான் இப்படி மதிப்பெண்களைப் பாதியாக்கிப் போட்டேன். மற்ற ஆசிரியர்களையும் பாதியாப் போட வச்சேன். போ; அம்பதுக்குத்தான் மார்க் போட்டிருக்கு. ஒவ்வொன்றையும் நூத்துக்கு மாத்திக்கோ'' என்று மிகவும் ஆதரவாகக் கூறினார் ஆசிரியர்!


கண்களைத் துடைத்துக் கொண்டவன் மனக் கறையையும் துடைத்துக் கொண்டு புதுப்பிறவி எடுத்தவனாக தனது இருக்கையை நோக்கி நடந்தான் முருகானந்தம்.

''ஆப்பக் கடையில் 'இடி' விழுந்தால் என்ன ஆகும்?''

''இடி ஆப்பக் கடையா மாறிடும்!''

– வலங்கைமான் நூர்தீன்





''பல்லவனுக்கு எத்தனை பல்?''

''பல் 'லெவன்'!''

– காசி. சீனிவாசன்,
பரங்கிப்பேட்டை.



சம்பளம்

சர்க்கஸில் குரங்குகள் செய்யும் வித்தைகளைக் கண்டு கைதட்டி மகிழ்ச்சி ஆரவாரம் செய்கிறோம். அதே சமயம் இந்தப் பிராணிக்கு எப்படி இவ்வளவு புத்திசாலித்தனம் வந்தது என வியப்பும் நமக்கு ஏற்படுகிறதல்லவா? தென்னாப்பிரிக்காவில் ஒரு குரங்கு இரயில்வேயில் ஒரு முழு நேரப் பணியாளராகப் பணியாற்றியிருக்கிறது என்றால் வியப்பாக இல்லை?

நூறு ஆண்டுகளுக்கு முன்பு நிகழ்ந்த அற்புதம் இது. 'ஜேம்ஸ் எட்வின் ஒயிட்' என்ற ஆங்கிலேயர் ரயில்வேயில் பாயின்ட்ஸ் மேனாகப் பணியாற்றி வந்தார். ரயில் வருவதற்கும் போவதற்கும் போக்குவரத்து சிக்னல் தருவது இவரது வேலை. ஆனால் துரதிர்ஷ்டவசமாக ஒரு விபத்தில் சிக்கி அவர் கால்களை இழந்து ஊனமாகி விட்டார். அதற்காக அவர் மனம் தளரவில்லை. தன் வளர்ப்புப் பிராணியான 'ஜாக்' என்ற குரங்கை அழைத்தார். எப்படியெல்லாம் லீவரை இழுத்து பாயின்ட் அடிப்

கந்தசாமி மளிகைக் கடையில் அத்தனைசாமான்களும் கலப்படமானவை. அது மட்டுமல்ல, அத்தனையும் யானை விலை, குதிரை விலை! கொள்ளை லாபம் அடிப்பதுதான் கந்தசாமியின் கொள்கை!

ஊரிலேயே அவன் பெரிய பணக்காரன். பெரிய ரவுடியும் கூட. அதனாலேயே அவனை எதிர்த்துக் கேட்க எல்லோரும் பயந்தனர். அந்த ஊரில் வேறு மளிகைக் கடையும் இல்லை. எனவே மக்களுக்கும் அவன் கடையை விட்டால் வேறு வழியும் இல்லை!

பலமுறை அவனைப் பற்றிப் பஞ்சாயத்தில் பலர் புகார் செய்தும் அவன் அதையெல்லாம் சட்டை செய்யவேயில்லை. அதனால் எல்லோரும் வயிறு எரிந்து அவனைத் திட்டினர். அவன் அதை லட்சியம் செய்யவில்லை.

அதனால் மக்கள் பட்ட துன்பத்திற்கு அளவேயில்லை. கலப்படத்தால் ஊர் மக்களின் உடல்நலம் மிகவும் பாதிக்கப்பட்டது! டாக்டர்களுக்கு நல்ல வேலை!

ஒருநாள் கந்தசாமி கடைக்கு இரண்டு வெளியூர்க்காரர்கள் வந்தனர். பார்ப்பதற்கு 'டிப்டாப்பாக' இருந்தனர்! அவர்களைப் பார்த்ததும் கந்தசாமி, ''இன்றைக்கு நல்ல வேட்டை'' என்று மனதுக்குள் எண்ணியவனாக, ''வாங்க சார்! வாங்க!'' என்று அவர்களை அன்புடன் வரவேற்றான். அந்த இரண்டு பேரும் கடையை ஒருமுறை நோட்டம் விட்டுவிட்டு, ''இந்தக் கடையில் சாமான்



களெல்லாம் சுத்தமாக இருக்குமா?'' என்று விசாரித்தார்கள்.

''சுத்தம்! 100% சுத்தம் சார்! நீங்க வேணும்னா வாங்கிப் பாருங்கோ!'' - கந்தசாமி ரொம்பவும் குழைந்தான்.

இருவரும் ஒரு நீள சாமான் லிஸ்டை எடுத்து கந்தசாமியிடம் நீட்டினர். கந்தசாமி அதைப் பார்த்து வாய்பிளந்தான்! சுமார் 300 ரூபாய்க்குக் குறையாத வியாபாரம்! உடனே அவன் கடைப் பையனை நோக்கி, ''டேய்! சார் லிஸ்ட் குடுத்திருக்காரு! எல்லா சாமான்களும் சரியா எடை போட்டு 'பேக்' பண்ணுங்க!'' என்று உத்தரவிட்டான். அவர்கள் இருவருக்கும் குளிர்பானம் வாங்கித் தந்து உபசரித்தான்.

சற்று நேரத்தில் அவர்கள் கேட்ட மளிகை சாமான்கள் ஒரு பெரிய அட்டைப் பெட்டியில் வந்தன. கந்தசாமி மொத்த சாமானுக்கான தொகையைக் கணக்கிட்டான். முன்னூற்றி முப்பது ரூபாய் வந்தது! ஆஹா! கொழுத்த வேட்டை!

அந்த வெளியூர்க்காரர்கள் சாமான்களைத் தம் வண்டியில் ஏ



உடனே வங்கியில் போட்டு வரும்படி, கடைப் பையனை அனுப்பினான்!

சிறிது நேரத்தில், வங்கிக்குப் போன பையன் வேகமாக, மூச்சிறைக்க ஓடி வந்தான்!

''அண்ணே! நாம மோசம் போயிட்டோம்! அந்தாளுங்க கொடுத்த ரூபாய் அத்தனையும் கள்ள நோட்டாம்! பேங்க்குல கண்டுபிடிச்சிட்டாங்க! உங்களைப் பிடிக்க, பின்னாலேயே போலீஸ் வருது!'' என்று ஓடியே போனான்.

கந்தசாமிக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. தன் தவறு அவனுக்கு இப்போது உறைக்க ஆரம்பித்தது!

கலப்பட சாமானுக்கு கள்ள நோட்டு! பாதிக்கப்பட்டவர்களின் சாபம் பலித்து விட்டது!

கடவுள் சரியான தண்டனைதான் கொடுத்திருக்கிறார்!

தெரு முனையில், போலீஸ் ஜீப் வரும் சப்தம் கேட்டது.

கந்தசாமி எழுந்து கொண்டான். இப்போது அவன் தன் தவறை உணர்ந்து கொண்டான்! இனி போலீஸ் ஸ்டேஷன், லாக்-அப், கோர்ட், சிறை தண்டனை... கடவுளே!

''இனி ஒருபோதும் கலப்படம் செய்ய மாட்டேன்!'' என்று கந்தசாமி உறுதி பூண்டான்! போலீஸ் ஜீப் வாசலில் வந்து நின்றது.

சைக்கிள் ஓட்டுவாய்

சைக்கிள் ஓட்டப் பழகித் தருவேன்
தம்பி ஓடி வா
பக்கம் பார்த்துச் சைக்கிள் ஓட்டப்
பழகிக் கொள்ளுவாய்



இடுப்பை வளைத்துக் கோணி
டாமல்
என்றும் ஓட்டுவாய்
எடுப்பாய் நிமிர்ந்து நேராய்ப் பார்த்து
துடிப்பாய் ஓட்டுவாய்

சைக்கிள் ஓட்டத் தெரிந்து கொண்டால்
சீக்கி ரத்திலே
திக்கெல் லாமும் சென்று திரும்பும்
திறமை காணலாம்


காட்டுத் தனமாய் வேக மாகக்
கண்ணை மூடியே
ஓட்டிச் சென்றால் அந்த வேகம்
உன்னைச் சாய்க்குமே

வேக மாகச் செல்வ தாலே
விபத்து நேரலாம்
தேகம் சிராய்த்து நடக்கும் மனிதர்
தெருவில் சாயலாம்

ஒழுங்கில் லாமல் செய்வ தெதுவும்
உயர்வ தில்லையே
ஒழுக்கம் வேண்டும் என்றும்
எதிலும்
உணர்ந்து கொள்ளடா.

– செல்ல கணபதி

எலி என் எதையும் கொரிக்கிறது?



ரேவதி

கொத்தனார் சிமெண்ட் கலவையோடு உள்ளே வந்தார்.

''அதோ, ஜன்னலுக்குக் கீழே, ஒரு ஓட்டை இருக்கே... அது வழியாத்தான் எலி வருது. அதை அடைச்சுட்டா போதும். வழி அடைபட்டுப் போகும்'' என்று எலி வங்கைக் காட்டினார் குடித்தனக்காரர்.

கொத்தனார் ஒரு சிறு செங்கல் துண்டை வைத்து அடைத்து, சிமெண்ட் கலவையால் வங்கைப் பூசி மூடினார்.

வங்குக்குள் இருந்த பெண் எலி சிரித்தது. ''ஏன் சிரிக்கறே?'' என்று கேட்டது ஆண் எலி.

''இந்த ஒரு வங்கை அடைச்சுட்டதால எல்லா வழியையும் அடைச்சுட்டதா இந்தக் குடித்தனக்காரருக்கு நினைப்பு. இந்த வீட்டுல நமக்கு மொத்தம் பதினெட்டு வங்கு இருக்குங்கற உண்மை அவருக்குத் தெரியாது. இந்த அறையிலேயே, புத்தக அலமாரியின் கீழ்த் தட்டில் ஒரு வழி இருப்பதை அவர் கண்டுபிடிக்கலையேன்னு நினைச்சேன். சிரிப்பு வந்தது.''

''நானும் எத்தனையோ வீடுகளில் குடியிருந்திருக்கேன். எலித் தொந்திரவை அனுபவிச்சிருக்கேன். ஆனா இந்த வீட்டு எலிகள் மாதிரி ராட்சசப் பல்லுள்ள எலிகளை நான் பார்த்ததே கிடையாது. இரும்புத் தண்ணிக் குழாயை, தேங்காயைத் துருவுவது போலத் துருவி வைச்சிருக்கே! பல்லுதானா, இல்லே பட்டறையில இருக்கிற இரும்பு அறுக்கிற வாளா!'' என்று கொத்தனாரிடம் வியந்து கொண்டார் குடித்தனக்காரர்.

''கேட்டியா... ஐயாவோட பல் உறுதிக்கு குடித்தனக்காரர் தரும் சான்றிதழை?'' என்று பீற்றிக் கொண்டது ஆண் எலி.

''அந்தத் தண்ணீர்க் குழாயைச் சுரண்டிப் போட்டதில் எனக்கும் பங்கு உண்டு. நம்ம பற்கள் தினமும் வளரக் கூடியவை. அந்த உறுத்தலைத் தாங்காமலேயே நாம்ப இப்படிக் கடினமான பொருள்களைக் கொரிக்க அலைகிறோம். பல்லின் அளவை ஒரே சீராக வைத்திருக்கக் கொரித்துக் கொரித்துத் தேய்த்துக் கொள்கிறோம். இந்த உண்மை இவர்களுக்கு எப்படித் தெரியும்?'' என்று இரக்கப்பட்டது பெண் எலி.

குறுகுறுவென்று சத்தம் கேட்டது. நான்கைந்து குட்டி எலிகள் ஓடி வந்தன.

''அம்மா, சமையலறையில் வாசனை மூக்கைத் துளைக்கிறது. வெங்காய பகோடா பண்ணுகிறார்கள் போலிருக்கு. அலுமினிய எண்ணெய் வடிதட்டில் போட்டு வைத்திருக்கிறார்கள்.''

''ஆமாம்மா. நான் போய் ஒன்றை எடுத்துக் கொண்டு வரட்டுமா?''

''இப்பப் போகாதீங்க. இன்னும் இருட்டட்டும். அப்புறமா போங்க. ஆசையை அடக்க முடியாம என்னமாவது பண்ணி உங்க அண்ணன்மார் ஐந்து பேரும் செத்துப் போன மாதிரி நீங்களும் அசட்டுத்தனமா என்னமாவது பண்ணி

உங்க முடிவைத் தேடிக்காதீங்க'' என்றது அம்மா எலி.

''மேல் வீட்டுல கோவிலுக்குப் போயிட்டு வந்து பிரசாதத் தட்டை பலகை மேல வைச்சிருந்தாங்க. நான் போய் ஒரு வாழைப் பழத்தைக் கொண்டு வந்து விட்டேன்'' என்றது ஒரு எலி.

''நான் பாதித் தேங்காய் மூடியை அங்கேயே கொரிச்சுத் தின்னுட்டேன். இன்னும் பாதி மூடி இருக்கு. அதையும் மூடித்தான் இருக்கு. வேணுமானால் யாராவது போய் மீதிப் பாதியைக் கொரிச்சுட்டு வாங்க'' என்றது அண்ணன் எலி.

''பின்பக்கத்து வீட்டுல, நாம குதிச்சு விளையாடும் பரண் மேல ஒரு தட்டுல ரெண்டு வெங்காய பஜ்ஜி வைச்சிருக்காங்கம்மா'' என்றது குட்டி எலி.

''ஜாக்கிரதை. அதுல ஆபத்து இருக்கும். எலி பாஷாணம் ஏதாவது கலந்து வைச்சிருப்பாங்க. நானோ அப்பாவோ வந்து ஒரு நுனி தின்னு பார்த்துச் சொன்னதுக்கு அப்புறம்தான் நீங்க அதைத் தின்கலாம்'' என்றது அம்மா எலி.

''அப்படியானால் இப்பவே வாம்மா'' என்று அடம்பிடித்தது குட்டி எலி.

குடும்பத்தினர் பின்தொடர, அம்மா எலி வங்கு வழியாகப் பின்பக்கத்து வீட்டுக்கு வந்து சேர்ந்தது. குட்டி எலி சொன்னது உண்மைதான். பரணில் இருட்டு மூலையில் ஒரு அலுமினியத் தட்டில் இரண்டு வெங்காய பஜ்ஜிகள் வைக்கப்பட்டு இருந்தன!

அம்மா மிகவும் கவனமாக அருகே சென்று முகர்ந்து பார்த்தது. பஜ்ஜி



வாசனையோடு கூட வேறு ஒரு நெடியும் கலந்து வந்ததை அது கண்டுபிடித்து விட்டது!

''இதுல நம்மைக் கொல்லக்கூடிய ஏதோ ஒரு புதுப் பொருள் கலந்திருக்கு. உங்க பெரியப்பா இப்படித்தான் ஒரு மசால் வடையைத் தின்று செத்தார். அப்போ அந்த மசால் வடையிலிருந்து இதே மாதிரி நெடிதான் அடித்தது. அதனால் இது வேண்டாம். எல்லோரும் உள்ளே போங்கள்'' என்று எச்சரித்து எல்லா எலிகளையும் விரட்டியது அம்மா எலி.

எல்லா எலிகளும் நடு வளைக்குள் திரண்டன.

''அம்மா.... பெரியம்மாவைக் காணோம்'' என்று குரல் கொடுத்தது ஒரு குட்டி எலி.

''தேடுங்கள். எங்கே இருக்கிறாள் என்று கண்டுபிடியுங்கள். பாவம் அவளுக்குக் கண் பார்வை வேறு சரியில்லை'' என்று உத்தரவிட்டது அப்பா எலி. எல்லா எலிகளும் மூலைக்கு ஒன்றாக விரைந்தன.

செய்தி கிடைத்தது. சயனைடு கலந்த வெங்காய பஜ்ஜியைத் தின்று விட்டு பெரியம்மா எலி தன் முடிவைத் தேடிக் கொண்டு விட்டது!


''அப்பாடி! ஒரு பெரிய எலி ஒழிந்தது. சயனைடு வெங்காய பஜ்ஜி நல்லா எலியை ஏமாற்றிப் பலிவாங்கி விட்டது'' என்று பெரிதாக மகிழ்ந்து கொண்டார் வீட்டுக்காரர்.

''அம்மா, பெரிய அக்கா குட்டி போட்டிருக்கு. பதினான்கு குட்டிகள்'' என்று ஓடி வந்து கூறியது குட்டி எலி.

''சின்னம்மாவும் குட்டி போட்டிருக்கா. பன்னிரெண்டு குட்டி'' என்றது இன்னொரு குட்டி எலி.

''எல்லோருமா சேர்ந்து புதுசா இன்னும் இரண்டு வளை தோண்டுங்க. குடும்பம் பெருகிக் கொண்டே போறது. இடம் போதாது. என்னவோ சிந்து வெளி நாகரீக காலத்துலேருந்தே நம்ம





கோடை

ஐயோ... அம்மா... வெய்யிலுங்கோ!
அனல்ப றக்கும் வெய்யிலுங்கோ!
தையும் தாண்டிப் போனதனால்
தாவி வந்த வெய்யிலுங்கோ!

சட்டை போட்டால் உடனுடனே
சலச வன்னு வேர்க்குதுங்கோ!
பெட்டிக் கடையில் மோருக்குப்
பெரிய கூட்டம் கூடுதுங்கோ!

பாங்காய் இருந்த தார்ச்சாலை
பாகாய் மாறிப் போனதுங்கோ!
ஆங்கோர் இடத்தில் கானல்நீர்
அழகாய்த் தெரியுது பாருங்கோ!

– மகுடேசுவரன்

மூதாதையருங்க மனிதர்களுக்கு அடங்காது தொந்திரவு கொடுத்து வீரம் குறையாம வாழ்ந்துக்கிட்டு வரோம். நம்ம காலத்துல அது குறையாம இருக்கணும்'' என்று பிள்ளையாரை வேண்டிக் கொண்டது அம்மா எலி.

அறிவியல் உண்மைகள் :

★ சிந்துவெளி நாகரீக காலத்தில் இருந்தே எலிகள் மனிதனுக்குத் தொல்லையாக இருந்து வருகின்றன!

★ எலிகள் கொறிக்கும் பாலூட்டி (RODENTS) வகுப்பைச் சேர்ந்தவை.

★ வெளிச்சத்தைக் கண்டால் கூசி ஒளியும். இருட்டில்தான் இதன் அரசாட்சி!

★ எலிகள் பார்வைக் குறைவு உள்ளவை.

★ உளிப்பற்கள் தினமும் வளரும். இந்த உறுத்தலைத் தீர்த்துக் கொள்ளவே கடினமான பொருள்களைக் கொறித்து பற்களைத் தேய்த்துக் கொள்கின்றன. இதன் காரணமாகவே உணவாகக் கொள்ளாதவைகளையும் வெறுமே கொறித்துப் போடும்.

★ அறிவு கூர்மை மிக்கவை. ஆபத்தான பொருள், புதிய பொருள்களை நினைவு வைத்துக் கொண்டு தின்னாது விலகிச் செல்லும்.

★ பிளேக் நோயைப் பரப்புவது எலிகளே. அறிவியல் வளர்ச்சியின் காரணமாக இந்த நோய் பரப்பும் எலிகள் அழிக்கப்பட்டு விட்டன. எனினும் பிளேக் நோயுள்ள கிருமிகளைக் கொண்ட எலிகள் இன்னும் பல நாடுகளிலும் காடுகளில் வசிக்கின்றன!

★ சராசரி வயது ஓர் ஆண்டு. பிறந்த நான்கு மாதங்களில் எலி இனப்பெருக்கம் செய்யத் தொடங்கி, ஒரு தடவைக்கு 14 குட்டிகள் வரை போடுகின்றன. ஒரு பெண் எலி சராசரி ஆறு முறை குட்டி போடும்.

★ வடதுருவம், மிக வறண்ட பாலைவனங்கள் தவிர எலி இல்லாத இடம் இல்லை.

★ பூமிக்கடியில் வளை தோண்ட இதன் உளிப்பற்கள் உதவுகின்றன. வளை தோண்டுவதில் இது சிறந்த கலைஞன்!

★ உலகில் மனிதன் உற்பத்தி செய்யும் உணவில் மூன்றில் ஒரு பாகம் எலிகளால் தின்று நாசப்படுத்தப்படுகின்றன.



பெரிய பிருந்தாவனம்!

தேர்வுகள் முடிந்து விடுமுறை தொடங்கி விட்டது. படி, படி என்று பெற்றோரின் நச்சரிப்பு இல்லை. மனம் போல் திரியலாம். கிரிக்கெட் ஆடலாம். உறவினர் வீட்டுக்குச் செல்லலாம். மனதில் அலை அலையாய் மகிழ்ச்சி பொங்க பல உல்லாசத் திட்டங்கள் தீட்டி சிந்திக்கத் தொடங்கி விட்டான் சதீஷ்!

ஆனால் சதீஷின் தம்பி கண்ணனும் தங்கை மீனாவும் சற்று வித்தியாசமானவர்கள். பொறுப்புணர்ச்சி மிக்கவர்கள்.

''இந்த விடுமுறையை எப்படிப் பயனுள்ள வகையில் கழிக்கலாம்?' என்று சிந்தித்த கண்ணனுக்கு ஓர் அருமையான யோசனை தோன்றியது! மண்வெட்டியை எடுத்துக் கொண்டு தங்கை மீனாவையும் அழைத்துக் கொண்டு தோட்டத்திற்குச் சென்று விட்டான்.

'இந்த விடுமுறையில் வெறிச் சோடிக் கிடக்கும் வீட்டின் தோட்டப் பகுதியை வண்ண வண்ண மலர்கள் பூக்கும் நந்தவனமாக, வீட்டிற்குத் தேவையான காய்கறிகளை விளை வித்துத் தரும் இடமாக மாற்றி விட வேண்டும்' என்பதுதான் கண்ணனின் திட்டமாக இருந்தது.

இதைப் போன்ற முயற்சிகளிலெல்லாம் சற்றும் ஈடுபாடு இல்லாதவன் சதீஷ். விடுமுறை நாட்களில் கிரிக்கெட் மட்டையைத் தோளில் வைத்துக் கொண்டு அவன் நண்பன் வசந்தனைத் தேடிச் சென்று விடுவான். அவனைத் தேடிச் சாப்பாடு போடுவதற்கே மிகுந்த சிரமப்படுவாள் அம்மா.

''அம்மா நாங்கள் தோட்டத்தில் போட்ட விதையெல்லாம் எப்படி அழகாக முளைவிட்டு வளர்ந்திருக்கிறது பாருங்கள்'' என்று கண்ணனும் மீனாவும் காட்டிய போது அம்மாவுக்கு மிகுந்த பெருமையாய் இருந்தது. ஒரு பக்கம் காய்கறிச் செடிகளும் இன்னொரு பக்கம் பூச் செடிகளும் போட்டி போட்டுக் கொண்டு வளர்ந்து கொண்டிருந்தன.

தானுண்டு, தன் கிரிக்கெட் மட்டையுண்டு என்று பொழுதுபோக்கிக் கொண்டிருந்த சதீஷ் கூட வீட்டுத் தோட்டத்தில் ஏற்பட்டிருந்த மாறுதலைப் பார்த்து பிரமித்துப் போனான். கண்ணன் மீது அவனுக்குச் சற்றுப் பொறாமையாய்க் கூட இருந்தது!

அப்பாவிடம் நச்சரித்து வாங்கிய ரோஜாச் செடிகளும், மல்லிகைச் செடிகளும் தோட்டத்தில் பூத்துக் குலுங்கின.

கண்ணன் ஆர்வத்தோடு வளர்ந்த காய்கறிச் செடிகள் பிஞ்சு விடத் தொடங்கியிருந்தன.

பாத்தி கட்டி நீர் பாய்ச்சுவது, கடைக்குச் சென்று உரம் வாங்கி வருவது, களை எடுப்பது மண்ணைக் கிளறி விடுவது இவற்றிலேயே முழு நேரமும் செலவாகியது கண்ணனுக்கும் மீனாவுக்கும்.



ஒருமுறை விவசாயத் துறையில் அதிகாரியாகப் பணிபுரியும் அப்பாவின் நண்பர் பரந்தாமன் வீட்டிற்கு வந்திருந்த போது, தோட்ட வளர்ப்பில் கண்ணன் காட்டும் ஆர்வத்தையும், அவன் செய்திருக்கும் புதுமுயற்சிகளையும் பாராட்டி, அடுத்த மாதம் நடக்க இருக்கும் மலர்க் கண்காட்சியில் சப் ஜூனியர் அளவில் மாணவர்களுக்கான போட்டிகள் இருக்கிறதென்றும், அதில் கலந்து கொள்ளும் முறைகள் பற்றியும் சொல்லி விட்டுப் போனார். அவர் கொடுத்த பாராட்டும், போட்டி பற்றித் தெரிவித்த தகவல்களும் கண்ணனின் மனதில் கிளர்ச்சியை உண்டுபண்ணின. இன்னும் முனைப்பானான்.

''அம்மா... அம்மா... ரோஜாச் செடிக்கும் டில்லி கனகாம்பரத்திற்கும் ஆட்டுச் சாணத்தை எருவாக வைத்தால் இன்னும் பெரிதாக, அழகாக நிறையப் பூக்குமாம். எப்படியாவது ஆட்டுச் சாணத்திற்கு ஏற்பாடு பண்ணுங்கம்மா... ப்ளீஸ்...'' - கெஞ்சினான் கண்ணன்.

''ஆட்டுச் சாணமா! இந்த நகரத்திலெ அதுக்கு எங்கடா போறது? வேணுமானா கிராமத்துல இருக்கிற உங்க அத்தை வீட்டுக்குப் போ. அவர்களிடம் சொன்னால் ஏற்பாடு செய்து தருவார்கள்'' என்று அம்மா சொல்லவே மீனாவையும் அழைத்துக் கொண்டு மறுநாளே புறப்படத் தீர்மானித்து விட்டான் கண்ணன்.

அத்தை வீடு சென்று திரும்பிய கண்ணனுக்கும் மீனாவுக்கும் வீட்டுத் தோட்டத்தைப் பார்த்ததும் பேரதிர்ச்சியாய் இருந்தது!

செடிகளெல்லாம் கிளை ஒடிந்து தொங்கிக் கொண்டிருந்தன. சில செடிகள் காலடிபட்டு நசுங்கியிருந்தன. ஆத்திரம் ஆத்திரமாய் வந்தது கண்ணனுக்கு. இயற்கையின் அழகுப் புன்னகையை இப்படி இரக்கமில்லாமல் நசுக்கிய அரக்கன் யார்?

ஆவேசமாக அம்மாவிடம் ஓடினான். ''அம்மா... தோட்டத்துச் செடிகளையெல்லாம் இப்படிப் பாழ்படுத்தியது யார்?''

அப்போதுதான் தோட்டத்தையே கவனித்தாள் அம்மா.

''வழக்கமாக விளையாடும் இடத்தில் ஏதோ மேட்ச் நடக்கிறதென்று, சதீஷ்தான் அவனது நண்பனுடன் இங்கே கிரிக்கெட் விளையாடிக் கொண்டிருந்தான்'' என்று அம்மா சொல்லிக் கொண்டிருந்தபோதே சதீஷ் அங்கு வந்து நின்றான்.

''அண்ணா கிரிக்கெட் விளையாடி இப்படி அருமையான தோட்டத்தை நாசப்படுத்தியிருக்கியே? உனக்கு ஏதாச்கம் இருக்கா?'' சற்று சூடாகவே கேட்டான் கண்ணன்.


''ஆமா, பெரிய மைசூர் பிருந்தாவனம் பாரு. போடா. அஞ்சு ரூபா பூ பூக்க அம்பது ரூபா செலவு பண்ணியிருக்கே. இதுக்குப் போயி பெரிசா அலட்டிக்கிறே!'' அலட்சியமாய்ப் பேசினான் சதீஷ்.

''ஒவ்வொருவனுக்கும் அவன் வைத்து வளர்க்கிற ஒரே ஒரு ரோஜாச் செடி கூட பிருந்தாவனம்தான். நம்முடைய உழைப்பால, நாமே வளர்த்து பயன்படுத்துறதுல ஒரு தனி மகிழ்ச்சியே இருக்கு. அது தெரியாம போசதீயே?'' என்றாள் மீனா.

''பயனே இல்லாம காலத்தை வீணடிக்கிற அண்ணனுக்கு எங்கே இதெல்லாம் விளங்கப் போவுது மீனா? அதையெல்லாம் உழைப்பை மதிக்கறவங்ககிட்டே சொல்லணும்'' என்றான் கண்ணன்.

''சரி, சரி, போங்க. தோட்டத்தை மறுபடி சீர்திருத்திக்கலாம்'' என்று சமாதானப்படுத்தினாள் அம்மா.

முதலில் மலைப்பாக இருந்தாலும் கண்ணன் விடாப்பிடியாக மீண்டும் முனைந்து தோட்டத்தைச் சீராக்கினான்.



அன்றுதான் மலர்க் கண்காட்சியின் நிறைவு நாள் விழா!

மலர்க் கண்காட்சியில் அணிவகுத்து நின்ற பூச்செடி வரிசையிலும், காய்கறிச் செடிகள் வரிசையிலும் ''கண்ணன், மீனா'' என்று பெயர் கட்டித் தொங்க விடப்பட்டிருந்த ஜாடிகள் எல்லோரது கவனத்தையும் ஈர்த்தன. போட்டிக் கென்று அவர்கள் அனுப்பி வைத்த ஜாடி கள்தான் அவை!

''இப்போது மலர்க் கண்காட்சிக்கு வந்த ஆபூர்வ அழகான செடி வகை களுக்கான பரிசு முடிவுகள் அறிவிக்கப் படும்'' ஒலிபெருக்கியில் வந்த அறிவிப் பைக் கேட்டதும் சற்று நிமிர்ந்து உட் கார்ந்து கொண்டார்கள் கண்ணனும் மீனாவும். விழாவுக்கு அவர்களது பெற் றோரும், சதீஷும் கூட வந்திருந் தார்கள்.

''அழகான ரோஜாச் செடிக்கான முதல் பரிசு 'கண்ணன் மீனா' பெயர் கொண்ட ஜாடிக்கு. அதே போல் ஜாடியி லேயே பறங்கிக்காய் செடி வளர்த்து காய்காய்க்க வைத்த அவர்களுக்கே காய்கறி வளர்ப்புப் பிரிவிலும் முதல் பரிசு கிடைத்திருக்கிறது!''

அறிவிப்பாளர் சொன்னதும், அனை வரும் கரவொலி எழுப்ப, பரிசைப் பெற்று வந்தார்கள் கண்ணனும் மீனா வும்.

அவர்களுடைய தோட்ட வளர்ப் பை ஏளனப்படுத்திப் பேசி வந்த சதீ ஷுக்கே கூட அது பெருமையாய் இருந் தது.

''உழைப்பே உயர்வு தரும் என் பதை இன்று நீங்கள் நிரூபித்துக் காட்டிட்டீங்க. உங்க பணியில் இனி நானும் பங்கெடுத்துக் கொள்வேன்'' என்று சதீஷ் சொன்ன போது இரட் டிப்புச் சந்தோஷமாயிருந்தது கண்ண னுக்கும் மீனாவுக்கும்!

– மூ. நடராசன்.

பார்! பார்!



குருவி கட்டும் கூடு பார்!
குவிந்திருக்கும் குப்பை பார்!
உருவி வந்த வைக்கோலில்
உருவாகும் வீடு பார்!

எறும்பு போகும் பாதை பார்!
ஏறி, இறங்கும் வேகம் பார்!
துரும்பு போலச் சிறிதெனினும்
துவண்டிடாத தீரம் பார்!

பட்டு, பட்டுப் பூச்சி பார்!
படபடக்கும் சீற்றம் பார்!
மொட்டு தேடி, தேனெடுத்து
மூடி வைக்கும் நேர்த்தி பார்!

குருவி, பூச்சி, எறும்பிடம்
குடியிருக்கும் திறமை பார்!
புரிந்து கொண்டு நீ இனி
புவியில் மேன்மை எய்தப் பார்!

– ஜக்கு நாதன்

செக்கோஸ்லோவாக்யா கதை



பல ஆண்டுகளுக்கு முன் செக்கோஸ்லோவாக்கியா நாட்டில் பீட்டர் என்று ஒரு பையன். அவனது பணக்கார அப்பா காலமான போது மாற்றாந்தாய் எல்லா சொத்துக்கும் அதிபதியாகி, ''உனக்கு ஒனறும் இல்லை போ'' என்று பீட்டரை வீட்டை விட்டுத் துரத்தி விட்டாள்.

''நான் எங்கே

சாத்தானின் தம்பி!

போவேன்!'' என்று அலறினான் பீட்டர்.

''எங்கேயாவது தொலை! சாத்தான் கிட்டே போ!'' என்று ஏசினாள் சின்னம்மா.

'சாத்தான் கிட்டே போ' என்பது ஒரு திட்டு. சாபம் போல.

அப்பாவின் நிலம், வீடு, பணம், பண்டம் எதுவும் இல்லாமல் பீட்டர் வழிநடந்தான். 'உடலிலே வலு இருக்கிறது. மனத்திலே தைரியம் இருக்கிறது. உழைப்புக்கு அஞ்சவில்லை. எப்படியா

தமிழில்:
தம்பி சீனிவாசன்

வது பிழைத்துக் கொள்ளலாம்' என்று எண்ணி வழிநடந்தான்.

அடுத்த ஊருக்குப் போனான். ஒரு பெரிய பண்ணையார் வீட்டு வாசலில் நின்றான். பண்ணை எசமான் எதோ நின்றபடி இவனைப் பார்த்தார்.

''ஆண்டவன் துணை!'' என்று பீட்டர் அவரைக் கும்பிட்டான். ''என்னடா வேண்டும்?'' என்று அவர் உறுமியதும், ''நான் வேலை தேடி வந்துள்ளேன் ஐயா. எனக்குப் பண்ணை வேலையெல்லாம் தெரியும். ஏதாவது வேலை போட்டுத் தாருங்கள்'' என்று பணிவாகக் கேட்டார் பீட்டர்.

''வேலை செய்வானாமே இவன்! இப்படி நன்றாக உடை உடுத்தியிருக்கிறாயே! என்ன வேலை செய்வாய்? போடா போ. சாத்தான்கிட்டே போ!'' என்று சீறினார் அந்தப் பண்ணையார்.

பீட்டர் மேலும் நடந்தான். மெல்ல நடந்து அடுத்த ஊர் போனான். அந்த ஊர் மணியக்காரர் வீட்டுக் கதவைத் தட்டினான். மணியக்காரர் மனைவி இளகிய மனம் கொண்டவள். அவள் சொன்னாள் : ''ஐயா, நண்பர்களோடு சீட்டாடுகிறார். நான் போய் உனக்கு வேலை ஏதாவது கிடைக்குமா என்று கேட்கிறேன். இங்கேயே இரு பையா!'' என்று உள்ளே போனாள்.

கதவு திறந்தே இருந்ததால் பேச்சுக் குரல் கேட்டது.

உள்ளே எவரிடமோ அந்த வீட்டு அம்மாள் மெல்லப் பேசினாள். வந்த பதில் கரகரத்த குரலில் உரக்கக் கேட்டது : ''நான் வேலையாக இருக்கும் போது தொந்தரவு செய்யாதே என்று எத்தனை முறை சொல்வது? அந்தத் தடியனை சாத்தானிடம் போகச் சொல்லு!''

மனச் சுமையுடன் பீட்டர் அவ்விடத்தை விட்டு அகன்றான். மணியக்காரர் மனைவி வரும் வரை காத்திருக்கவில்லை.

காட்டு வழியிலே போய் ஒரு மரத்தடியிலிருந்த கல்லின் மேலே உட்கார்ந்தான். கன்னத்திலே கை ஊன்றியபடி யோசித்தான்.

இத்தனை பெரிய உலகத்தில் ஒரு போக்கிடம் இல்லையே! என்று ஏங்கினான்.

அழுகை வந்தது. அவன் என்ன சின்னக் குழந்தையா அழுவதற்கு? அழுகையை அடக்கிக் கொண்டான். எல்லோரும் சாத்தான்கிட்டே போ என்கிறார்களே! சாத்தான் எங்கே இருக்கிறான் என்று தெரிந்தாலாவது அங்கே போகலாம்.



அப்போது வெகு நேர்த்தியாய் உடையணிந்த ஒருவன் அந்த வழியே வந்தான்.

பீட்டர் உடனே தன் தொப்பியை எடுத்து வணக்கம் சொல்லி, ''ஆண்டவன் அருள் இருக்கட்டும்!'' என்றான்.

"ஏன் பையா சோர்வாக இருக்கிறாய்?" என்று கேட்டான் அவன்.

"ஏனா? நான் வேலை கேட்கிறேன். என்னை எல்லாரும் எள்ளி நகைத்து, சாத்தான்கிட்டே போ என்று சபிக்கிறார்கள். சாத்தான் இருக்கும் இடம் தெரிந்தால் நான் போகத் தயார். சாத்தான்



ழுவா களை விட நல்லவராகத்தான் இருப்பார்" என்றான் பீட்டர்.

புதிய மனிதர் புன்சிரிப்புடன், "என்னது? சாத்தானிடம் உனக்குப் பயம் இல்லையா? சாத்தானை நேருக்கு நேர் பார்த்தால் கூட பயப்பட மாட்டாயா?" என்று கேட்டார்.

"மாட்டேன். சாத்தான் என்ன என் சின்னம்மாவை விட மோசமாவா இருப்பார்? பக்கத்து ஊர் பண்ணையாரை விட மோசமாவா இருப்பார்? மணியக்காரரை விட மோசமா? அப்படி இருக்க மாட்டார் என்றே நினைக்கிறேன்" என்றான் பீட்டர்.

திடீரென்று அந்த மனிதன் முழுவதும் நிறம் மாறி "இப்போ பார் என்னை. நான்தான் சாத்தான்!" என்றார்.

பீட்டர் சற்றும் கலங்காமல் மேலும் கீழும் பார்த்தபடி, "நீங்கதானா அது?" என்று கேட்டான்.

"ஆமாம். நீ பயம் இல்லாத சிறுவனாக இருக்கிறாய். என்னிடம் வேலைக்கு வா. கறுகறுப்பான உன்னை எனக்குப் பிடித்திருக்கிறது. வேலை ஒன்றும் கடினம் இல்லை. சரியா?"

"சரி. நான் உங்களிடம் வேலை செய்கிறேன்."

"ரொம்ப சரி. உனக்கு ஏழு வருஷம் வேலை தருகிறேன். அதற்கு அப்புறம் உனக்கு விடுதலை. அதோடு நல்ல வெகுமதியும் தருவேன். சரியா?"

"சரி" என்று பீட்டர் சொன்னதும் இருவரும் கைகுலுக்கிக் கொண்டார்கள். வாய்ப் பேச்சு ஒப்பந்தம் உறுதியாயிற்று.

பீட்டரின் தோளிலே சாத்தான் கை வைத்ததும் கண்மூடிக் கண் திறக்கும் நேரத்தில் நரகத்திற்குள் இருந்தான் பீட்டர்.

அவனுக்கு தோல் அங்கி ஒன்றைக் கொடுத்து, கொதிநீர்த் தொட்டி இருந்த அறைக்கு சாத்தான் அழைத்துப் போனான். அங்கே மூன்று ராட்சத அடுப்புகளில் பெரிய பெரிய அண்டாக்கள் இருந்தன.

"இதுதான் உன் வேலை. இந்த அண்டாக்கள் எப்போதும் கொதித்துக் கொண்டே இருக்க வேண்டும். முதல் அடுப்பில் எப்போதும் நான்கு விறகுக் கட்டை இருக்க வேண்டும். இரண்டாவது அடுப்பிலே எட்டுக் கட்டை, மூன்றாவதில் பன்னிரண்டு கட்டை என்று எரிய எரியப் போட்டுக் கொண்டே இருக்க வேண்டும். அண்டாக்களின்

உள்ளே என்ன இருக்கிறது என்று மட்டும் எட்டிப் பார்த்து விடக் கூடாது. இது மிக மிக முக்கியம். நினைவிருக்குமா?''

''நினைவிருக்கும்'' என்று பீட்டர் மகிழ்ச்சியுடன் தன் வேலையைப் பார்க்கலானான்.

நாட்கள் நகர்ந்தன. பீட்டருக்குத் தன் வேலை பிடித்திருந்தது. சுவர்க்கத்திலிருப்பது போல் மகிழ்ச்சியாக இருந்தான். நல்ல சாப்பாடு. எவருமே அதட்டிப் பேசவில்லை. அவன் கீழே வேலை செய்ய குட்டிச்சாத்தான்கள் இருந்தனர். அவையும் நட்போடு இருந்தன. மூன்று உலைகளிலும் சீரான அளவு விறகுக் கட்டைகள் இருக்கும்படி உஷாராக இருந்தான்.

சாத்தானுக்குப் பீட்டரின் மேல் நல்ல நம்பிக்கை ஏற்பட்டது.

எத்தனை நாள் ஆயிற்று என்பது தெரியாமல் பொழுது கழிந்தது. திடீரென்று ஒருநாள் பீட்டருக்கு வீட்டு நினைவு வந்தது. தனது கிராமத்தில் பசும்புல் தரைகளிலும் காட்டு வழியிலும் நடந்து போக வேண்டும் போல ஆசையாக இருந்தது.

''இன்னும் எத்தனை நாள் இருக்கிறது எனது ஏழு வருஷம் முடிய?'' என்று சாத்தானைக் கேட்டான் பீட்டர்.

''நாளையோடு உனது ஒப்பந்தம் முடிவு பெறுகிறது!'' என்று உற்சாகமாகச் சொன்னான் சாத்தான்.


அடுத்த நாள் பீட்டர் அடுப்புகளுக்குப் புதிய விறகுகளைத் திணித்துக் கொண்டிருந்த போது சாத்தான் அங்கே வந்தான். ''பீட்டர்! உனக்கு விடுதலை! நீ இத்தனை நாள் எனக்கு திருப்தியாக நன்றாக வேலை செய்தாய். உனக்கு வெகுமதி தருகிறேன். பணம் என்று கொடுத்தால் அது தூக்கிச் செல்ல ஒரு பளுவாக இருக்கும். அதற்குப் பதில் ஒரு மந்திரப் பையைத் தருகிறேன். எப்போது வேண்டுமானாலும் நீ அதைத் திறந்து, ''பையே பையே பணம் போடு'' என்று சொன்னால் போதும். பையிலே தேவையான பணம் சேர்ந்து வரும். போய் வா பீட்டர். உன்னை எனக்கு மிகவும் பிடித்து விட்டது. ஒரு விஷயம் நினைவிருக்கட்டும். உன் உலகத்துக்கு நீ போனதும் உனக்கு நல்ல வரவேற்பு இராது. நீதான் சாத்தான் என்று எல்லாரும் உன்னிடம் பயப்படுவார்கள். நீ அப்படி இருக்கிறாய். குளித்து ஏழு வருஷமாகிறது. கை கால் நகத்தையோ தலைமுடியையோ வெட்டிக் கொள்ளவில்லையே நீ?''

''ஆமாம். ஆமாம். நான் இங்கு வந்த பிறகு குளிக்கவே மறந்து விட்டேன். முடிவெட்டிக் கொள்ள வேண்டும்'' என்றான் பீட்டர்.



''ஒருமுறை குளித்தால் போதுமா? உன் உடலின் கறுப்பு நிறம் போக தண்ணீர் மட்டும் போதாது. என்ன தேவை என்பதை இப்போது சொல்ல மாட்டேன். நீ பாட்டுக்கு உன் உலகத்துக்குப் போ. யாராவது உன்னைப் பார்த்து, யார் என்று கேட்டால், என்ன சொல்ல வேண்டும் தெரியுமா? 'நான் சாத் தானின் தம்பி' என்று அடித்துப் பேசு! என் உதவி வேண்டும் என்றால் கூப் பிடு!'' என்றான் சாத்தான்.

குட்டிச் சாத்தான்களுக்கெல்லாம் நன்றி சொல்லி விட்டுப் பீட்டர் புறப்பட்டான். ஒரு நொடியில் பயணம் செய்து ஏழு வருடத்திற்கு முன் எந்தக் காட்டில் அவன் முதலில் சாத்தானைச் சந்தித்தானோ அந்த இடத்திலேயே தான் இருக்கக் கண்டான்.






''எங்க கிளம்பிட்டே?''

''என் பையனை படகு கடையில் வேலைக்கு சேக்க போறேன்.''

- வி. பிரதீப்.



''4 பந்துல 24-ரன் எடுத்திருக்கேன்.... உன்னால முடியுமா...?''

''ஒரே பந்துலயே நான் 50-ரன் கூட எடுத்திருக்கேன்!''

- சீர்காழி வி. ரேவதி.



''உப்பில்லா பண்டம், குப்பையிலே...!''

''உப்புள்ள பண்டம்?''

''தொப்பையிலே!''

- எஸ். தீபன் சக்கரவர்த்தி.

அருகே இருந்த கிராமத்துக்குச் சென்றான்.

தெருவில் விளையாடிக் கொண்டிருந்த சிறுவர் சிறுமியர் பீட்டரைப் பார்த்ததும் அலறி அடித்துக் கொண்டு ஓடினர்! ''சாத்தான் வருகிறது! சாத்தான் வருகிறது!'' என்று கூச்சலிட்டார்கள்.

வீட்டுப் பெரியவர்கள் எட்டிப் பார்த்து விட்டு அவர்களும் பயந்து போய் உள்ளே திரும்பி வீட்டுக் கதவை அடைத்துக் கொண்டார்கள்.

''என்னடா இது!'' என்று பீட்டர் மேலும் மேலும் நடந்தான். ஊர் எல்லையில் ஒரு சர்பத் கடை. அதன் உரிமையாளர் தன் மனைவியுடன் வெளியே நின்று காற்று வாங்கிக் கொண்டிருந்த போது, பீட்டர் அவர்கள் அருகே சென்றான்.

உயரமும் பருமனும் கொண்ட பீட்டர் அருகே வந்ததும் அவனது நிறத்தையும் தலைமுடியையும் பார்த்து அவர்கள் பீதி அடைந்து அலறினர். பீட்டருக்குச் சிரிப்பு வந்தது. அவர்களைத் தாண்டி நடந்து, குடிப்பதற்கு ஏதாவது கிடைக்குமா என்று பார்க்கக் கடைக்கு உள்ளே சென்றான் பீட்டர். ''எனக்குக் குடிக்க ஏதாவது தாருங்கள்'' என்றான்.

நடுநடுங்கியபடி இருந்த உரிமையாளர் அருகே வந்தார். அவர் மனைவி பயத்துடன் உள்ளே ஒதுங்கினாள். நடுங்கும் கரங்களில் கடைக்காரர் ஒரு பெரிய குவளை சர்பத் எடுத்து வந்தார். ஆனால் அதைத் தானே பீட்டர் முன் கொண்டு வைக்கப் பயம்!

''சின்னப் பையா!'' என்று தன் கடைப் பையனை அழைத்து, ''உள்ளே ஒரு புது ஐயா வந்திருக்கிறார். அவரிடம் இந்த சர்பத்தைக் கொடு'' என்று கொடுத்தார் கடைக்காரர்.

கடைப் பையன் உள்ளே போனானோ இல்லையோ, பீட்டரைப் பார்த்து பயந்து அலறி விட்டான். கைகள் நடுங்கின.

பீட்டர் அன்புடன் பேசினான் : ''தம்பி பயப்படாதே. உனக்கு ஒரு கெடுதியும் செய்ய மாட்டேன். நான் சாத்தான் இல்லை. அவன் தம்பி'' என்றான்.

பீட்டர் சர்பத்தைக் குடித்தான். ''பேஷ்! ரொம்ப நல்ல சர்பத். நீ யாரப்பா?'' என்று விசாரித்தான்.

''நான் ஓர் அனாதை!'' என்றான் சின்னப் பையன்.

''நானும்தான். ஆனால் இங்கே உன்னைச் சரியாக நடத்தவில்லை போலிருக்கிறதே?'' என்றான் பீட்டர்.

சின்னப் பையன் பிறகு தைரியமாக நிமிர்ந்து பார்த்து, பீட்டருக்குத் தன் கதையைச் சொன்னான். பீட்டருக்கு உருக்கமாக இருந்தது. தன்னைப் போலவே கஷ்டப்படும் சிறுவன் இவன் என்று அனுதாபமாகப் பார்த்தான். தனது மந்திரப் பையைத் திறந்து, நிறையக் காசுகளை வரவழைத்து பையன் தொப்பியை நிரப்பிக் கொடுத்தான்.

காசைக் கண்டதும் கடைக்காரனின் மனம் மாறி விட்டது. தானே வந்து பீட்டரை உபசாரம் செய்தான். பீட்டர் அங்கேயே தங்கினான்.

இரவு தூங்கிக் கொண்டிருந்த போது யாரோ தோளைத் தொட்டு எழுப்ப, விழித்துக் கொண்டான். எதிரே நின்ற சாத்தான், ''உடனே போ! மாட்டுக் கொட்டிலில் இந்தக் கடைக்காரன் சின்னப் பையனைச் சாக அடிக்கிறார்.. பணத்துக்காக'' என்றான்.


பீட்டர் விரைந்தான். மாட்டுக் கொட்டிலைத் திறந்து பார்த்தால், அங்கே தூங்கிக் கொண்டிருந்த சின்னப் பையனின் பணத்தைத் திருடிக் கொண்டு அவனைக் கத்தியால் குத்த இருந்தான் கடைக்காரன்.

கடைக்காரன் பீட்டரைக் கண்டதும் நடுங்கி விட்டான். பீட்டர் அவனைத் தரதரவென்று இழுத்து வீட்டின் உள்ளே போனான்.

''இந்த வேலைக்காரப் பையனை நல்லபடி நடத்து. உன் சொந்தப் பிள்ளையைப் போல் அன்புடன் கவனித்துக் கொள். அவனுக்கு நல்ல சாப்பாடு போடு. பள்ளிக்கு அனுப்பிப் படிக்க வை. அன்போடு இரு.''

''இருப்பேன். இருப்பேன். சத்தியம் சத்தியம்.''

அன்று முதல் அந்த அனாதைச் சிறுவனுக்குப் பள்ளி வாழ்க்கை, நல்ல உணவு, உடை, அன்பு எல்லாம் கிடைத்தன! கடைக்காரன் தனது பேராசைப் பழக்கங்களை விட்டு விட்டு ஒழுங்காக, உண்மையாக உழைத்து உயர்ந்தான்.




"உங்களால் முடியாது ஆனால் என்னால் முடியும்!''

"என்னடா அது?''

"என்னால் வளர முடியுமே!''

- ஆர். ஆர். பூபதி.



"'பஸ்' போகாத சாலை எது?''

"பண்டக 'சாலை'!''

- ஏ.ஆர். கலை.



"அவங்க ரெண்டு பேரும் உயிர் நண்பர்களாம். ஒரே தட்டிலதான் சாப்பிடுவாங்களாம்! அதே மாதிரி ஒரே பேப்பர்லதான் பரீட்சையும் எழுதுவோம்கிறாங்க!''

- கெல்வி.

நாளடைவில் பீட்டருக்கு கடைக் காரனின் வீட்டு அறையே பிடித்துப் போய் விட்டது. அவனுடைய மந்திரப் பையில் காசு கொட்டுவதைப் பற்றி ஊரில் எல்லாரும் அதிசயமாகப் பேசினார்கள். அரசனுக்கே செய்தி எட்டியது.

ஒருநாள் அரண்மனைப் பணியாள் வந்தான். ''அரசர் தங்களைப் பார்க்க விரும்புகிறார். அரண்மனைக்கு வர வேண்டும்'' என்றான்.

பீட்டர் நிதானமாக, ''எனக்கு அரசரைப் பார்க்கும் வேலை இல்லை. அவர் என்னைப் பார்க்க வேண்டு மானால் இங்கேயே வரட்டும்!'' என் றான். அரசர் வருவதாகத் தகவல் வந்தது.

அப்போது கடைக்காரன் விளக்கி னான். ''ஐயா, அரசருக்கு எவ்வளவு பணம் இருந்தாலும் போதவில்லை. முதல் ராணிக்கு இரண்டு பெண்கள். தண்ணீர் போல படாடோபமாக செலவு செய்கிறார்கள். அரசர் செலவைச் சமா ளிக்க முடியாது திணறுகிறார். அரசருக்கு இன்னொரு பெண்ணும் இருக்கிறாள். அவளது குணமும் அழகும் பார்த்தால் தேவதைதான். அவளுக்கு ஏஞ்சல் என்றே பெயர். இவள் இரண்டாம் ராணியின் பெண்'' என்று தகவல் சொன் னான்.

அடுத்த நாள் அரசன் பீட்டரைத் தேடி வந்தான். பண உதவி செய்ய வேண் டும் என்றான்.

''ஆகா. தாராளமாக. ஆனால் ஒன்று. உங்கள் பெண்களில் யாராவது ஒருத்தியை எனக்கு மணம் செய்து தர வேண்டும்'' என்றான் பீட்டர்.

அரசன் தன் பெண்களைப் பார்த்து விஷயத்தைச் சொன்னான். நாட்டின் நிதி மோசமாக இருப்பது பற்றியும், அதைச் சரிக்கட்ட பீட்டரிடம் பணம் வாங்க வேண்டி இருப்பது பற்றியும், அதற்கு அவன் விதித்த நிபந்தனை பற்றியும் சொன்னான்.

''நான் மாட்டேன்! அந்தக் காட்டு மிராண்டியை நான் மணக்க மாட் டேன்!'' என்று அக்காமார் இருவரும் பட்டென்று வெட்டிக் கொண்டனர்.

''அப்படி அவசியம் என்றால் நான் அவரை மணக்கச் சம்மதிக்கிறேன்'' என்று அடக்கமாகச் சொன்னாள் ஏஞ்சல்.

அடுத்த நாள் பீட்டர் அரண் மனைக்கு வந்த போது பார்த்த ஏஞ்சல் அவனைப் பார்த்து அஞ்சி நடுங்கினாள்.

''பயப்படாதே பெண்ணே. எப் போதும் இப்படி இருக்க மாட்டேன். திருமணம் ஆனால் நீயே அறிந்து கொள் வாய்!'' என்று அன்பு பொங்கக் கூறி னான் பீட்டர்.

அரண்மனையிலிருந்து விடை பெற்றுச் சென்ற பீட்டர் சாத்தானை அழைத்தான். ''ஏஞ்சல் என்னைப் பார்த்து பயப்படுகிறாள். என் உரு வத்தை முன்போல் மாற்றித் தா!'' என்று கேட்டான்.

சாத்தான் அவனை அழைத்துக் கொண்டு ஏழுமலைகளைக் கடந்து, ஓர் ஏரியில் குளிக்கும்படிப் பணித்தான். குளித்து எழுந்த போது பீட்டர் மிக அழ கான இளவரசனாக மாறியிருந்தான்! அர சனுக்கு உரிய படை, பணியாள், எல் லாம் தயாராக இருந்தன!

''ஐயையோ! இவ்வளவு அழகான இளவரசனாக இவர் மாறுவான் என்பது தெரிந்திருந்தால் நாங்களே இவரைத் திருமணம் செய்து கொண்டிருப் போமே? இப்படி ஏமாந்து விட் டோமே!'' என்று புலம்பினர் அக்கா இள வரசிகள் இருவரும்.

பீட்டரும் ஏஞ்சலும் மகிழ்ச்சியுடன் பிறருக்கு உதவி செய்து நல்வாழ்க்கை நடத்தினர்.



★ தபால் தலையை காகிதத்தின் மீது ஒட்டக் கூடிய விதத்தில் உருவாக்கியவர் ஜேம்ஸ் சேர்ப்பர்ஸ் என்னும் ஆங்கி லேயர். ஆண்டு 1861.

- மு. பூபாலன்.

குழந்தைகளே!

சந்தியா ராஜகோபால்

உங்களுக்காகவே பாடியுள்ளார்

கண்மணிப் பூங்கா

ஆடியோ கேஸட்டுகள்

அன்புக் குழந்தைகளே!

கேளுங்கள், நீங்கள் விரும்பிப் பாடிடு வீர்கள் உங்களுக்காகவே எளிமையான தமிழில் சுலபமான ராகத்தில் பாடல்களை அமைத்துள்ளேன். நீங்கள் சுலபமாக கற்று பாட முடியும். அத்துடன் பாடல்களின் பொருளும் உங்களுக்கு பயனுள்ளதாக இருக்கும். இந்த கண்மணிப்பூங்கா ஆடியோ கேஸட்டை நீங்கள் எப்படி ரசித்துக் கேட்டீர் கள் என்பதை எனக்கு எழுதுங்கள்

அன்புடன்

Sandhya Rajagopal



விலை ரூ. 28/-

நமது கலாச்சாரம், ஒழுக்கம், பண்பாடு, வரலாறு, நம் தலைவர்கள் இவையனைத் தையும் சுவை மிகுந்த பாடல் களாக தொகுத்து உங்கள் அறி விற்கும் சிந்தனைக்கும் விருந்தாக அமைத்துள்ளோம்.

கீழ் கண்ட கூப்பனை பூர்த்தி செய்து அனுப் பும் பொழுது உங்களுக்குப் பிடித்த முதல் மூன்று பாடல்களை வரிசைப்படுத்தி அத்து டன் 10 வார்த்தைகளுக்குள் இந்த கேஸட்டை நீங்கள் எப்படி ரசித்து கேட்டீர் கள் என்று எங்களுக்கு எழுதியனுப்பவும். சிறந்தவற்றிற்கு பரிசுகள் உண்டு.

முதல் பரிசு -	ரூ.500/-
இரண்டாம் பரிசு	ரூ.250/-
மூன்றாம் பரிசு -	3 கேஸட்டுகள் அடங்கிய பாக்கெட்

சென்னை நகரிலுள்ளவர்களுக்கு இலவச டெலிவரி வெளியூரிலிருப்பவர்கள் ரூ.6/- சேர்த்து M.O. செய்யவும்.

குயில் கேஸட்

85, ஜி.என். செட்டி சாலை
தி.நகர், சென்னை - 600 017.
போன்: 8280600

குயில் ஆடியோ கேஸட்டுகள் எல்லா முன்னணி கடைகளிலும் கிடைக்கும்.

பெயர் ....

முகவரி ....

நான் இந்த கேஸட்டை விரும்புகிறேன்.

ஏனெனில் ....

JEGI/KC/0393

3. சுற்றுலா கிளம்பினாள்

"சுற்றுலாவா! வேண்டாம். வேண்டவே வேண்டாம்!" என்று அபிராமி தன்னை மறந்து சத்தம் போட்டதற்கு ஏதோ முக்கிய காரணம் இருந்தாக வேண்டும் என்று நினைத்தார் சக்ரவர்த்தி. அபிராமியின் முகத்தில் ஏற்பட்ட வியர்வையைத் துடைத்து விட்ட அவர், "இவ்வளவுதானே! சுற்றுலா வேண்டாம். சரிதானே அபிராமி?" என்றார்.

குயில் மட்டும் அபிராமியின் தோளைத் தொட்டு, "அபிராமி! உனக்கு என்னாச்சு?" என்று கேட்டாள் மெலிதாக.

"ஏன் அபிராமி இப்படி வெறி பிடிச்ச மாதிரி கத்தினே?" என்று கணபதி கேட்டு முடிப்பதற்குள் சக்ரவர்த்தி குறுக்கிட்டார்.

"சும்மா தொந்தரவு பண்ணாதீங்க! அபிராமி நல்லா ஓய்வு எடுத்துக் கட்டும்" என்றார்.

"சரி" என்று பணிவாகப் பதிலளித்த குயில், "நாங்க வர்றோம்" என்று கிளம்பினாள். அவள் கூடவே விவேகானந்தன், கணபதி எல்லோரும் தங்கள் விட்டிக்குத் திரும்பப் புறப்பட்டார்கள்.

அபிராமி 'எல்லோரும் கொஞ்சம் இருங்க' என்று கேட்டுக் கொண்டாள்.


பின்னர் சக்ரவர்த்தியைப் பார்த்து, "ஐயா என்னை மன்னிச்சிடுங்க. நான் அப்படிக் கத்தி எல்லாருக்கும் தூக்கி வாரிப் போடும்படி பண்ணியிருக்கக் கூடாது" என்றாள். தவறு செய்து விட்ட உணர்வு முகத்தில் தெரிந்தது. ஆனாலும் அவளால் துக்கத்தைக் கட்டுப்படுத்த முடியவில்லை. கண்கள் கலங்கின.

"அதனாலென்ன? நீ நல்லா ஓய்வு எடுத்துக்க. எல்லாம் சரியாப் போயிடும்" என்றார் சக்ரவர்த்தி.

அபிராமியின் விட்டுகை

"ஐயா! நான் ஏன் அப்படிக் கத்தினேன் தெரியுமா? அதை நீங்களும் தெரிஞ்சுக்கணும். என்னையும் அறியாமல் என் அடிமனசிலே இருந்து என்னை அரிச்சுக்கிட்டே இருக்கிற ஒரு பயங்கர சம்பவம்தான் என்னை அப்படித் தன் நிலை மறக்க வைத்தது."

இப்படி அபிராமி சொன்னவுடன் சக்ரவர்த்தி மெதுவாக, அபிராமியின் பக்கத்தில்



கூத்தபிரான்

> “நான் ஜன்னல் வழியாக என் அம்மா, அப்பாவைக் கண்கொட்டாமல் எவ்வளவு நேரம் பார்த்துக் கொண்டே இருந்தேன் என்பது எனக்கே தெரியாது. அதுதான் அவங்களை நான் கடைசியாகப் பார்த்தது....

வந்து அமர்ந்து, அவள் தலையை அன்புடன் தடவினார். பிறகு அபிராமி, ''உன் பிஞ்சு மனசிலே என்ன அப்படிப்பட்ட பயங்கரமான சம்பவம் உறுத்திக்கிட்டு இருக்கு? அதைச் சொல்லும்மா. உன் மன பாரமும் குறையும், நிம்மதியும் ஏற்படும்'' என்றார்.


''சொல்றேன் ஐயா!'' என்று கண்களைத் துடைத்துக் கொண்டாள் அபிராமி. தோழி குயிலின் கையைப் பிடித்துக் கொண்டு, தன்னைச் சுற்றியுள்ளவர்களை ஒருமுறை பார்த்தாள். பிறகு நான் இந்த அன்பு இல்லம் விடுதிக்கு வந்து சேர்ந்தவரை நடந்ததைச் சொல்றேன்'' என்று தன் கதையைக் கூறத் தொடங்கினாள்.

''எங்க அப்பாவுக்குச் சொந்த ஊர் தமிழ்நாட்டுப் பக்கம்தான். ஆனா நான் பிறந்து, வளர்ந்தது, படித்தது எல்லாமே வடக்கே பஞ்சாப் பக்கத்திலேதான். எங்கப்பா பேரு சுந்தரம். பெரிய இஞ்சினியர். கட்டடம் கட்டற வேலைதான் அவருக்கு. அழகழகான எத்தனையோ வீடுகள், கட்டடங்களைக் கலை உணர்வோடு அவர் திட்டமிட்டுக் கட்டி உருவாக்கிக் கட்டடக் கலைக்கே ஒரு பெருமையைத் தேடித் தந்திருக்கிறார். என் அம்மா பேரு ராதா. என் அப்பா தெய்வ பக்தியுள்ளவர். குறிப்பா அபிராமி அந்தாதி படிக்காமே வெளியே கிளம்ப மாட்டார். அவர் சூட்கேஸ்ல அபிராமி படமும், அந்தாதி புத்தகமும் இருக்கும். அப்படி ஒரு தீவிர தெய்வ நம்பிக்கை. அதனால்தான் எனக்கு அபிராமின்னு பேரு வைச்சார். செல்லமா வளர்க்கப்பட்டேன். ஒரே பொண்ணு. கேட்கணுமா? விதவிதமா டிரஸ்கள், விளையாட்டுச் சாமான்கள், என்னைக் கவனிக்க ஒரு ஆயா. அத்தனை சிறப்பாத்தான் நான் வளர்க்கப்பட்டேன். தினமும் பள்ளிக்கூடத்துக்கு கார்லதான் போவேன், வருவேன். என் மகிழ்ச்சிக்காக எதையும் செய்து தரத் துடிக்கும் பெற்றோர்களின் அன்பிலே நான் வளர்ந்து வந்தேன்.''

அபிராமி சற்று நிதானித்து மறுபடி தொடர்ந்தாள் :

''பெற்றோரின் சந்தோஷம் எப்பவும் குறையாம இருக்க, நானும் என் பங்குக்கு வகுப்பிலே முதலிடத்தையும் விளையாட்டுக்களில் சேம்பியன் பட்டத்தையும் தொடர்ந்து பெற்று வந்தேன். எங்கப்பா எதிலேயும் நேர்மையாகவும், கண்டிப்பாகவும் இருப்பார். அதுக்கு உதாரணமா ஒரு நிகழ்ச்சியை நான் சொல்லியே தீரணும். ஒருநாள் நான் ஸ்கூலிலிருந்து வந்து டிரஸ் மாத்திக்கிட்டு டிபன் சாப்பிட்டு விட்டு வாசல் பக்கம் வந்தேன்.

'ஸார் இல்லீங்களா?'ன்னு கேட்டுக்கிட்டு டிப்டாப்பாக ஒரு ஆளு கையிலே சூட்கேஸுடன் நின்னாரு. நான், ''அப்பா இன்னும் வரல்லே. என்ன விஷயம்?''ன்னு கேட்டேன். உடனே அந்த டிப்டாப் ஆளு, தான் கையிலே வெச்சுக்கிட்டு இருந்த சூட்கேஸை என் முன்னாலே நீட்டி, 'தயவுசெய்து இதை ஸார் வந்தா கொடுத்திடும்மா. அவருக்குப் புரியும்னு' சொல்லி வேண்டிக்கிட்டார். நான் யோசிக்கிறதைப் பார்த்து, ''ஸார்தான் இதைப் போகும்




போது வீட்டிலே கொடுத்துட்டுப் போகச் சொன்னாரு' என்றதும் ஒரு வேளை உண்மையாயிருக்குமோன்னு நினைச்சு, சரின்னு சொல்லி சூட்கேஸை வாங்கிக்கிட்டேன். டிப்டாப் ஆளு என் கன்னத்தைத் தொட்டுத் தட்டி, 'குட் கேர்ல்'னு சொல்லிட்டு, சந்தோஷமா புறப்பட்டுப் போனார். அந்த ஆளு போன அரை மணி நேரத்திலே என் அப்பா ஆபீஸ்லேர்ந்து வந்தார். நான் வாசல்லேயே சூட்கேஸோட உட்கார்ந்திருக்கிறதைப் பார்த்து விட்டு, ''என்னம்மா அபி கண்ணு? என்ன வாசல்லேயே உட்கார்ந்துக்கிட்டு இருக்கே? அப்பாவை வரவேற்கவா? ஆமாம் இது என்ன கையிலே சூட்கேஸ்?'' என்று என்னைப் பார்த்துக் கேட்டார்.

நான், ''டிப்டாப்பா ஒரு ஆளு வந்து, நீதான் இதை அவன் போகும் போது, நம்ம வீட்டிலே கொடுத்து விட்டுப் போகச் சொன்னதா சொல்லி, குடுத்துட்டுப் போனான். இப்போ ஏது இந்த சூட்கேஸ்னு என்னையே கேட்டா, எனக்கு என்ன தெரியும்னு சொன்னேன்.''

''அப்பா அவசரம் அவசரமாக அந்த ஸூட்கேஸைக் கையிலே வாங்கிப் பார்த்தார். 'அடப்பாவி, நீயான்னு' சொன்னார். எனக்கு ஒண்ணும் புரியல்லே. வேக வேகமாக சூட்கேஸைத் திறந்தார். அதிலே பார்த்தா கத்தை கத்தையாக நூறு ரூபாய் நோட்டுகள்! எனக்குத் தூக்கி வாரிப் போட்டது. ''என்னப்பா இதெல்லாம்? என்னத்துக்கு இவ்வளவு பணம்!''னு கேட்டேன்.

''சொல்றேன். அந்தப் பயலை என்ன செய்யறேன் பாருன்னு வேகமா உள்ளே வந்து, டெலிபோனை எடுத்து ஆத்திரமாக எண்களைச் சுழற்றினார்.

''சிறிது நேரம் மௌனமாகயிருந்து, பிறகு யாரு? காண்டிராக்டர் அடுலாவா? உன் மனசிலே என்னடா நினைச்சுக்கிட்டு இருக்கே? லஞ்சமா கொடுக்கிறே? இப்பவே உன்னை போலீஸ்லே பிடிச்சுக் கொடுத்துட்டு மறுவேலை பார்க்கிறேன். பணம் கொடுத்தா, உனக்கு வீடு கட்டற காண்டிராக்ட் கிடைச்சுடுமா? நல்ல பொருள்களைக் கொண்டு, ஒழுங்கா வீடுகளைக் கட்ட முடியாத உனக்கு நான் இருக்கிற வரை ஒரு பாத்ரூம் கட்டக் கூட காண்டி ராக்ட்





"ஏண்டா பாம்புக்கு கலர் பெயிண்ட் அடிச்சிட்டிருக்கே?''

"படம் எடுக்கும் போது கலர் படமா எடுக்கட்டுமேன்னுதான்!''



''தெரியாத்தனமா என் மகனிடம் ஒழுங்கா படி இல்லேன்னா எருமை மாடு வாங்கித் தருவேன்னுனு சொன்னது தப்பாப் போச்சு!''

''ஏன், என்னாச்சு?''


''எருமை மாடு வாங்கிக் கொடுத்திருப்பா என்று சொல்லிட்டான்!''

"டாக்டர் எனக்கு ஒரே கவலையா இருக்கு. நேற்று இரவு ஏதோ ஒரு பெரிய பொருளைத் தின்பது போல கனவு கண்டேன்.''

"வெறும் கனவுதானே. இதுக்குப் போய் ஏன் கவலைப்படறே?''

''நான் கவலைப்படுவது கனவு கண்டதற்காக அல்ல டாக்டர். காலையில் எழுந்து பார்த்தால் படுக்கையில் இருந்த தலையணையைக் காணலை!''

- தக்கோலம் அ. முஸ்தபா.



கிடைக்காது தெரிஞ்சுக்க! இன்னும் ஒரு மணி நேரத்துல நீ கொடுத்த சூட்கேஸைத் திரும்பியெடுத்துக் கிட்டுப் போகல்லே, நீ கம்பி எண்ணும்படியாகும். ஜாக்கிரதை'' என்று சொல்லி ரிசீவரைக் கீழே வைச்சுட்டு, என்னைப் பார்த்தார்.''

தொடர்ந்து அபிராமி என்ன கூறப் போகிறாள் என்பதைக் கேட்க எல்லோரும் ஆவலாகக் காத்திருந்தனர். அபிராமி தொடர்ந்தாள்.

அந்த ஸூட்கேஸ் வீட்டை விட்டுத் திரும்பிப் போன பிறகுதான் வீட்டுக்குள்ளே போகணும்னு பிடிவாதமா இருந்தேன். விளக்கு வெக்கிற நேரமாச்சு. என் அம்மா, 'அபிராமி! இப்படி எவ்வளவு நேரம்தான் வாசல்லேயே உட்கார்ந்திருப்பே? இருட்டிப் போச்சு. எழுந்து வா'ன்னு செல்லமாகவும், கண்டிப்பு கலந்தும் கூப்பிட்டாங்க. 'இல்லேம்மா... அந்த சூட்கேஸ் முதல்லே வீட்டை விட்டு ஒழியணும். என் அப்பாவுக்கு ஒரு கெட்ட பேரும் வரக் கூடாதுன்னு சொல்லிக்கிட்டே இருந்தேன். அப்போ வீட்டு வாசல்லே வேகமா ஒரு கார் வந்து நின்னுது. என் கிட்டே சூட்கேஸைக் கொடுத்த டிப் டாப் ஆசாமியும், கூட இன்னும் இரண்டு பேரும் இறங்கினாங்க. 'அப்பா! சூட்கேஸ் கொடுத்தவர் வந்திட்டார்'னு கத்தினேன். வீட்டின் உள்ளே இருந்து அப்பா சூட்கேஸுடன் வெளியே வந்து, ''என்னப்பா... என்ன நினைச்சுக்கிட்டு இருக்கே? ஜாக்கிரதை. மரியாதையா நீ கொடுத்த சூட்கேஸை எடுத்துக்கிட்டுப் போ. லஞ்சம் கொடுத்து காண்டிராக்ட் எடுக்க முயற்சி பண்ணினேன்னு உன்னை உள்ளே தள்ள முடியும். போனாப் போகுதுன்னு மன்னிச்சுடறேன்,'' என்று மிகவும் கண்டிப்பாகப் பேசி சூட்கேஸைத் திருப்பிக் கொடுத்தார்.

பதில் ஏதும் பேசாமல் சூட்கேஸை வாங்கிக் கொண்டு அடுலின் ஆட்கள் புறப்பட்டார்கள்.

''அபிம்மா! இனிமே உள்ளே வரலாமில்லியா...? வாம்மா, வந்து சாப்பிடு.


உனக்காக நாங்களும் சாப்பிடாம எவ்வளவு நேரமா காத்துக்கிட்டு இருக்கோம் தெரியுமா?''ன்னு அப்பா சொன்னதும், 'ஸாரிப்பா'ன்னு உள்ளே போனேன்.

அந்த டிப்டாப் ஆளு வந்து சூட்கேஸைத் திரும்ப எடுத்துக்கிட்டுப் போன பிறகு வீடே பிரகாசமானது போல் தோன்றியது. எனக்கு ஏன் அபிராமின்னு பேர் வெச்சாங்கன்னும் எங்கப்பா எப்படிப்பட்ட கண்டிப்பானவர்னும் சொன்னேன், இல்லையா? என் மேலே அம்மாவும், அப்பாவும் எவ்வளவு அன்பும் பிரியமும் வெச்சிருந்தாங்க தெரியுமா... எங்க பள்ளிக்கூடத்திலே ஒரு வாரம் சுற்றுலா போகப் போறதாக ஏற்பாடு செய்தாங்க. நானும் பெயரைக் கொடுத்தேன். சுற்றுலா புறப்படும் நாள் வந்தது. அன்னிக்குக் காலையிலே அம்மா என்னை அழைத்து, 'அபி! இந்தா இந்த ரூபாயைப் பத்திரமா செலவுக்கு வெச்சுக்க. வாங்கிக்க' என்றாள்.

பெரிய சொகுசான பஸ்ஸில் சுற்றுலா செல்ல, பள்ளி நிர்வாகம் ஏற்பாடு செய்திருந்தது. என் அம்மாவும், அப்பாவும் வழியனுப்பப் பள்ளிக்கு வந்திருந்தாங்க. எனக்கு ஜன்னல் பக்கத்தில் உட்கார ஸீட் கிடைத்தது. பஸ்ஸில் ஏறி உட்கார்ந்து கொண்டேன். அப்பாவும், அம்மாவும் நான் எப்படியெல்லாம் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் என்று சொல்லிக் கொண்டே இருந்தாங்க. பஸ் புறப்படும் நேரம், மிகவும் வாஞ்சையுடன் என் கையைப் பிடித்து இழுத்து முத்தமிட்டாங்க. பஸ் மெதுவாகப் புறப்பட்டது. நான் ஜன்னல் வழியாக என் அம்மா, அப்பாவைக் கண்கொட்டாமல் எவ்வளவு நேரம் பார்த்துக் கொண்டே இருந்தேன் என்பது எனக்கே தெரியாது. அதுதான் அவங்களை நான் கடைசியாகப் பார்க்கும் காட்சி என்பது எனக்குத் தெரியாமல் போச்சே...''

அபிராமியைச் சுற்றி இருந்தவர்கள் அவள் மேற்கொண்டு கூறப் போவதைக் கேட்க ஆவலுடன் காத்திருந்தார்கள்.


(தொடரும்)



''அந்தத் தோட்டக்காரன் கைலே துப்பாக்கி வச்சிருக்கான் பார்த்தியா?''

''அப்போ அவன் 'தோட்டக்காரன்' இல்லை! 'தோட்டா'க்காரன்னு சொல்லு!''

- சம்பத் குமார்.



''என்ன எலிபாஷாணமா நீங்க கொடுத்தது? எலிக சாகவே மாட்டேங்குது?''

''இதுக்குத்தான் எதுவானாலும் இங்கேயே வாங்கி சாப்பிட்டுப் பார்த்து வாங்கிட்டுப்போ எங்கிறது!''


- இரா. ஜெயகாந்தன்.

''அவங்க அப்பா 'பசை'யுள்ள ஆசாமி!''


''எப்படிச் சொல்றே?''

''பற்பசை தயாரிக்கிறவராச்சே!''

- தோணிபுரம் வீரா.



பிருந்தாவனக் கவியரங்கம்



நாய்க்குட்டி

வாலை ஆட்டும் நாய்க்குட்டி
வணக்கம் செய்யும் நாய்க்குட்டி
காலை நக்கும் நாய்க்குட்டி
கண்டால் தாவும் நாய்க்குட்டி

வீட்டைச் சுற்றும் நாய்க்குட்டி
விளையாட விரும்பும் நாய்க்குட்டி
நன்றி மிக்க நாய்க்குட்டி
நாங்கள் விரும்பும் நாய்க்குட்டி!

- ஆர். பாலு பிரகாஷ்.

உலக அதிசயம்

எழுந்து ஓடி வாருங்கள்
எங்கள் வீட்டில் கூடுங்கள்
ஏழு உலக அதிசயம்
இங்கு வந்து காணுங்கள்!



கூடத்தில் உள்ள பீரோவில்
கொஞ்சம் கூர்ந்து பாருங்கள்
காட்சி தந்திடும் தாஜ்மஹால்
கவன மாகப் பாருங்கள்!

அப்பா வாங்கித் தந்திட்ட
அழகு பொம்மை தாஜ்மஹால்
இப்போ நீங்கள் சொல்லுங்கள்
இதுவும் உலக அதிசயம்தான்!

- பாசு தமிழடியான்.

எங்க மாமா

எங்க மாமா வந்தாரு.
எனக்கு பொம்மை தந்தாரு.
தின்க மிட்டாய் தந்தாரு
தினமும் படிக்கச் சொன்னாரு.



சின்னக் கதை சொன்னாரு
சோம்பல் விடச் சொன்னாரு
வண்ண பலூன் தந்தாரு
வாழ்த்தி ஊரு போனாரு!

- அரங்க வெங்கடேசன்.

குற்றாலம்

குற்றா லத்திற்கு வாருங்கள்
குளுகுளு அருவியைக் காணுங்கள்.
வற்றா நதியிது பாருங்கள்
வந்து குளித்தே அறியுங்கள்.



சாரல் மழையில் நனையும் சுகம்
சலிக்கா புதுமை கண்டிடுவீர்.
தரையில் தவழும் மேகத்திரள்
தாவிப் பிடிக்கத் தூண்டிடுமாம்!

குளிக்கக் குளிக்க அலுக்காத
குளுமை அருவி இங்குளது
எழிலைக் கொட்டும் குற்றாலம்
எப்போ வருவீர் சொல்லிடுவீர்?

- எஸ். ஜின்னா.

பாடவா!

வாழ்த்துக் கூறிட வாவா
வாவா தம்பி வாவா
கோழையை வீரன் ஆக்கிய
கவிஞன் புகழைப் பாடவா.

சாதியைச் சாடிய கவிஞன்
சிறப்பைப் பாடிட வாவா
சுதந்திர உணர்வு ஊட்டிய
தூயோன் பாரதி புகழவா!




பாப்பா மகிழப் பாடிட
பாரதி புகழைப் பாடவா
கொட்டு முரசு பாடிய
கவிஞன் பாரதி புகழவா!

- இனிய ஜெயந்.

கிளியாம்!

பச்சை வண்ணக் கிளியாம் பார்க்க வந்திடு
பாசம் மிக்க கிளியாம் பார்க்க வந்திடு
சின்ன வாய்க் கிளியாம் காண வந்திடு
சிவந்த மூக்குக் கிளியாம் காண வந்திடு



ஆடிக் காட்டும் கிளியாம் அருகே வந்திடு
அழகு வித்தைக் கிளியாம் அருகே வந்திடு
கூடி வாழும் கிளியாம் கொஞ்ச வந்திடு
கொத்திப் பார்க்கும் கிளியாம் கவனமாய் இரு!

- கத்ரி. ம. முன்சிப்ஷா.

தினமும்...

திறமை மிக்க டாக்டராய்
தினமும் நானும் மாறுறேன்
வறுமை மிக்கோர் யார்க்குமே
வலிய சிகிச்சை செய்யுறேன்.



பெரிய போலீஸ் ஆகறேன்
பொல்லா ரௌடி மடக்குறேன்
திருடர் கூட்டம் பிடிக்குறேன்.
செம்மை யாக அடிக்குறேன்.


மக்க ளுக்கு உதவுறேன்
மனசுக் குள்ளே மகிழுறேன்.
தூக்கத் திலே கனவுகள்
தினுச தினுசாய்க் காணுறேன்!

- இரா. அ. தென்றல் நிலவன்.

மணி விழா!

காட்டுக் குள்ளே திருவிழா
காட்டு ராஜா மணிவிழா
பாட்டு நடனம் வேடிக்கை
பார்க்க வந்து கூடுங்கள்!

காக்கை அண்ணன் வந்தது
கவிதை வாழ்த்து சொன்னது
ஆட்டம் போட்டுக் காட்டியே
அழகு மயில் போனது!



குரங்கு நரி ஒட்டகம்
கழுதை யானை குட்டியும்
கரடி தலைமை வகிக்கவே
கச்சேரியும் செய்தன!

விருந்து பாயசம் அப்பளம்
வடையும் லட்டும் அமர்க்களம்
மருந்து மாத்திரை கூடவே
மறந்தி டாமல் தந்தனர்!

- எம்.கே. தங்கவேல்.

சொல்லு!

நம்பிக்கை வேண்டும் தம்பி
நலமே நமக்கென நம்பி
தும்பிக்கை யின்றி யானை
தின்றிட இயலுமா தானாய்...?



உன்கை உனக்கே தூரம்
எனவே என்னிடில் பாரம்
எப்படிச் சுமப்பாய் நாளும்
என்பதை நினைப்பாய் தினமும்

மண்ணில் சாதனை செய்ய
முயற்சி ஒன்றே வழியாம்
கண்ணில் படுகிற தூசைக்
கணமே துடைப் பதுபோல

உன்னில் எழுகிற சோம்பல்
உடனே ஆக்கிடு சாம்பல்
தன்னில் கொள்ளா உறுதி
தடையாய் மாறும் இறுதி


பிருந்தாவனக் கவியரங்கம்

எனவே உனைநீ நம்பு
எதிலும் வெற்றிக் கரும்பு
மனமே கடமையில் வெல்லு
மந்திரம் நம்பிக்கை சொல்லு!

- அன்லேந்தி.

வெள்ளை முயல்

வெள்ளை முயல் துள்ளுது
வேக மாக ஓடுது
கள்ளம் இன்றிப் பார்க்குது
காலைக் காலைத் தூக்குது
சிவப்புக் கண்கள் மின்னுது
சின்ன வாலும் ஆடுது
பச்சை இலை தின்னுது
பார்க்க மனம் அள்ளுது




பெட்டிக் குள்ளே போகுது
குட்டி யோடு தூங்குது
எட்டி எட்டிப் பார்க்குது
என்ன! என்று கேட்குது

- என். கோபாலகிருஷ்ணன்.

வெல்லக் கட்டி!

குட்டி ஆட்டுக் குட்டியாம்;
குறும்பு செய்யும் கட்டியாம்!
மொட்டை யான கொம்பினால்
முட்டிச் செய்யும் வம்புதான்!

அம்மா என்று கத்துமே;
அன்பாய் ஓடிச் சுத்துமே!
பம்பி மடியை முட்டுமே;



பாலை உண்ணும் மட்டுமே!
பாலைக் குடித்தே ஆடுமாம்;
பாபா என்று பாடுமாம்!
வாலை ஆட்டி ஓடுமே;
வயலும் காடும் மேயுமே!

துள்ளித் துள்ளிக் குதிக்குமே;
தொட்டுத் தூக்க மிதிக்குமே!
வெள்ளை யான நிறமதாம்;
வேடிக்கை காட்டி மயக்குமாம்!

தழையும் புல்லும் காட்டவே,
தாவி நாக்கை நீட்டுதே!
இளைய ஆட்டுக் குட்டிதான்;
எனக்கு வெல்லக் கட்டிதான்!


- சீனி. சரவண பாலாஜி.

"அப்பா! என் உயரம் எடை எல்லாம் அளவு எடுத்துக்கோ!"

"ஏண்டா?"


"ரிசல்ட் வருது நான் காணாமல் போனா டி.வி.யில் அறிவிப்புச் செய்ய வசதியா இருக்குமே!"


- சம்பத் குமார்.







வேதாளம் கொடுத்த வரங்கள்
கதை: ஆனந்தி
படம்: லலிதா
கோவிந்தன் ஏழை நெசவாளி...
அம்மா... பசிக்குது...
நீ இந்தச் சேலையை முடிச்சு, ஜமீன்தார் வீட்டிலே வித்து, பணம் வாங்கி வரதுக்குள்ளே இந்தப் புள்ளைங்களுக்குக் கல்யாண வயசு ஆயிடும்!
என்ன பண்ணச் சொல்றே?
காட்டுல போய் விறகு வெட்டி வா; நான் வயல்ல அறுவடை செஞ்சு கூலியா அரிசி வாங்கியாறேன்.
வீட்டுக்கு வெளியே...
ஐயய்யோ! இன்னிக்குச் சமைக்கக் கீரையாவது இருக்குன்னு நினைச்சேன்... அதுவும் போச்சே!
வெள்ளாட்டை வளர்த்தா, பாலாவது கிடைக்கும்... கிடாவை வளர்த்து, கொம்புக்குச் சாயம் பூசி... சனியன்!
தே, அடிக்காதே!



இதுவும் என் பிள்ளை மாதிரிதான். இதுக்கும் பசிக்காதா?
நீயும், உன் ஆடும்...சே! அதையும் காட்டுக்குக் கூட்டிட்டுப் போ!
காட்டில்...
பச்சை மரம் விறகுக்கு உதவாது... பட்டுப் போன மரமே காணுமே!
ஆ! அதோ!
கோவிந்தன் மரத்தை வெட்ட...
யாரடாது அவன், என் தூக்கத்தைக் கலைக்கிறது...?
கோவிந்தன் திகைத்து...
நீ யாரு? எங்கே தூங்கறே?
நான் அந்த மரத்தில் வசிக்கும் வேதாளம்... எதுக்கு மரத்தை வெட்டறே?



வீட்டிலே அடுப்பு எரியணுமே!
மரத்தை வெட்டாதே! ரெண்டு வரம் தரேன், கேளு!
அப்பாவி கோவிந்தன் தன் ஆட்டைப் பார்த்தான்...
நான் ஆசையோட வளர்க்கிற ஆட்டுக்கு, சிங்கம் மாதிரி, பிடரி வரணும்!
தந்தேன்! இரண்டாவது வரம்...?
இது கீரைப் பாத்தியை மேயாம சமர்த்தா இருக்கணும்...
இரு வரங்களைப் பெற்று வீடு திரும்ப... வழியில் நண்பன்...
கோவிந்தா! என்ன இது? உன் ஆட்டுக்கு என்ன ஆச்சு?
கோவிந்தன் நடந்ததைக் கூற...
அசடே! "நான் ராஜாவா இருக்கணும்; என் சிநேகிதன் முருகேசு மந்திரியா இருக்கணும்"னு வரம் கேட்டிருக்கப் படாது?


கோவிந்தன் வீடு திரும்பி...
நாளைக்கு நான் ராஜா ஆகப் போறேன்...
எந்த முட்டாள் உனக்கு ராஜ்யம் கொடுக்கப் போறான்!
கோவிந்தன் நடந்ததைக் கூறி...
நாளைக்கு மறுபடி மரத்தை வெட்டப் போறேன். வேதாளம் மறுபடி வரம் தரும்...
அசடே! உனக்கு நாட்டை ஆளத் தெரியுமா?
நீ ராஜாவானா மறுநாளே அடுத்த தேசத்து ராஜா படையெடுத்து வருவான்... உன்னை விரட்டியடிச்சு...
என்னதான் செய்யச் சொல்றே!
பேசாம உனக்கு நாலு கையும் ரெண்டு தலையும் வேணும்னு கேளு. அப்ப ரெண்டு ரெண்டு சேலையா நெசவு பண்ணலாம்
அதுவும் சரிதான்.
கோவிந்தன் மரத்தை வெட்ட முற்பட...
ஏன் மரத்தை வெட்டறே?
அடுப்புக்கு விறகு வேணுமே?



மரத்தை வெட்டாதே! உனக்கு இன்னும் இரண்டு வரங்கள் தரேன்!
முதல் வரம்: எனக்கு இரண்டு தலைகளும், நாலு கைகளும் வேண்டும்!
இரண்டாவது வரம்?
ம்ம்ம்... என் பெண்சாதி தேவானையிடம் கேட்டுக் கொண்டு வரேன்!
உனக்கென்று யோசனை இல்லையா?
சரி, உன் விருப்பம் படி செய்.
தப்பாப் போயிடுச்சே!
கோவிந்தன் வீடு திரும்ப...
அம்மா! அப்பாவைப் பாரேன்! பயமா இருக்கே
தேவானை திகைத்து...
நீ பேச்சுக்குச் சொன்னா... நிஜமாகவே அப்படி வரம் கேட்டுட்டியா?
நீ வரம்தான் கேட்டிருக்கே; இன்னொன்னு பாக்கி!


நண்பன் முருகேசனைப் பார்த்து விவரம் கூறச் சென்றான் கோவிந்தன். வழியில்...
ஐயோ... பிசாசு! பிசாசு!
கூக்குரல் கேட்டு பலரும் ஓடி வந்து...
கல்லால் அடி!
தடியால தாக்கு!
குழந்தைகளை பிடிச்சிடும்!
கோவிந்தன் பயந்து ஓடினான்...
ஐயோ! என்னைக் கொல்லாதீங்க! காப்பாத்துங்க!
கண்மண் தெரியாமல் ஓடிய கோவிந்தன், ஒரு பாழுங்கிணற்றைக் கவனிக்காமல்...
ஐயோ! செத்தேன்!
சிறிது நேரத்துக்குப் பிறகு முருகேசன் தேவானையிடம் வந்து...
மோசம் போயிட்டோம்! கோவிந்தனை பிசாசுன்னு ஜனங்க துரத்தி-யிருக்காங்க...


தப்பிக்க நினைவன் ஒரு பாழுங்கிணத்தில் விழு... கதை முடிஞ்சு போச்சே!
ஐயோ!
தேவயானை அதைரியம் அடையாமல், காட்டுக்குப் போனாள்...
அவர் சொன்ன அடையாளங்களை வைச்சு, அந்த பட்ட மரத்தைக் கண்டு பிடிச்சாகணும்...
வெகு நேரம் தேடிய பிறகு...
அதோ! அதுவாத்தான் இருக்கணும்!
வெட்டிச்சாய்க்காமல் விட மாட்டேன்!
வேணாம்! வேணாம்! என் வீட்டை வெட்டாதே! வரம் தரேன்!
என் புருஷனுக்கு நீங்க தந்த வரமே, அவ-ருக்கு எமனா-யிடுச்சு!
முட்டாள்தனமா வரம் கேட்டா நான் என்ன பண்ண முடியும்?


இரண்டாவது வரத்தை நீ கேளு; நான் தரேன்.
என் புருஷன் வழக்கம் போல தறியிலே நெசவு பண்ணினால் போதும்.
கோவிந்தனும் தேவானையும் வறுமையுடன் போராடினாலும்...
வாழ்வும் வேணாம், மண்ணும் வேணாம். உசிரோட இருந்தால் போதும்
ஒரு நாள் மழைக்குப் புலியின் குகையில் ஒதுங்கியது கோவிந்தனின் ஆடு...
யார் இது? இவ்வளவு தைரியமா? பிடரி சிலிர்க்குது! கண் நெருப்பா ஜொலிக்குது!
புலி தைரியத்தைத் திரட்டிக் கொண்டு...
டேய்! யார் நீ! இது என்னோட குகை ஓடிப் போ!
என்னைத் தெரியலையா? நான் சிங்க ராஜாவின் மாமா! ஒரு நாளில் ஒன்பது புலிகளை விழுங்குவேன். தாடிக்காரன் என்பது என் பெயர்!


புலி பயந்து போய் ஓட்ட மெடுக்க...
புலிமாமா? என்ன ஆச்சு?
புலி தயங்கி நின்று தான் பார்த்த பிராணியை வர்ணித்து...
ஹி ஹி... நீங்க பார்த்தது தாடி முளைச்ச ஆடுதான்!



புலி சம்மதிக்க...
ஐயோ! வலிக்குதே!
பொறுத்துக்குங்க! எனக்கும் தான் வலிக்குது!
இரண்டும் ஆட்டை நெருங்க... ஆடு இடி முழக்கக் குரலில்...
ஏய் நரியா! ஒன்பது புலிகளைப் பிடிச்சு வரச் சொன்னா, ஒரே ஒரு புலி-யைப் பிடிச்சுண்டு வந்திருக்-கியே! உன்னையும் சேர்த்து விழுங்குகிறேன் பார்!
இதைக் கேட்டு புலி மிரண்டு ஓட...
ஐயோ! செத்தேன்! கல்லிலும், முள்ளிலும் இழுத்துட்டுப் போறியே! நில்லு!
ஆடு வீடு திரும்ப...
என் தங்க ராஜா! என்ன கம்பீரமா நடக்குது! சிங்கக் குட்டி மாதிரி...!
வேதாளம் தந்த வரத்தால் ஆடு துணிவு பெற்றது. கோவிந்தன் சுறுசுறுப்புடன் உழைத்தான்...
உழைத்துப் பாடுபட்டால் என்ன கஷ்டம் வந்தாலும் சமாளிக்கலாம். வேதாளத்-தின் தயவு எதுக்கு?

முற்றும்...

செழியன் தண்ணீர் குடிக்க வருபவனைப் போல் ஆசிரியரிடம் கூறி அனுமதி பெற்று வெளியே வந்தான். குடி நீர்க் குழாய் இருந்த இடத்தில் யாரும் இல்லை. செழியன் அதை எதிர் பார்த்துத்தானே அந்த நேரத்திற்கு வந்திருந்தான். அவசரம் அவசரமாக பையிலிருந்து கரிக் கட்டியை எடுத்தான். வெள்ளை வெளேர் என்று கண்ணைப் பறித்த சுவரில், ''மூஞ்சூறு வாத்தியார் ஒழிக!'' என்று எழுதினான். ஒரு மூஞ்சூறின் படத்தையும் போட்டான்.


இதற்குள் யாரோ வரும் சத்தம் கேட்டது. செழியன் கரிக்கட்டியைத் தூக்கி எறிந்துவிட்டு வகுப்புக்கு வந்து விட்டான்.


''மூஞ்சூறு வாத்தியார்'' என்பது செழியன் படிக்கும் ஆறாவது வகுப்பு ஆசிரியரின் செல்லப் பெயர்தான். அவரது இயற் பெயர் இரகுபதி. அவரது முகம் சற்றுக் கூம்பினது போல் இருக்கும். மேலும் அவர் கணக்கு வகுப்பில் கண்டிப்பாக இருப்பார். கேட்க வேண்டுமா? தன்னை வீட்டுக்கணக்குப் போட்டுக் கொண்டு வராததற்காக கணக்கு ஆசிரியர் இரகுபதி பெஞ்சில் நிற்க வைத்ததற்குப் பழிக்குப் பழி வாங்கி விட்டோம் என்ற நிறைவில் செழியன் மகிழ்ச்சியாக இருந்தான்.

இடை வேளை விட்டது. மதிய உணவு சாப்பிட, நீர் குடிக்க மாணவர்கள் வந்தபோது, செழியன் எழுதியிருந்ததை எல்லா மாணவர்களும் பார்த்தனர். திகைத்தனர். சிலர் மனத்திற்குள் மகிழ்ச்சியடைந்தார்கள். விஷயம் தலைமை ஆசிரியருக்குப் போயிற்று. அவர் தானே வந்து பார்த்தார். பியூன் கப்பையாவை விட்டுச் சுவரில் எழுதியிருந்ததைச் சுரண்டிவிட்டு, மறுபடி வெள்ளை அடிக்கச் சொன்னார்.

இதற்குள் அங்கே வந்து விட்ட ஆசிரியர் கணபதி தன்னைப் பற்றி எழுதி யிருந்ததைப் படித்தார். அவர் கோபம் அடைவார் என்று எதிர் பார்த்தவர்களுக்கு ஒரே ஏமாற்றம். அவர் சிரித்துக் கொண்டார்.

''ரொம்ப நல்லா மூஞ்சூறு படம் வரைஞ்சிருக்கான்'', என்று பாராட்டிவிட்டு, தலைமை ஆசிரியர் பக்கம் திரும்பி ''சார், இதை அழிக்க வேண்டாம். அழிச்சா மறுபடி எழுதலாம்.





எதற்கு வீண் வேலை? இப்படியே இருக்கட்டும். எனக்கு எந்த வித வருத்தமும் இல்லை'' என்று கேட்டுக் கொண்டார்.


''நீர் ஒரு வித்தியாசமானவர் சார்'' என்று சொல்லி விட்டுச் சென்றார் தலைமை ஆசிரியர்.

அன்று மாலை பள்ளி முடிந்தது. கணக்கு ஆசிரியர் இரகுபதி தன்னை அழைப்பதாகத் தகவல் வரவே, மனக் குறுகுறுப்புடன் போனான் செழியன்.

ஆசிரியர் தனியாக அமர்ந்திருந்தார். செழியனைக் கண்டதும், ''செழியா, செய்வன திருந்தச் செய்ய வேண்டும். பத்துக் கணக்கில் இரண்டைப் போட்டு விட்டு மீதியைப் போடாது வந்தாய். தண்டனையாக பெஞ்சின் மேல் நின்றாய். இன்றைக்கு சுவரில் என்னைப் பற்றிக் கரிக்கட்டியால் எழுதும் போது கைக்குட்டையைத் தவற விட்டு விட்டாய். நல்லவேளை. நான் பின்னாலேயே வந்தேன். உடனே எடுத்து வைத்துக் கொண்டேன். இது அங்கேயே இருந் தால் உன் நிலை என்னவாகி யிருக்கும் தெரியுமா?'' என்று பரிவோடு கேட்டு, பையில் இருந்து ஒரு ஒட்டுப் போட்ட கைக்குட்டையை எடுத்து அவனிடம் தந்து, ''இனியாவது செய்வன திருந்தச் செய். அற்பத்தனமான செயல்களைச் செய்தால் கூட திருத்தமாகச் செய்யக் கற்றுக்கொள்'' என்று முடித்தார்.

''சார் இனிமேல் இப்படி அற்பத்தன மான காரியங்களைக் கண்டிப்பாகச் செய்யமாட்டேன் சார், எனக்குப் புத்தி வந்து விட்டது'', என்று விம்மினான் செழியன். அவனைப் பரிவுடன் தட்டிக் கொடுத்தார் இரகுபதி. அவர் ஆசிரியர் அல்லவா?

– எல். அமுதா.



''மொட்டை அடிக்க முடியாத தலை எது?''


''வேற எது? தபால் 'தலை' தான்!''

– சரோஜ் விஸ்வம்.

''என்னடா ராமு கால்லே ஸ்கேலை கட்டிக்கிட்டு ஆற்றுக்கு குளிக்கப் போறே?''


''ஆமும் தெரியாம காலை விடக் கூடாதுன்னு எங்கப்பா சொல்லியிருக்கார்டா!''

– தக்கோலம் ஆ. முஸ்தபா.





மரத்து மேல ஏறின புழுவிற்கு இறங்கத் தெரியலை. அப்ப அது என்ன செய்யும்?
ஒரு இலை மேல உட்கார்ந்துக்கிட்டு இலையுதிர் காலம் வரைக்கும் காத்திருக்கும்!
கி.பிரகாஷ்
பூவுக்கு பிடிச்ச நாடு எது?
“நார்வே!” தான்!!
குடந்தை.சுவீட்ரவி
பேனா கத்தி பார்த்தியா?
பேனாக்குத்தான் வாயே இல்லையே. பின்ன எப்படிக் கத்தும்?
ப.கணேஷ்
சிரிப்...
பட்டாசு வாங்கித் தரலைன்னு கோபிச்சிக்கிட்டு உங்க பையன் வீட்டை விட்டு ஓடிட்டா னாமே, எங்க போனான்?
சிவகாசிக்கு!
நோபல் பரிசை ஏன் எப்பவும் வயசானவங்களுக்கே கொடுக்கிறாங்க?
அந்தப் பரிசுக்குப் பேரே 'NO-பல்', பரிசு ஆச்சே...!
சீர்காழி வி.ரேவதி



தரட்டுமா?

ஒரு நாள் சுரேஷ், ராமு வின் வீட்டிற்கு வந்தான். ''ராமு! நாளைக்கு எங்கள் வீட்டிற்கு வாடா! எனக்குப் பிறந்த நாள்'' என்று அழைத் தான். வெளியே செல்லும் போது அங்கேயிருந்த மீன் தொட்டியைக் கண்டான்.

''அடடே! எவ்வளவு அழகான மீன்கள்! தங்கமீன், தேவதை மீன், கறுப்பு மாலி, கபீஷ். இந்த மீன் தொட்டி கூட அழகாக இருக்கிறதடா'' என்று சுரேஷ் கூறினான்.

''உனக்கு மீன் வளர்ப்பில் ஆசையா?'' என்று வியந்தான் ராமு. ''ஒரு நிமிடம் இரு. இதோ வருகிறேன்'' என்று உள்ளே ஓடினான்.

இத்தனை அழகழகான மீன்கள் ராமு விடம் மட்டும் இருக்கிறதே என்று பொறாமையால் வெந்த சுரேஷ் அவசர அவசரமாக மாடத்தில் இருந்த எறும்பு மருந்தை எடுத்து மீன் தொட்டியில் கொஞ்சம் கொட்டி விட்டு, டப்பாவை மீண்டும் அதே மாடத்தில் வைத்தான்.

உள்ளே சென்று திரும்பிய ராமு விடம் சாதுவாக விடைபெற்றுச் சென் றான் சுரேஷ்.

மறுநாள் பள்ளியில் சுரேஷ் நுழைந்த போதே, அவனுடைய நண்பர் கள் ஓடோடி வந்தனர். ''டேய் சுரேஷ், உனக்கு விஷயம் தெரியுமா? ராமு வைத் திருந்த மீன்கள் எல்லாம் செத்துவிட்டன வாம்!'' என்றார்கள். ''ஐயோ பாவம்'' என்று சுரேஷின் வாய் சொன்னாலும், மனம் குதூகலித்தது. உள்ளே வகுப் பறைக்குச் சென்றால் அங்கே ராமு கேவிக் கேவி அழுது கொண்டிருந்தான். அதற்குள் வகுப்பாசிரியரும் வந்து விட்டார். ''என்ன ராமு? ஏன் அழு கிறாய்?'' என்று கேட்டார்.

''சார், நேற்று சுரேஷ் எங்கள் வீட் டிற்கு வந்து இன்றைக்கு அவனுக்குப் பிறந்த நாள் என்று என்னை அழைத் தான். அவன் வீட்டிற்குப் போகும் சமயம் என் மீன் தொட்டியில் இருந்த மீன்களைப் பார்த்து ஆசையுடன் ''நன் றாக இருக்கிறது'' என்று பாராட்டினான் சார். அதனால் நான் அம்மாவிடம் ஓடிச் சென்று அம்மா இதில் இரண்டு தங்க மீன்களையும், இரண்டு தேவதை மீன் களையும் சுரேஷிற்குத் தரலாமா? என்று கேட்டேன். அம்மாவும் 'சரி' என் றார்கள். ஆனால்... ஆனால்....'' ராமு துக்கம் தாளாமல் கேவினான். மற்ற மாண வர்கள் அனைவரும் ''மீன்கள் எல்லாம் செத்து விட்டன சார், அதனால்தான் ராமு அழுகிறான்'' என்றனர்.

''நான் கஷ்டப்பட்டு வளர்த்த மீன் கள் இறந்தது கூட எனக்கு வருத்தமாக இல்லை சார். ஆசையாகக் கேட்ட சுரேஷின் பிறந்த நாளில் அதைப் பரிசாகத் தரமுடியவில்லையே என்று தான் வருந் துகிறேன்'' என்றான் ராமு.

ராமுவின் நல்ல குணத்தை அறிந்த சுரேஷ் வெட்கித் தலை குனிந்தான்.

– வலங்கைமான் நூர்தீன்.

எப்பப்பா மாறுவே?

சிவா வீட்டினர் அங்கு குடிவந்து இரண்டு மாதமாகிறது. அன்று சிவாவின் அம்மா அடுத்த வீட்டு அக்காவுடன் பேசிக் கொண்டிருந்தாள். அவர்களின் பேச்சு, சிவா வீட்டிலிருந்து நான்கு வீடு தள்ளித் தேங்கி நிற்கும் சாக்கடைக் குழி பற்றியதாய் இருந்தது. அதிலிருந்துதான் கொசு பெருகி தொல்லை தருவதாகப் பேசிக் கொண்டனர்.

அது உண்மைதான். அந்த சாக்கடைக் குழி, கொசுப் பண்ணையாய் மாறியிருந்தது. இரவில் பெருந்தொல்லையாய் இருந்தது. எலக்ட்ரிக் டெஸ்ட்ராயர், கொசு வலை என்று எதனாலும் கொசுக்களைக் கட்டுப்படுத்த முடியாமல் அப்பகுதியினர் திணறினர். தெரு முனையில் குப்பைத் தொட்டி இருப்பினும் அப்பகுதி மக்கள், அடைத்திருந்த அந்த சாக்கடையை ஒட்டிய திட்டிலேயே குப்பையைக் கொட்டிப் படு நரகமாக்கினர். எத்தனை புகார் கொடுத்தும் நோய் வளர்க்கும் அக்குழியை நகராட்சியினரும் கண்டு கொள்ளவே இல்லை.

அப்பகுதி மக்களும், நகராட்சியினரைக் குறை கூறித் திரிவதிலேயே இன்பம் கண்டனர்.

சிவா தேங்கிக் கிடந்த சாக்கடையை எப்படி வடியச் செய்யலாம் என்று யோசித்தான். தெரு முடியும் இடத்தில் ரோட்டில் பெரிய பாதாள சிமென்ட் சாக்கடை இருந்தது. தெருச் சாக்கடையில் தேங்கி நிற்கும் நீரை அதில் வடியச் செய்தால் போதும். நடுவில் உள்ள ஏதோ தடையை விடுவிக்க வேண்டும்.

அப்பாவிடம் ''சாக்கடை நீரை நானே வெட்டி தேங்கி நிற்காமல் வடியச் செய்கிறேனே?'' எனக் கேட்டான்.

அப்பா அனுமதித்தார். தேங்கியிருக்கும் அகத்த நீரை சிமென்ட் பாதாள சாக்கடை வரை சிறியதாக வாய்க்கால் போன்று வெட்டி விட மண்வெட்டி தேவை. அது சிவா வீட்டில் இல்லை. எனவே, நாலாவது வீட்டில் கேட்டு வாங்கி, வெட்ட ஆரம்பித்தான்.

சாக்கடை நீர் தேங்கியிருந்த குப்பை மேட்டை



ஒட்டி உள்ள வீட்டின் சிறுவன் நந்தா, குப்பையை அங்கு வந்து கொட்டினான்.

அதைப் பார்த்த சிவா, ''தம்பி! இங்க இனிமே குப்பையைக் கொட்டதேப்பா. அதோ அந்தத் தொட்டியில கொட்டினால், நகராட்சி துப்புறவுத் தொழிலாளர்கள் எடுத்துச் சென்று விடுவார்கள். இங்கே கொட்டுவதால், வீணான நாற்றமும் ஈ, கொசுவும் வர நாமே வழி செய்கிறோம்....'' என்றான்.

'சரி. சிவா...' என்று நந்தா சொல்லி முடிக்குமுன் அவன் அப்பா வெளியில் வந்தார்.

''யாரது.... சாக்கடையை வெட்டறது...? அட! நம்ப புது வீட்டுப் பையன்ல...? நீ எப்பப்பா முனிசிபாலிடி பணியாளா மாறினே....?'' என்று கேட்டார் கிண்டலாக.

''நம்ம சுகாதாரத்துக்காக இந்த சுத்தம் செய்யும் வேலையை நாமே செய்யக்கூடாதா ஐயா.....?''


''அட நாம.... ஏன் செய்யணும் கிறேன்...? உங்கப்பா நல்லா சம்பாதிக்கிறார்... நீ பாட்டுக்கு நல்லா படிச்சிட்டு, ஒழிஞ்ச போதுக்கு ஜாலியா டீ.வி., டெக்னு பார்த்துக்கிட்டு இருப்

எஸ். அமுதன்

பியா... பெரிசா சாக்கடையை வெட்ட வந்துட்டியே? நகராட்சிக்காரங்களை நாம் நேரில் போய்ப் பார்ப்போம். ஏதோ ஐந்து பத்து கேட்டால் தந்திடுவோம்.''

''இத பாருங்க! அவங்களுக்கு என்ன கஷ்டமோ. எத்தனை புகார் தந்தும் இது வரை யாரும் வரலே. இந்த அடைப்பை எடுத்துட்டு, இந்த சாக்கடைக்குக் கால்வாய் வெட்டி, பெரிய சாக்கடையோட சேர்த்துட்டால் எல்லாம் சரியாயிடும், எல்லாத்துக்கும் அரசாங்கத்தின் கையை எதிர்பார்த்துக்கிட்டே இருந்தால் நமக்கு விடிவே வராது'' 'என்று சிவா வேலையில் முனைந்தான். கூடவே அவனுடைய தந்தையும் ஒரு மண்வெட்டியுடன் வந்து சேர்ந்து கொண்டார். இவர்களைப் பார்த்ததும் தெருவில் இருந்த மற்றவர்களும் ஒவ்வொருவராக உதவ முன் வந்தனர். ஒரு மணி நேரத்தில் எல்லாம் முடிந்தது. குப்பையை அதற்குரிய தொட்டியிலேயே கொட்ட எல்லோரும் ஒப்புக் கொண்டனர்.

சிவாவைப் போற்றாதவர்கள் இல்லை!



எங்கேடா குடை?



கந்தவேல் ஒன்பதாம் வகுப்பு மாணவன். அவன் சொந்த ஊரான சிறு நாயக்கன்பட்டியில் ஆரம்பக் கல்வியை முடித்துவிட்டு சின்னாளபட்டி மேல் நிலைப்பள்ளியில் படித்து வந்தான். சிவநாயக்கன்பட்டியிலிருந்து ஒரு கிலோமீட்டர் தூரம் வரை நடந்து வந்து வெள்ளோட்டில் பஸ் ஏற வேண்டும். கந்தவேலும் அவனது நண்பர்கள் சில ரும் டவுன் பஸ் ஏறி பள்ளிக்கு வருவார்கள்.

அன்று மழை இலேசாகத் தூறிக் கொண்டிருந்தது. பஸ்ஸில் அதிகக் கூட்டம். கந்தவேலும் நண்பர்களும் பஸ்ஸில் ஏறினார்கள். நூறு ரூபாய் நோட்டைக் கொடுத்துப் பயணி ஒருவர் கண்டக்டரிடம் தகராறு செய்து கொண்டிருந்தார்.

ஐந்து ரூபாய் நோட்டு ஒன்றை நீட்டி 'சின்னாளபட்டி ஒண்ணு' என்றான் கந்தவேல். கண்டக்டர் டிக்கெட்டையும் மீதிப் பணத்தையும் அவன் கையில் திணித்துவிட்டு 'டிக்கெட், டிக்கெட்' என்று குரல் கொடுத்தவாறே நடந்தார்.

என்ன ஆச்சர்யம்! கண்டக்டர் கொடுத்த மீதிப் பணத்தில் நான்கு ரூபாய் இருபது பைசா இருப்பதற்குப் பதிலாக ஒன்பது ரூபாய் இருபது பைசா இருந்தது. அவன் பத்து ரூபாய் கொடுத்து விட்டதாக அவர் நினைப்பு. ஐந்து ரூபாய் திடீர் வரவு! கண்டக்டரிடம் அந்த அதிகப்படியான ஐந்து ரூபாயைக் கொடுத்துவிட நினைத்து, 'சார்' என்று குரல் கொடுத்தான் கந்தவேல். அவன் கூப்பிட்டது அவர் காதில் விழவில்லை. முன்னே சென்று விட்டார். கந்தவேலுவுக்கு அதற்குள் ஒரு மனமாற்றம் ஏற்பட்டது!

வலிய வந்த பணத்தை ஏன் திரும்பக் கொடுக்க வேண்டும். திருடுவதும் ஏமாற்றுவதும்தான் தவறு. இது என்னுடைய தவறில்லையே? கண்டக்டரின் கவனக்குறைவால் ஏற்பட்ட தவறு தானே? 'இது எப்படி என்னுடைய குற்றமாகும்?' என்று பலவாறு சிந்தித்த கந்தவேல் மனம் மாறினான். பணத்தைக் கண்டக்டரிடம் கொடுக்கவில்லை. அது அன்று தனக்கு அடித்த அதிர்ஷ்டம் என்று நினைத்துக் கொண்டான்.

காந்தி கிராமம் வந்தது. பஸ்ஸை விட்டுப் பலர் இறங்கினர். இதுவரை நெரிசலில் நின்று கொண்டிருந்த கந்தவேல் காலியான ஸீட் ஒன்றில் வந்து உட்கார்ந்து கொண்டான்.

எஸ். அருள்நம்பி

அன்று நண்பர்களுக்குத் தெரியாமல் அந்த ஐந்து ரூபாய்க்கு தனக்குப் பிடித்தமான தின்பண்டங்களை வாங்கிச் சாப்பிட்டு மகிழ்ந்தான்!



இரவு ஏழு மணி.


கந்தவேல் வீட்டுப் பாடம் படித்துக் கொண்டிருந்தான். வெளியில் மழை பெய்து கொண்டிருந்தது.


''ஏய், பொன்னம்மா. குடையை எடு வெளியே. கடை வரைக்கும் போயிட்டு வரேன்'' - கந்தவேலின் தந்தை ராமசாமி தன் மனைவியிடம் சொன்னார்.

''கந்தவேலு, பள்ளிக்கூடத்துக்குக் குடை கொண்டு போனியே? எங்கேடா?''

கந்தவேல் திருதிருவென விழித்தான். எங்கு வைத்தோம் என்று அவனுக்குச் சட்டென்று ஞாபகத்திற்கு வரவில்லை. வீட்டிலிருந்து பஸ் ஸ்டாப் வரை குடையைப் பிடித்துக் கொண்டு சென்றது நினைவு இருந்தது. பஸ்ஸிலிருந்து இறங்கும்போது குடையைத் திரும்ப எடுக்கவில்லை. ஆமாம். குடையை பஸ்ஸிலேயே வைத்துவிட்டு மறதியாக இறங்கிவிட்டது இப்போதுதான் ஞாபகத்திற்கு வந்தது.

குடையை யார் பார்த்தார்களோ? எடுத்தவர்களுக்கு அது தங்களுடையது இல்லை என்பது நன்றாகத் தெரியும். அதற்காக உடனே கொண்டு வந்து தேடிக் கொடுப்பார்களா? கிடைத்த வரை லாபம் என்றுதானே எடுத்துக் கொண்டு போவார்கள்? ஐந்து ரூபாய்க்கே அவன் நாணயமின்றி நடந்து கொண்டானே? இந்த அழகில் மற்றவர்கள் மட்டும் நாணயமாக நடந்து கொள்ள வேண்டும் என்று எதிர்பார்ப்பது எந்த விதத்தில் நியாயம்? மற்றவர்கள் நியாயமாக நடக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பவர்கள், முதலில்





மின் சைக்கிள்!

ஜெர்மனியில் புதிதாக வந்துள்ள சைக்கிளை மிதிக்க வேண்டியதில்லை. தானே ஓடும்! எப்படி? சூரிய ஒளியை மின் சக்தியாக மாற்றும் கருவி சைக்கிளில் பொருத்தப்பட்டுள்ளது. அதில் தயாராகும் மின்சார ஆற்றலில் ஓடும் இதன் வேகம் மணிக்கு 45 கி. மீ

- ஏ. ஹரிகிருஷ்ணன், மேலப்பாளையம்.

மிசா என்பது...

மிசா (MISA) வின் கீழ் கைது செய்யப்பட்டார்கள் என்று செய்தியை அடிக்கடி படிக்கிறோம். இந்த மிசா என்பது என்ன? MISA என்பது MAINTANANCE OF INTERNAL SECURITY ACT. அதாவது உள்நாட்டுக் கலகங்கள் ஏற்படாமல் தடுக்கும் பொருட்டு சம்பந்தப்பட்டவர்களைக் கைது செய்ய வகை செய்யும் சட்டமே மிசா என்பது.

- வ. அமுதா, பட்டுக்கோட்டை.



அண்டார்க்டிகா!

◆ அண்டார்க்டிகா கண்டத்திற்கு கிரிஸ்டல் டெசர்ட் என மற்றொரு பெயர் உண்டு.

◆ அண்டார்க்டிகாவில் பிரிட்டன் சோதனை நிலையம் அமைத்துள்ளது. இது வருடத்திற்கு 1 1/2 மீட்டர் பூமிக்குள் இறங்கி வருகிறதாம்...!

- இரா. திலீப், திருச்சி - 14.



தாங்கள் நியாயமாக நடந்து கொண்டு வழிகாட்ட வேண்டும் என்று காந்தி கூறியது எத்தனை உண்மை என்று எண்ணினான் கந்தவேல்.

அவனுடைய அப்பா மிகவும் கோபக்காரர். ஒன்றும் பேசாமல் அப்படியே பயந்து போய் நின்றான் கந்தவேல்.

''கேட்கிறது காதிலே விழுகுதா? எங்கேடா குடை?'' - அவர் அதட்டினார்.

''அது சிங்கப்பூர் குடை - விலை அதிகம். பள்ளிக்கூடத்திலே மறந்து வச்சிட்டியா?''

''இல்லேம்மா. பஸ்ஸிலேயே மறந்து வச்சிட்டேன்.''

''படிக்கிறவனுக்கு இவ்வளவு ஞாபகமறதியா?'' என்றவாறே கந்தவேலை செம்மையாக உதைத்தார் அப்பா.

கந்தவேல் அழவில்லை. காலையில் தான் செய்த தவறுக்கு அன்றே தண்டனை கிடைத்து விட்டதாக நினைத்தான்.

மறுநாள் அதே பஸ்ஸில் ஏறும் போது, ''தம்பி, இந்தக் குடை உன்னுடையதா?'' என்று அதே கண்டக்டர் அருகில் வந்து கேட்டார்.

''ஆ... ஆமா சார்.''

''நீ பூஞ்சோலை ஸ்டாப்பிலே இறங்கிப் போன உடனே உன் சீட்டிலே இந்தக் குடையைப் பார்த்தேன். உடனே உன்னைக் கூப்பிட்டேன். உனக்குக் கேட்கலே. இந்த பஸ்ஸிலேதானே நீ வழக்கமா வருவேன்னு பத்திரமா எடுத்து வச்சுக் கொண்டு வந்தேன். இந்தா பிடி'' - கனிவுடன் அவனிடம் கொடுத்தார், கண்டக்டர்.

காந்தியடிகள் வலியுறுத்திய தனி மனிதன் நாணயம், நேர்மை இதோ கண்டக்டரிடம் இருக்கிறது. ஆனால் தன்னிடம்...?

தன் இழி செயலை நினைத்து வெட்கித் தலைகுனிந்து வேதனைப் பட்டான் கந்தவேல்.



கீரி அண்ணன் வரான்!

எலிக் குடும்பம் ஒன்று வரப்பு ஓரம் சந்தோஷமாக வாழ்ந்து வந்தது.

ஒரு நாள் இரை தேடி அந்தப் பக்கமாக வந்த பாம்பு இந்த எலிகளைக் கண்டு விட்டது. நமக்குச் சரியான விருந்து கிடைத்தது என்று எண்ணி மகிழ்ந்தது. ஆனால், பாம்பினை தூரத்திலேயே பார்த்து விட்ட எலி, குட்டி எலிகளை எல்லாம் வளைக்குள் அழைத்து, வளையின் முகப்பை ஒரு கல்லினால் அடைத்து விட்டது. கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லையே என்றெண்ணிய பாம்பு, எப்படியும் இந்த எலிகளைப் பிடித்தே தீருவது என முடிவெடுத்து, வளைக்கு வெளியே காவல் இருந்து விட்டது.

இரண்டு, மூன்று நாட்களாகியும் எலிகள் வெளியே வரவே இல்லை!

எலிகள் வளையை விட்டு வெளியே வருவதை நிறுத்தி விட்டதைக் கண்ட பாம்பு, அவைகளைப் பிடிக்க ஒரு தந்திரம் செய்தது. வளைக்குச் சற்று தள்ளி சென்று செத்தது போல படுத்துக் கொண்டது. பாம்பு போய் விட்டதா என்பதனைப் பார்க்க குட்டி எலி ஒன்று வளையின் முகப்பிற்கு வந்தது. அங்கே பாம்பைக் காணாததால், நைசாக வெளியே எட்டிப் பார்த்தது.

பாம்பு சற்று தள்ளி அசைவற்றுக் கிடப்பதை கண்டு, நேராக தாய் எலியிடம் சென்று, ''அம்மா, அம்மா, அந்த பாம்பு பசியினால் செத்தே விட்டது. வளைக்குச் சற்று தள்ளி கிடக்கிறது'' என்று கூறியது. அதைக் கேட்ட தாய் எலி வெளியே வந்து பார்க்க, பாம்பு அசைவற்றுக் கிடந்தது. ஆனாலும் தாய் எலிக்கும் சந்தேகம் இருந்தது.

எனவே வளைக்குள் சென்று ஒரு குட்டி எலியிடம் ஓர் இரகசியம் சொன்னது. பின் இரண்டு எலிகளும் வெளியே வந்தன. குட்டி எலி உரக்க ''அம்மா, அதோ ஒரு பாம்பு செத்துக் கிடக்கிறது'' என கத்தியது. அதற்குத் தாய் எலி ''சரி நீ உள்ளே வா, அதோ கீரி அண்ணன் வருகிறான். அவன் அதைச் சாப்பிட்டுக் கொள்வான்'' என பதிலுக்குக் கூறியது.

கீரி அண்ணன் வருகிறான் என்பதைக் கேட்ட பாம்பு, தப்பித்தோம், பிழைத்தோம் என ஓடி விட்டது. அதன் பின் அந்தப் பாம்பு, எலிகள் இருந்த வயல் பக்கம் வரவேயில்லை. எலிகளும், பாம்பு பயமின்றி நிம்மதியாக வாழ்ந்தன.

– நூர்தீன்

டேய், தபால் பெட்டி!



அன்று ஞாயிற்றுக் கிழமை!

சரவணனின் அம்மா, சமையல் அறைக்குள் ஏதோ வேலையாய் இருந்தாள்.

இதுதான் நல்ல சந்தர்ப்பம்.

சரவணன் அறைக்குள் நுழைந்து, பீரோவிற்குப் பின்னால் மறைத்து வைத்திருந்த ஒரு துணிப் பையைத் தூக்கிக் கொண்டு வெளியே வந்தான்.

அவன் தாய் இன்னும் சமையல் அறைக்குள் பாத்திரங்களை உருட்டிக் கொண்டிருந்தாள்.

பூனையாய் மிதந்து வாசலுக்கு வந்தான் சரவணன்.

நொடியில் வீட்டு வாசலை விட்டு இறங்கி, வீதிக்குத் தாவினான்.

யாரும் தன்னைப் பார்த்து விடுவார்களோ என்ற அச்சத்தில் திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டே, சாலையில் தலைதெறிக்க வேகமாய் நடக்கத் துவங்கினான்.

காய்கறிகள் வாங்க மார்க்கெட்டிற்குச் சென்ற அவன் தந்தை ஒரு திருப்பத்தில் சரவணனைக் கண்டுவிட்டார்.

அவருக்குத் தூக்கிவாரிப் போட்டது.


''எங்கே சரவணன் ஒரு துணிப் பையைத் தூக்கிக் கொண்டு போகிறான்?''

மகனைப் பின்தொடர்ந்தார் அப்பா!

சரவணன் ஊரின் எல்லையை அடைந்தான். குவியல் குவியலாய்ப் போடப்பட்டிருந்த ஒரு குடிசைப் பகுதிக்குள் நுழைந்து ஒரு குடிசைக்கு முன்வந்து ஒருகணம் தயங்கி நின்றான்.

''சங்கர்! சங்கர்'' என்று குரல் கொடுத்தான்.

சில நொடிகளில் கதவு திறக்கப் பட்டு, ஒரு பரட்டைத் தலைச் சிறுமி வெளியே எட்டிப் பார்த்தாள்.




“ஸ்கூல் லீவு விட்ட ரெண்டு மாசமும் அப்பா - அம்மா கையால அடி வாங்கவே இல்லை.''

“அவ்வளவு சமர்த்தா இருந்தியாடா...?''

“ஊஹூம்; லீவு விட்ட மறுநாளே பாட்டி ஊருக்குப் போயிட்டு நேற்று தான் திரும்பியே வந்தேன்!''

– சீர்காழி வி. ரேவதி



''யாரு?''

''சங்கர் இல்லையா?''

''சங்கர் என் அண்ணன்தான். என் அம்மா கூட இன்னைக்கு அவன் கொத்து வேலைக்குப் போயிருக்கான்! ஏன்?''

''நான் சங்கரோடத்தான் படிக்கிறேன். என் பேர் சரவணன்! சங்கர் தினமும் கிழிஞ்ச சட்டையும், கிழிஞ்ச டவுசருமா பள்ளிக்கூடத்துக்கு போட்டுக்கிட்டு வர்றான். பசங்கள்லாம் அவனை 'டேய்! தபால் பெட்டி', 'தபால் பெட்டி'ன்னு கிண்டல் பண்றானுங்க! அதனால் எனக்குப் பத்தாத சட்டை, டவுசரெல்லாம் இந்தப் பையில கொண்டாந்திருக்கேன். இதையெல்லாம் என் அம்மா பாத்திரக்காரன் கிட்டதான் போடுவாங்க! இதை சங்கருக்கு குடுத்தா, அவன் மானம், மரியாதையைக் காப்பாத்துமேன்னு கொண்டு வந்திருக்கேன். அவன் வந்தவுடனே குடுத்திரு. பள்ளிக்கூடத்துக்கு வந்து இந்த சட்டை டவுசரெல்லாம் சரவணனோடதுன்னு சொல்ல வேண்டாம்னு சொல்லிடு! அப்புறம் பசங்க, 'ஓசி டவுசர்' ஓசி சட்டைன்னு சங்கரைக் கிண்டல் பண்ணுவானுங்க! நான் வர்றேன்.''

துணிப்பையை அந்தச் சிறுமியிடம் கொடுத்து விட்டு, சட்டென்று திரும்பி நடந்த சரவணனை ''ஏய் சரவணா'' என்ற அவன் தந்தையின் குரல் திடுக்கிட்டு நிற்கச் செய்தது.

அந்தக் குடிசையின் மறைவில் நின்று அனைத்தையும் கவனித்துக் கொண்டிருந்த அப்பா வெளியே வந்தார்.

புன்னகையோடு, சரவணனின் முதுகில் ஆதரவாய்த் தட்டிக் கொடுத்தார். அவனோடு மெல்ல நடந்தார்.

''சரவணா! நீ நல்ல காரியம்தான் செய்திருக்கே! ஆனால் இந்த விஷயத்தை நீ என்கிட்டேயும், அம்மாகிட்டேயும் முன்னமே சொல்லியிருக்கலாமே! இந்தச் சின்ன வயசுல பிறரோட கஷ்டத்தைப் பார்த்து இரக்கப்படுற உன் தங்க மனசை நாங்க பாராட்டாமலா போயிடுவோம்! குழந்தைகள் செய்யத் துடிக்கிற உதவிக்கு, எந்தப் பெற்றோரும், எப்பொழுதும் தடையா இருக்கவே மாட்டாங்க சரவணா! இனிமே எதைச் செய்தாலும், அப்பா, அம்மாகிட்டே கேட்டுக்கிட்டு செய்யணும்! தெரிஞ்சுதா?'' என்றார் அப்பா.

சரவணின் முகம் பளிச்சென்று பிரகாசமடைந்தது.

''உங்க பையன் படிப்புல ரொம்ப 'வீக்'கா? ஆங்கில எழுத்து 'X' ஐக் காட்டினால், 'தப்பு'ன்னும், ஆங்கில எழுத்து 'O' வைக் காட்டினால், 'பூஜ்யம்'னும் சொல்றான்!''

– சீர்காழி வி. ரேவதி





சிறுத்தை வருது!

"டேய் அந்தக் குரங்கைப் பாருடா!"

சந்தோஷ் பிருதியில் கத்தினான் பாபு. பலாப் பழத்தைப் பிளந்து, சுளை களை எடுத்துத் தன்னுடைய குட்டிக்கு ஊட்டிக் கொண்டிருந்தது அம்மாக் குரங்கு. வள்ளி மலைக் காட்டுக்கு சுற்று லாப் பயணம் வந்திருந்த பள்ளி மாண வர்கள் இந்தக் காட்சியைப் பார்த்து ஆச் சரியப்பட்டனர்.

உயர்ந்து வளர்ந்த மரங்களும், அவற் றில் பின்னிப் படர்ந்த கொடி களும், பல வண்ணங்களில் பூத்துச் சிரித்து, தலை அசைக்கும் மலர்களும், தேன் குடிக்க வட்டமிடும் வண்டுகளின் ரீங்காரமும், பாடும் பறவைகளும் அவர்களை மயக்கின.

"இந்தக் காட்டுல புலி, சிங்கம் இருக்குமாடா?" ஆச்சரியமும், பயமும் கலந்த குரலில் கேட்டான் குமார்.







எல்லா மாணவர்களும், காடனையே பார்த்தனர். அவன், அவர்களுக்கு வழிகாட்ட வந்த காட்டுவாசிச் சிறுவன். மிகவும் துணிவு மிக்க பையன். அவனுக்குத் தெரியாத இடமே இல்லை.

''இந்தக் காட்டுல சிங்கம் கிடையாதுங்க! ஆனா, சிறுத்தைப் புலி இருக்குதுங்க!'' என்றான் காடன்.

''சிறுத்தையை நாங்க பாக்கலாமா?'' ஆவலோடு கேட்டான் பாபு.

''காட்டுக்குள்ள, ரொம்பத் தொலைவு போனா பாக்கலாம்!'' என்றான் காடன்.

''டேய், எங்களை அங்க கூட்டிட்டுப் போ!'' என்றான் சங்கர், அதிகாரத்துடன்.

''அவ்வளவு தூரம் உங்களால் நடக்க முடியாதுங்க'' - காடன் பணிவாகச் சொன்னான்.

''அந்தக் கவலை உனக்கு வேண்டாம். சொன்னபடி செய்டா!''

வேணு சீனிவாசன்

ஆத்திரத் தோடு கத்தினான் சங்கர். பள்ளியிலேயே சங்கர் ரொம்ப வால்! துடுக்காக, எவரையும் எடுத்தெறிந்து பேசுபவன்.

கறுப்பான உடம்பும், வெள்ளைப் பற்களும் பரட்டைத் தலையும், சட்டை இல்லாத மார்புமாக இருந்த காடனைப் பார்க்கவே சங்கருக்கு அருவருப்பாக

இருந்தது. ஆனாலும் இந்தக் காட்டில் வழிகாட்ட அவனை விட்டால் வேறு ஆளும் இல்லை. அதனால் பொறுத்துக் கொண்டான்.

எல்லோரும் புலியைப் பார்க்க விரும்பியதால் காடன் அவர்களைக் காட்டு வழியே அழைத்துப் போனான். சிறிது தூரம் சென்றதும் காட்டுப் பாதையில் இருந்து விலகி கரடு முரடான குத்துப் பாறைகளும் முட்களும் நிறைந்திருந்த பாதை வழியே அவர்களை அழைத்துப் போனான் காடன். கூரான கற்களில் நடக்க முடியாமல் அவர்கள் திணறினர். ஷூக்கள் கிழிந்தன.

''ஏய் காட்டுப் பயலே வேணும்னே எங்களை இந்தக் கல்லுல நடக்க வெச்சி பழி வாங்கறியா?'' கத்தினான் சங்கர்.

''தப்பா எடுத்துக்காதீங்க அண்ணன்மார்களே! நேர் பாதையிலே போனால் ரொம்ப ஆபத்து வந்துடும்! இது சிறுத்தைங்க உலவுகிற இடம். ஜாக்கிரதையா வரணும்!'' என்று பொறுமையாகச் சொன்னான் காடன்.

''ஆ! பத்து!'' என்று கிண்டலடித்தான் சங்கர். மாணவர்கள் உரக்கச் சிரித்தனர்.

''இங்கே பாம்பு அதிகமுங்கோ! மரங்களின் கீழே நடக்கும் போது கிளையிலே இருக்கும் பாம்பு நம் தலை மேலே விழுமுங்கோ!'' என்று மேலும் எச்சரித்தான் காடன்.


''பரீட்சை ஹால்ல பக்கத்துப் பையன் கூட என்னடா பேச்சு?''

''சந்தேகம் கேட்டேன் சார்!''

''என்ன சந்தேகம்...?''

''இன்னைக்கு சயின்ஸ் பரீட்சையா, கணக்கு பரீட்சையான்னு சார்!''

- சீர்காழி வி. ரேவதி.



''ப்பூ'' இவ்வளவுதானா? அதையும் பார்க்கலாம் என்று வீராப்புடன் கிண்டலடித்த சங்கர், காட்டுப் பாதையிலேயே வந்தான்.

மற்ற மாணவர்கள் கை தட்டி அவனைத் தூண்டி விட்டனர். அப்போது திடீரென்று சிறுத்தையின் உறுமல் சத்தம் அருகில் கேட்டது! எல்லோரும் பயந்து அலறினர். கரடு முரடான கற்களில் நடப்பதே கஷ்டம்! புலியிடம் இருந்து தப்பிக்க ஓட முடியுமா?''

''பாத்தீங்களா! நீங்கள்ளாம் வகையா மாட்டிக்கிட்டீங்க! நான் சுலபமா தப்பிச்சிடுவேன். இதோ ஒரே ஓட்டமா ஓடப் போறேன்!'' என்றான் சங்கர் கர்வமாக.

''காடனை நம்பி இந்த கரடு முரடான வழியில் வந்து மாட்டிக் கொண்டோமே!' என்று எல்லோரும் வருந்தினர்.

''என்னாங்கோ! சிறுத்தையைப் பார்க்க ஆசைப் பட்டீங்கோ! இப்ப பயந்தா எப்படி?'' என்றான் காடன்.

''சிறுத்தையைப் பாக்காத போது இருந்த ஆவல், அதன் உறுமலைக் கேட்டதும் பயமா மாறிடிச்சி'' என்றான் பாபு.

''பயப்படாதீங்க! அது நம்ம கிட்ட வராது!'' என்றான் காடன் சிரித்துக் கொண்டே.

''ரீல் விடறான் காட்டுப்பையன்! நம்பாதீங்க!'' என்றான் சங்கர் அவசரமாக.

''ஏன் வராது? காரணம் சொல்லு!'' என்றான் குமார்.

''இவரு மந்திரம் போட்டுட்டாரு. அதனால வராது!'' என்று கேலியாகச் சொன்னான் சங்கர்.

''புலியோட பாதம் ரொம்ப மெத்து மெத்துன்னு இருக்கும். கரடு முரடான கல்லு மேல நடந்தா ரத்தம் வரும். அதனால இந்தப் பக்கம் வராதுன்னு தெரிஞ்சிதான் உங்களைக் கூட்டி வந்தேன்!'' என்றான் காடன்.

''சும்மா பொய் சொல்றான்! உயிர் மேலே ஆசை இருந்தா மண் பாதைக்கு

வந்துடுங்க!'' - நண்பர்களை அழைத்தான் சங்கர்.

யார் சொல்வதைக் கேட்பது என்று புரியாமல் மாணவர்கள் குழம்பினர். புலியின் உறுமல் கேட்டது! பயம் வயிற்றைப் பிசைந்தது!

''புலி இருக்குற இடத்துல ராத்திரி தங்கும் போது, முள் செடிகளை சுத்தி பரப்பி வெச்சிட்டு உள்ளே இருப்போம்! முள்ளு பாதத்துல ஏறிக்கும்னு அதுக்குத் தெரியும்! அதனால வராது!'' என்றான் காடன்.

அப்போது சிறுத்தைப் புலி ஒன்று புதரில் இருந்து வெளியே வந்தது! ஒரே தாவலில் பாறை மீது ஏறி நின்றது! சிறுத்தையைப் பார்த்த சங்கர் தலை தெறிக்க மண்பாதையில் ஓட ஆரம்பித்தான்.

''அங்க ஓடாதீங்க! சிறுத்தை புடிச்சிரும்!'' என்று கத்தினான் காடன்! சங்கர் ஓடுவதைப் பார்த்த சிறுத்தை அவனைத் துரத்த ஆரம்பித்தது.

தாவித் தாவி பின்னால் ஓடி வரும் சிறுத்தையைப் பார்த்த சங்கருக்கு பயத்தினால் தலை சுற்றியது! மூச்சு இரைத்தது. வியர்வை வெள்ளமாய்க் கொட்டியது.

இதே நேரத்தில் குதிரையின் வேகத்தில் அங்கே ஓடி வந்த காடன், சங்கரை இழுத்துக் கொண்டு கற்களின் நடுவே ஓட ஆரம்பித்தான்.

சிறுத்தை சிறிது தொலைவு அவர்களைக் கற்களிலும் தொடர்ந்து வந்தது. பிறகு நின்றது! திரும்பிப் போய் விட்டது! விலங்குகளைப் பற்றிய காடனின் அறிவுத் திறனை அப்போது தான் மாணவர்கள் உணர்ந்தனர்.

தன்னுடைய பழைய செய்கைகளை மறந்து, காடனுக்கு நன்றி சொன்னான் சங்கர்! ''நட்பு உடல் அழகைப் பொறுத்தது அல்ல, உள்ளத்தின் அழகைப் பொறுத்தது என்பதை இப்போதாவது புரிந்து கொள்!'' என்றான் பாபு சங்கரிடம்.

அதை ஆமோதிப்பதைப் போல மரக்கிளையில் இருந்த குயில் 'கூ கூ' என்று இனிமையாகக் கூவியது!



அன்னை நாடு

எங்கள் நாடு பாரதம்
இனிமை யான தாயகம்
பொங்கும் கங்கை காவிரி
புரண்டு பாயும் பூ நிலம்

தங்கம் வெள்ளி வைரமாய்
தக்க மக்கள் கூடிடும்
பங்க மில்லா நாடிது
பரவ சமாய்ப் பாடிடு

வண்ண வண்ண பூக்களே
வாழு கின்ற தோட்டமீது
எண்ணம் ஒன்றும் வேளையே
அழகு மாலை சூட்டிடும்

அந்தக் காட்சி போலவே
அமைந்தோர் நாமே என்றுதான்
என்றும் கூடி ஆடுவோம்
ஏற்றங் கண்டு வாழுவோம்

சாதி மதங்கள் பேதமே
சற்றும் காணா நெஞ்சமே
வாழி என்று வாழ்த்துவோம்
வணங்கி நாட்டைப் போற்றுவோம்!


- திருச்சி பாரதன்

இரும்பு துருப்பிடிப்பது ஏன்?

இரும்பு என்றதுமே துருவின் நினைப்பும் கூடவே வருகிறது. வீட்டில் உள்ள இரும்பு அரிவாள்மனை துரு ஏறிக் கிடப்பதை அம்மா தினமும் அலுத்துக் கொள்வதைப் பார்த்திருக்கிறோம். குழாய் பம்புகள், வெட்டரிவாள், ஆணி, கத்திகள் துருப்பிடித்துப் பாழாவதை தினமும் காண்கிறோம்.


இந்தத் துரு எப்படி ஏற்படுகிறது? நீரில் உள்ள பிராணவாயு இரும்புடன் சேரும்போது இரும்பு ஆக்சைடு உருவாகிறது. இதுதான் துரு என்று அழைக்கப்படுகிறது. இதில் நீர்ப் பகுதி உலர்ந்தவுடன் காப்பிப் பொடி வண்ணத்தில் துரு தங்கி விடுகிறது.


இந்தத் துருவைத் தவிர்க்க பெயின்ட், வார்னீஷ் போன்ற பூச்சுகள் இரும்புப் பொருள்களின் மீது அடிக்கப்படுகின்றன. துத்தநாகப் பூச்சும், குரோமியப் பூச்சும் கூடத் தரப்படுகின்றன. இந்தப் பெயின்ட்டும், வார்னீஷும், பூச்சுகளும் கண்டு பிடிக்கப் படுவதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே குதுப்மினார் அமைந்துள்ள தோட்டத்தின் அருகே எழுப்பப்பட்டுள்ள மௌரியர் காலத்து இரும்புத் தூண் ஒன்று இன்னமும் துருப் பிடிக்காது இருப்பது உலோக வல்லுனர்களுக்கு ஒரு புதிராக உள்ளது.




இங்கிலாந்தில் ஹாரி பிரியர்லி என்று ஓர் ஆராய்ச்சியாளர். இவர் இரும்பில் உள்ள கார்பனே துருவை உண்டு பண்ணுகிறது என்ற உண்மையைக் கண்டு பிடித்தார். இந்தக் கார்பனின் அளவைக் குறைத்து, குரோமியத்தையும் நிக்கலையும் ஒரு குறிப்பிட்ட வீதத்தில் கலந்து பார்த்தார். அதன் விளைவாகவே எவர்சில்வர் என்ற ஸ்டேயின்லெஸ் ஸ்டீல் கண்டு பிடிக்கப்பட்டது. இது துருப்பிடிக்காத கலப்பு உலோகம். இதில் கூட கார்பனின் அளவு சற்று அதிகமானால் துருப் பிடிக்க இடம் கொடுத்து விடும்.

எவர் சில்வரின் கண்டு பிடிப்பு, போக்கு வரத்துத் துறையிலும், மருத்துவத் துறையிலும் பல முன்னேற்றங்களை ஏற்படுத்தியுள்ளன. கப்பல்களின் பகுதிகள் பலவும் இப்பொழுது அழுத்தமான எவர்சில்வரில்தான் கட்டப்படுகின்றன. அறுவை சிகிச்சைக்குப் பயன்படுத்தப் படும் பல கருவிகளும் இப்பொழுது இந்தக் கலப்பு உலோகத்தாலேயே தயாரிக்கப்படுகின்றன. நாணயங்களும், கோவில்களில் சாமிகளுக்கான கவசங்கள் கூட இப்பொழுது ஸ்டேயின்லெஸ் ஸ்டீலினாலே தயாராகின்றன. இன்னும் என்னென்ன வருமோ தெரியவில்லை!


தண்டனை
கதை, சித்திரம்:
தப்பித் தவறி பாலைவனத்துக்கு வந்துட்டோம்! தண்ணீரு கிடைக்கலை!
என்னப்பா இந்தப் பக்கம்? வழக்கமா காட்டுக்குள்ளே இருப்பீங்க! தண்ணீர் வேணுமா?
நாக்கு வறண்டு போச்சு!
என்கூட வாங்க நீர் இருக்கும் இடத்தைக் காட்டுகிறேன்!
நல்லா குடிங்க! நிறைய குடிங்க!
அப்பாடி!
பிறகு இடத்தைப் பிரிந்து சென்றன புலிகள்.
நீ என்ன சொல்றே?
சில நாட்களுக்குப் பின் புலிக் கூட்டங்கள் மீண்டும் அந்தப் பக்கம் வந்தன.
ஒரு நல்ல யோசனை சொல்றேன்!


நண்பா! அந்தப் புதருக்குப் பின்னால் உனக்கு ஒரு பரிசு இருக்கு. போய்ப் பாரு!
என்ன பரிசு இருக்கு?
நீயே போய்ப் பாரேன்!
சரி போறேன்.
அப்போது எதிர்பாராத விதமாக புலி காட்டு வழியாக வேடன் வர...
ஆகா! புலிகள்!
வேடன் வருகிறான்! வேகமாக ஓடணும் சீக்கிரம்!
புலிகள் வைக்கோலால் மூடி வைத்த பள்ளத்தில் வேடன் விழுந்தான்.
ஐயோ! புலிகள் என்னை அங்கே போக வைக்க இதுதான் காரணமா? சதிகாரப் புலிகள்!
ஒட்டகம் வேடனைக் காப்பாற்றியது.
என் காலைப் பிடித்து ஏறி வா! நன்றி கெட்ட புலிகளைப் பிடிக்க உதவுகிறேன்!
ரொம்ப நன்றி!
பிறகு—
இருவரும் சேர்ந்து புலிக் குட்டிகளைப் பிடித்தனர்.
ஆ! ஊ! ஊ!
ம்... உள்ளே போ!
புலிகளை மூட்டையில் கட்டி இழுத்துச் சென்றனர்.
ரொம்ப நன்றி! புலிகளை சர்க்கஸ் காரர்களிடம் விற்று விடலாம்!
நானும் உனக்கு உதவியாக உன்னுடன் வருகிறேன்.
ஆ! ஊ!



சொல் சொல்லும் கதைகள் – டாக்டர். பூவண்ணன் – பக். 80, ரூ. 13/- கலை இல்லம், பிள்ளையார் கோவில் தெரு, சிரப்பாளையம் – 608 602

நீண்டகால மொழி வரலாறும் மொழி வளமும் மிக்க தமிழுக்கு எத்தனையோ சிறப்புகள் உண்டு. தமிழில் ஒரு சொல்லுக்கு எத்தனையோ பொருள் உண்டு. இவற்றை எதுகை மோனைக்காகவும், அடுக்கு மொழிக்காகவும் பயன்படுத்தும் போது செய்யும் பிழைகளை, பிள்ளைகளுக்குப் புரியக்கூடிய எளிய உதாரணங்களைக் கொண்டு தனக்கே உரிய முறையில் சுவையான உரையாடல் கட்டுரைகளாகப் பூவண்ணன் தந்திருக்கிறார். மொழி இயலின் சொற் பொருள் இயலுக்கு (SEMANITICS) ஓர் எளிய; சுவையான; பயன்மிக்க அறிமுக நூல்.

மகாமேதை பீர்பால் – சரஸ்வதி ராம்னாத் – பக். 96 – ரூ 10/- கங்கை புத்தக நிலையம், தீனதயாளன் தெரு, தி. நகர்., சென்னை – 17.

பல மொழிகளில் புலமைபெற்ற ஆசிரியையின் மிகச் சிறந்த வழி நூல். அக்பர் பீர்பால் கதைகள் சாகாவரம் பெற்றவை. எத்தனை தலைமுறை கடந்தாலும் மகிழ்ச்சியூட்டுபவை. இந்தத் தொகுப்பில் பீர்பாலின் அறிவுத் திறமையை விளக்கும் சுவையான ஒன்பது கதைகள் தரப்பட்டுள்ளன. இவை யாவும், 'கண்ணன்' சிறுவர் இதழில் தொடர்ந்து வெளிவந்து 1950-1960 காலச் சிறுவர்களால் பெரிதும் விரும்பிப் படிக்கப் பட்டவை. இன்றும், என்றும் படிக்கக்கூடியவை. உமாபதியின் அட்டையும் படங்களும் புத்தகத்திற்கு மெருகூட்டுகின்றன.

விசித்திர உலகம் – ஆழி – பக். 80 – ரூ. 14/- சித்ரகலா பதிப்பகம், அகரக் கடம்பனூர் – ஆழியூர் – 611 117.

'ஆழி' கோகுலம் வாசகர்களுக்குப் புதியவர் அல்ல. திறமைமிக்க எழுத்தாளர் ஒருவருக்கு ஓவியத் திறமையும் இருந்தால் என்னவெல்லாம் சாதிக்கலாம் என்பதற்கு இந்த நூல் உதாரணம். விசித்திரமான செய்திகளே சுவையானவை. இவை ஆழியின் படங்களுடன் தரப்பட்டால் கேட்க வேண்டுமா? விலங்கு இயலில் உள்ள விசித்திரங்களை மிக நேர்த்தியாகத் தந்திருக்கிறார். கடின உழைப்புக்காகவும், அழகிய தயாரிப்புக்காகவும் ஆசிரியரை எத்தனை பாராட்டினாலும் தகும். பரிசளிக்க ஏற்ற நூல்.

ஒரு நாள் பயணம், கவிஞர் செல்ல கணபதி, பக். 32, ரூ 6/- பழனியப்பா பிரதர்ஸ், பீட்டர்ஸ் சாலை, சென்னை – 14.

குழந்தைக் கவிஞரின் இலக்கியப் பட்டறையில் தயாரான கவிஞர் செல்ல கணபதி, பாடல்கள் மட்டுமின்றி கதைகள், நாவல்களும் எழுதிப் பெருமைபெற்றவர். அவருடைய கற்பனை வளத்திற்கு சான்று கூறுகிறது இந்த ஒருநாள் பயணம். நெடுங்கதை. ஒருநாள் இரவைக் கொல்லிமலையில் கழித்து, காட்டைக் கடந்து சாதனை படைக்க குமார் தலைமையில் நண்பர்கள் நாகப்பன், வைரவன், ஆறுமுகம் ஆகிய நால்வரும் கிளம்புகின்றனர். காட்டில் அவர்களுக்குக் கிடைக்கும் அனுபவங்கள், ஆபத்துகள், அவற்றிலிருந்து அவர்கள் மீள்வது ஆகியவை கதையை சுவைகுன்றாது ஓட விடுகின்றன. இறுதியில் ஒரு கொள்ளைக் கூட்டத்தையும் பிடித்து குமாரின் குழுவினர் பெரும்புகழ் பெறுகின்றனர். புத்தகத்தை எடுத்துப் படிக்கத் தொடங்கி விட்டால் முடிக்காமல் வைக்க மனம் வராது. இது கோவை வானொலியில் தொடராக ஒலிபரப்பப்பட்டு இலட்சக் கணக்கான வாசகர்களில் பாராட்டப்பட்டது என்பது கூடுதல் தகவல். கண்கவர் அட்டையும், படங்களும், தயாரிப்பும் புத்தகத்தை வாங்கத் தூண்டுகின்றன. பரிசளிக்க ஏற்ற நூல்.

பஞ்சதந்திரக் கதைகள், சம்பந்தன், பக். 180, ரூ 20/- கங்கை புத்தக நிலையம், தீனதயாளன் தெரு, தி.நகர்., சென்னை – 600 017.

நெஞ்சை அள்ளும் பஞ்சதந்திரக் கதைகளைத் தனக்கே உரிய பாணியில் திரு.சம்பந்தம் தொகுத்துத் தந்திருக்கிறார். நிலா மகிழ்ச்சியளிக்கக்கூடியது என்று யாராவது கூற வேண்டுமா என்ன? எல்லாக் கதைகளும் சுவையாக உள்ளன. சிறுவர் மட்டுமல்ல, பெரியவர்களும் சுவைத்து மகிழ்ச்சியடையலாம். படங்களும் இருந்திருந்தால் மேலும் சிறப்பாக இருந்திருக்கும்.

மதிப்புரைக்கு சிறுவர் நூல்களும் பொது நூல்களும் மட்டுமே ஏற்கப்படும். இரண்டு பிரதிகளை ஆசிரியர், கோகுலம், 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை – 600 097 என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும். கட்டணம் கிடையாது.



முதலைப் பண்ணைக்குப் போகலாம்!

“முதலை தனது குட்டிகளைத் தானே தின்று விடும் என்ற பரவலான நம்பிக்கை மக்களிடையே இருக்கிறதே. இது உண்மைதானா?'' என்ற கேள்வியை தங்கசாமியின் முன் வைத்தோம்.

தங்கசாமி முதலைப் பண்ணையில் பல ஆண்டுகளாகப் பணியாற்றி வருபவர். தினமும் நூற்றுக்கணக்கான முதலைகளுடன் பழகி அவைகளைப் பராமரிக்கும் பணியில் ஈடுபட்டவர்.

தங்கசாமி சிரித்தார்.

''என்ன சிரிக்கிறீங்க? முதலை தன் குட்டிகளைத் தானே தின்று விடும். முட்டையிலிருந்து வெளிவருமுன், குட்டிகள் குரலெழுப்பி அம்மா முதலையை அழைக்கும் என்றெல்லாம் மக்களிடையே நம்பிக்கை இருக்கிறதே. இதெல்லாம் உண்மைதானா?''

''முதலைகள் ஒரு ஈட்டில் சுமார் எழுபது முட்டைகளை இந்தப் பண்ணையில் இடுகின்றன. இவை பொரிந்து வெளிவரும் நேரத்தில் குட்டிப் பல்லி கத்துவது போல் ஒரு மெல்லிய சத்தத்தை வெளியிடும். உடனே தாய் முதலை ஓடி வரும். குட்டிகள் முட்டையை உடைத்துக் கொண்டு வெளிவரும். இப்படித் தாய் முதலை வராவிட்டால் என்னவாகும் தெரியுமா? மற்ற பெரிய முதலைகள் ஒன்று கூடி, முட்டையில் இருந்து வெளிவரும் குட்டிகளைத் தின்று விடும். இந்தக் காட்சியை யாராவது பார்த்திருப்பார்கள். தாய் முதலைதான் இப்படித் தன் குட்டிகளைத் தின்கிறது என்று அவர்கள் எண்ணியிருப்பார்கள். தாய் முதலை தன் குட்டிகளைத் தின்னவே தின்னாது.

ஏமாந்தால் மற்ற குட்டிகளைத்தான் முதலைகள் தின்று விடும். இதில் முதலைகளுக்குள் வேறுபாடே இல்லை. உண்மையில் முதலைகள் பாசம் மிக்கவை. குட்டிகள் பெரிதாகும் வரை அவைகளுக்கு ஆபத்து ஏற்படாது தாய் முதலை மிக கவனமாகப் பாதுகாக்கும். பராமரிப்புப் பணிகளுக்குக்கூட கவனமாகத்தான் போவோம்'' என்று சிரித்தார் தங்கசாமி.

''முதலைகள் மனித வெறி கொண்டவை என்று கேள்விப்பட்டிருக்கிறோமே. உண்மைதானா?''

''மனிதர்கள்தான் முதலை வெறி கொண்டிருக்கிறார்கள் எனலாம். முதலையின் தோற்றம், அதன் பல் வரிசை, நீரில் வாலைச் சுழற்றி அடிப்பது, ஆடு மாடுகளைப் பிடித்துத் தின்பது எல்லாமே மனிதர்களுக்கு முதலையைப் பற்றி ஒரு பயத்தை ஏற்படுத்தியுள்ளது. அதனால்தான் அவைகள் வேட்டையாடப் வருகின்றன. பிறகு இறைச்சிக்காகவும், அதன் தோலுக்காகவும் வேட்டையாடத் தொடங்கினான். முதலைகள் வேட்டையாடிக் கொன்ற மனிதர்களை விட, மனிதர்கள் வேட்டையாடிக் கொன்ற முதலைகளின் எண்ணிக்கையே பல மடங்கு இருக்கும்.''

தங்கசாமி தொடர்ந்தார்.

''கொலை வெறிகொண்ட முதலை என்பது தனியாக இல்லை. பசித்திருக்கையில் மனிதர்கள் கூடத்தான் கொலை வெறியுடன் இருக்கிறார்கள். முதலைகளுக்குப் போதுமான உணவு கொடுத்து விட்டால், அவை மனிதர்களைத் தாக்குவதில்லை. மாறாக அவைகளைச் சீண்டினால் தாக்கும். இங்கே உள்ள முதலை வளர்ப்புக் குளங்களில் நூற்றுக்கணக்கான முதலைகள் இருக்கின்றன. பணியாளர்கள் தினமும் இறங்கி, குளத்தை சுத்தம் செய்கிறார்கள். முதலைகள் அவர்களைத் தாக்கியதாக இதுவரை புகார் இல்லை. இவர்கள் நமது நலத்தில் அக்கறை கொண்டவர்கள். நமக்கு வேண்டியவர்களே. இவர்களால் நமக்கு ஆபத்து இல்லை என்று பழக்கத்தால் முதலைகள் எண்ணி விடுகின்றன. ஆனால் கொலை வெறி உள்ளவையும் மிக அபூர்வமாக உள்ளன. அவைகளைத் தனியாக வைத்திருக்கிறோம். உடல்நிலை பாதிக்கப்பட்டாலும் சரி, போதிய உணவில்லை என்றாலும் சரி, சீண்டித் தொந்தரவு செய்யப்பட்டாலும் சரி முதலைகள் தாக்கத் துணிவது சகஜம். இங்கே அப்படி நடக்க விடுவதில்லை.''

சென்னையில் இருந்து மகாபலிபுரம் செல்லும் வழியில், 44 கி.மீ. தொலைவில் பிரதான சாலைக்கு அருகிலேயே இந்த முதலைப் பண்ணை அமைந்துள்ளது. இது அமைந்துள்ள ஊர் வடநெமிலி கிராமம். உலக வனவிலங்கு பாதுகாப்பு அமைப்பு போன்றவைகளின் உதவியைக் கொண்டு 1976 ஆம் ஆண்டு இது தொடங்கப்பட்டது. தொடங்கிய போது 26 முதலைகளே இருந்தன. இன்று சுமார் 1500 முதலைகளுக்கு மேல் உள்ளன! இங்கே ஆமைகளும் பாம்புகளும் கூட உள்ளன.

கோழிப் பண்ணை, ஆட்டுப் பண்ணை, மாட்டுப் பண்ணைகளால் என்ன பயன் கிடைக்கும் என்பது நமக்குத் தெரியும். ஆனால் முதலைப் பண்ணையால் மனிதர்களுக்கு என்ன பயன்?

முதலாவது இது இலட்சக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த ஊர்வன இனம். டைனோசர்கள் இதன் சம



கால உறவினர்கள்! இராட்சஸ டைனோசர் இனம் என்ன காரணமோ மறைந்துவிட்டது. ஆனால் அதன் உறவுக்கார முதலைகள் மட்டும் இன்னமும் தாக்குப்பிடித்து வாழ்கின்றன. சுவையான இறைச்சிக்காகவும் தோலுக்காகவும் முதலைகள் உலகெங்கும் கொல்லப்பட்டு இந்த இனமே அழிந்து விடுமோ என்று அஞ்சப்படும் நிலை உருவாகியுள்ளது. இன்று சுற்றுப்புறச் சூழல் பற்றி நிறையப் பேசுகிறோம். புனிதமான நதிகளும் கடல் நீரும் மாசுபடுவதைப் பற்றி எச்சரிக்கைகள் வருகின்றன. நதிகளில் முதலைகளும் ஆமைகளும் நிறைந்திருந்த போது, இந்த நதிகள் தூய்மையாக இருந்தன. காரணம் அழுகிய உடல்களைத் தின்று முதலைகள் நீரைத் தூய்மையாக்கி வந்தன. ஆறுகளில் உள்ள முதலைகள் பிடிக்கப்பட்டு அழிக்கப்பட்டதும் நிலைமை தலைகீழாகிவிட்டது. நதிகளைத் தூய்மையாக்கக் கூறப்படும் பரிந்துரைகளில் முதலை வளர்ப்பதையும் சேர்த்திருக்கிறார்கள்.''


சென்னை முதலைப் பண்ணையில் சதுப்பு நில முதலை, நைல்நதி முதலை, மலேஷியன் கரியால், கடல் முதலை, மோர்லெட்ஸ் முதலை, கெய்மான் முதலை போன்ற பல வகையான முதலைகள் வளர்க்கப்பட்டு, இந்தியா உட்பட உலகெங்கும் உள்ள பல நதிகளில் விடப்பட்டு வருகின்றன. முதலைகள் எளிதில் நோய்க்கு இரையாவதில்லை. அதனால் இதனிடம் உள்ள எதிர்ப்பாற்றல் சக்தியைக் கண்டறியும் ஆராய்ச்சிகள் இங்கு நடக்கின்றன.

இங்கே உள்ள முதலைகளில் மிகப் பெரியது கடல் முதலை (SALTWATER CROCODILE). இதன் நீளம் 5 மீட்டர். எடை 400 கிலோ! இதற்கு 23 வயதாகிறது!

இந்த முதலைப் பண்ணையின் பணியாளர்களும் சரி, அவர்களுடைய குழந்தைகளும் சரி முதலைகளுடன் பயமில்லாது பழகுவது நமக்கு அதிசயமாக உள்ளது. நூற்றுக்கணக்கில் முதலைகள் வாழும் குளங்களைச் சுற்றி, தடுப்புச் சுவருக்கு மேல் சவுக்கு கம்பு வளையம் இடப்பட்டுள்ளது. இது பற்றிக் கேட்ட போது தெரிவித்த தகவல் : 'முதலைகள் தாவக் கூடத்தாவுமாம். அதற்காகவே தடுப்புக் கட்டை!

முதலைகளைப் பற்றி பண்ணையின் மேனேஜர் ஆண்ட்ரூஸ"டன் பேசிய பிறகு (இவர் பண்ணையிலேயே வசிக்கிறார்) முதலைகளைப் பார்த்த போது பயமே தோன்றவில்லை. ஒரு நட்புணர்வே எழுந்தது. நாமாகச் சீண்டினாலே தவிர முதலை நமது பகைவனல்ல என்ற எண்ணமே மேலோங்கியது!

அட்டையில் : முதலைக்
குட்டியுடன் சிறுவன் பாலு
வண்ணப்படம் மற்றும் புகைப்
படங்கள் : கோபிநாத்



''என்னைத் தொட்டதும்... ஷாக் அடிச்சா மாதிரி கையை எடுத்துட்டியே... ஏன்?''

''நீ ஒரு டியூப் லைட் ஆச்சே... மறந்துட்டேன்...!''

- இரா. திலீப்.

''பசு மாட்டுக்கு ஆங்கில வார்த்தை என்னடா...?''

''Cow...''

''கன்னுக்குட்டிக்கு...?''

''Cow Boy!''

- சீர்காழி. வி. ரேவதி.



13 வயதுச் சாதனை!



பெல்ஜியம் நாட்டின் தலைநக ரான பிரசல்ஸில் கடந்த ஜூலை 1991-ல் அகில உலக சுருக்கெழுத்து, தட்டெழுத் தாளர் கூட்டமைப்பு, தனது 39-ஆவது பேரவையைக் கூட்டியது. அதை ஒட்டி ''இன்டர் ஸ்டெனோ 1991'' சாம்பியன் போட்டிகளையும் அவ்வமைப்பு நடத்தி யது. அவற்றில் இருபது வயதிற்குட் பட்டவர்களுக்கான போட்டியில் நம் நாட்டைச் சேர்ந்த அபிஷேக் ஜெயின் என்ற 13 வயதுச் சிறுவன் கலந்து கொண்டு முதலிடம் பெற்றான்.


அபிஷேக் ஜெயின், பஞ்சாப் மாநி லத்தின் ஜலந்தர் மாவட்டத்தில் உள்ள கோரியாபூரைச் சேர்ந்தவன். இவன் நிமிடத்திற்கு 109.2 சொற்கள் என்ற வீதத்தில் தட்டெழுத்தில் அடித்து சாதனை புரிந்தான். அதோடு 99.93 சதம் மிகத் தெளிவாக 'டைப்' செய்திருந் தான். 'இச் சாதனை இருபது வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு நடந்த போட்டி யில் இரண்டாவது இடத்தைப் பெற்ற வரை விடச் சிறந்தது' என்பது குறிப் பிடத்தக்கது.

அபிஷேக் இப்பொழுது பத்தாம் வகுப்பில் படிக்கிறான். அவனது தந்தை ஒரு தட்டெழுத்துப் பயிற்சி நிலை யத்தை நடத்தி வருகிறார். அபிஷேக், பள்ளி விட்டதும் தட்டெழுத்து கற்பதில் ஆர்வம் காட்டினான். இதைக் கவனித்த அவனது தந்தையார் அபிஷேகுக்கு உற் சாகம் அளிக்கலானார்.

அபிஷேக் நம் நாட்டில் பல போட்டி களில் கலந்து கொண்டு பல பரிசுகளை யும் பெற்றான். 1987-ல் தேசிய சாம்பி யன் பட்டத்தையும் வென்றான்.

அபிஷேக் இந்தியில் நிமிடத்திற்கு 75 வார்த்தைகளும் பஞ்சாபியில் 80 வார்த்தைகளும் தட்டச்சில் அடிப்பான். துருக்கி நாட்டு இஸ்தான்புல்லில் இந்த ஆண்டு நடைபெற உள்ள 'இன்டெர் ஸ்டெனோ' போட்டியில் கலந்து கொண்டு புதிய சாதனை புரிந்து கின்ன ஸில் இடம்பெற இப்பொழுது தீவிர முயற்சி, பயிற்சி செய்து கொண்டிருக் கிறான். அபிஷேக்கின் முயற்சி வெற்றி பெற வாழ்த்துவோம்.

– பி. ஜெயக்குமார்



கேட்கட்டுமா டாக்டர்?

டாக்டர். கு. கணேசன்

சுபாரமேஷ், நாமக்கல் – 19.

? ஒரு ரத்தத்தைப் பரிசோதனை செய்து, அது ஆணின் ரத்தமா அல்லது பெண்ணின் ரத்தமா என்று கண்டு பிடிக்க முடியுமா?

! முடியும். ரத்தத்தில் வெள்ளை யணுக்கள் (Leucocytes) இருப்பதை நீ அறிவாய் தானே? அந்த வெள்ளை யணுக்களின் உட்புறம் 'Sex Chromatin' இருக்கும். இவற்றின் எண்ணிக்கை ஆணுக்கு இவ்வளவு பெண்ணுக்கு இவ்வளவு என்று ஒரு கணக்கில் இருக்கும். அதன்படி அந்த ரத்தம் ஆணின் ரத்தமா, பெண்ணின் ரத்தமா என்று கண்டு பிடித்து விடலாம்.



கே.பி. சசிகுமார், ஈரோடு – 2.

? தெர்மாமீட்டரை உபயோகிக்கும் முன்பு அதை பலமாக உதறுகிறார்களே, அது ஏன் டாக்டர்?

! தெர்மாமீட்டருக்குள் ஒரு கோடு மாதிரி பாதரசம் நிரப்பப்பட்டுள்ளது. இது நம் உடம்பின் வெப்பத்தால் விரிவடைந்து, உடலின் வெப்பத்தைக் காண்பிக்கிறது. ஒரு முறை விரிவடைந்த பாதரசம் தானாகச் சுருங்காது. மறுமுறை தெர்மாமீட்டரை உபயோகிக்கும் முன்பு அதை பலமாக உதறினால்தான், விரிவடைந்த பாதரசம் தெர்மாமீட்டரின் கீழ்ப்பகுதிக்குச் செல்லும். பிறகுதான் அதைப் பயன்படுத்த முடியும்.

என். சரவணன், திருத்தன்தோணி.

? எந்த வயதிற்கு மேல் ரத்த தானம் செய்யலாம்?

! 18 வயதிற்கு மேல் ரத்ததானம் செய்யலாம். அப்போது உடல் எடை 40 கிலோவுக்குக் குறையாமல் இருக்க வேண்டும்.

கோ. கணேஷ், மாதையன்குட்டி.

? ப்ளூ ரோஸிஸ் என்ற நோய் எதனால் வருகிறது? அதன் அறிகுறிகள் யாவை?



இந்த நோய் வந்தால் என்ன செய்ய வேண்டும்?

! நாம் குடிக்கும் தண்ணீரில் 'ஃபுளூரைட்' (Fluoride) எனும் தாது மிகையாக இருக்கும் போது வரக்கூடிய நோய்க்கு 'ஃப்ளூரோஸிஸ்' (Fluorosis) என்று பெயர். சாதாரணமாக, குடிநீரில் ஃபுளூரைடின் அளவு I.P.P.M (part per million) என்ற அளவில் இருக்க வேண்டும். இது 3 ppm அளவுக்கு மேல் இருந்தால், அந்தக் குடிநீரைக் குடிப்போருக்கு ஃபுளூரோஸிஸ் நோய் வரக்கூடும். இந்த நோயால் பெரும்பாலும் பற்களும், எலும்புகளும், மெல்லிய தசைத் திசுக்களும் பாதிக்கப்படுகின்றன. பற்கள் பாதிக்கப்படும் போது, பற்களின் மேல் கருமையான சிவப்பு கலந்த புள்ளிகளும், கோடுகளும் விழுகின்றன. போகப்போக அருவருக்கத்தக்க நிறமாக மாறுகின்றன. பற்களின் மேற்பூச்சு (Enamel) கரைந்து, பற்கள் பலமிழந்து, எளிதில் விழுந்து விடுகின்றன. ஃபுளூரைட் படிந்த எலும்பு கனமாகவும், வெண்மையாகவும் இருக்கின்றன. புதிய எலும்புகள் கோணல்மாணலாக உருவாகின்றன. இதனால் எலும்பு களுடன் இணைந்த வெளி உறை, நாண் கள், குருத்தெலும்புகள் பாதிக்கப்பட்டு, எலும்பின் இயக்கம் தடைபடுகிறது. முதுகெலும்பில் ஃபுளூரைட் படிந்தால் கூனல் உண்டாகிறது. ஃபுளூரோசிஸ் நோயைத் தவிர்க்க ஃபுளூரைட் குறைவாக உள்ள தண்ணீரைக் குடிப்பதே நல்லது. அதற்கு அந்தந்த ஊர்களிலுள்ள குடிதண்ணீரில் ஃபுளூரைடின் அளவைக் கணிப்பதுதான் ஒரே வழி. தண்ணீரிலிருந்து ஃபுளோரைடை அகற்றுவது சாத்தியமல்ல; ஃபுளூரோசிஸ் நோய் வந்து விட்டால் சொர்பன்-டைன் (மக்னீசியம் மெடா சிலிகேட்) என்ற மருந்தை 50 மி.கி. வீதம் தினமும் இரண்டு வேளை கொடுத்தால், சிறுநீரிலும் மலத்திலும் ஃபுளூரைட் தாது வெளியேறிவிடும். குடிநீரில் மிகையாக ஃபுளூரைட் உள்ள பகுதிகளில் வசிக்கும் மக்கள்-குறிப்பாக குழந்தைகள், ஃபுளூரைட் கலந்த பற்பசைகளை உபயோகிக்காமல் இருப்பது நல்லது.




ரமேஷ், கரடிப்பட்டி.

? குடலிறக்கம் (ஹெர்னியா) என்பது ஒரு நோயா? இது எப்படி ஏற்படுகிறது?


! குடலிறக்கம் என்பது ஒரு நோயல்ல, இதை ஒரு உடற்கூறு குறை எனச் சொல்லலாம். வயிற்றுத் தசையில் உண்டாகும் துவாரம் வழியாக குடல் வெளித் தள்ளுவதைக் குடலிறக்கம் (Hernia) என்று சொல்கிறோம். பிறவிக் குறை, அதிக சுமை தூக்குவது, வயிற்றின் உள் அழுத்தம் அதிகமாவது, அதிக இருமல், கக்குவான் இருமல், சிறுநீர், மலம் கழிக்கும் போது முக்கித்திணறுவது, தொப்பை, கர்ப்பம் போன்ற காரணங்களால் குடலிறக்கம் ஏற்படுவதுண்டு.

பலூன் புதிர்!



கீழே வரத் துடிக்கும் பையனுக்கு
நீங்களாவது வழிகாட்டுங்கள்!

கருத்து : எம். ஏ. செல்வகுமார்



தவளை ஆராய்ச்சி

முட்டாள் ஒருவன் தவளையை வைத்து ஆராய்ச்சி செய்தான். தவளை அவனுடன் நன்கு பழகிவிட்டது. அவன் சொன்னபடி கேட்டது.



முட்டாள் ஒருநாள் தவளையின் ஒரு காலை வெட்டினான். பிறகு தவளையைப் பார்த்து ''ஜம்ப்'' என்றான். தவளை குதித்தது. முட்டாள் இரண்டாவது காலை வெட்டினான். 'ஜம்ப்' என்றான். தவளை குதித்தது. மூன்றாவது காலையும் வெட்டி 'ஜம்ப்' சொன்னயும், தவளை ஒற்றைக் காலால் விந்திக் குதித்தது. முட்டாள் நான்காவது காலை வெட்டி 'ஜம்ப்' என்றான். தவளை பேசாது இருந்தது. கால் இருந்தால் தானே அது குதிக்கும்?

தவளையின் மூன்று கால்களையும் வெட்டினால் கூட தவளைக்குக் காது கேட்கும். நான்காவது காலை வெட்டிவிட்டால் தவளைக்குக் காது கேட்காது என்று முட்டாள் தனது ஆராய்ச்சிக் குறிப் பில் எழுதினான்.

- பி. பாலசுப்ரமணியன்.

வளையும் மாடிப்படியும்

ஒருநாள் அக்பர் பீர்பாலிடம் 'உன் மனைவி தன் கையில் எத்தனை வளையல்கள் அணிந்திருக்கிறாள் என்று கூற



முடியுமா?' என்று கேட்டார். பீர்பால் தன்னால் முடியாது என்றார். அதற்கு அக்பர் ''உன் மனைவி தினமும் உனக்குத் தன் கையால் சாப்பாடு போடுகிறாள். ஒரு நாள் கூடவா சாப்பாடு போடும் கையில் எவ்வளவு வளையல்கள் இருக்கிறது என்பதைக் கவனிக்கவில்லை?'' என்று கேட்டு கேலியாகச் சிரித்தார். இருவரும் பேசிக் கொண்டேபடி இறங்கி தோட்டத்திற்குச் சென்றனர். திடீரென பீர்பால் மன்னரிடம், ''மன்னரே! இந்த மாடிப்படிகள் மொத்தம் எத்தனை தெரியுமா?'' என்றார். அக்பர் 'தெரியாது' என்றதும், 'மன்னரே சிறு வயது முதலே தினமும் இந்த மாடிப் படியை பலமுறை தாங்கள் ஏறி இறங்குகிறீர்கள். இதில் எவ்வளவு படிகள் இருக்கிறதென்று ஒரு முறை கூடவா எண்ணிப் பார்த்ததில்லை?' என்று வியப்புடன் கேட்டார். மன்னருக்கு வெட்கமாகப் போய் விட்டது. தன்னை பீர்பால் நன்கு மடக்கி விட்டது புரிந்தது.


- இந்திரா கோபாலன்.

ரெண்டு கால் நாற்காலி!

ஒரு கிராமத்தில் ஒரு முழு மூடன் இருந்தான். அவன் தன் அறிவை எதற்கும் சரியாகப் பயன்படுத்தவே மாட்டான்.

ஒருநாள் மூடனுக்கு ஒரு நாற்காலி வாங்கிப் போட்டுக் கொண்டு உட்கார ஆசை பிறந்தது. கடைக்குப் போனான். கடைக்காரன், சிறிது நேரப் பேச்சிலேயே வந்திருப்பவன் முழு மூடன் என்பதை உணர்ந்து கொண்டான். அவனிடம் ஓர் உடைந்த இரண்டு கால் நாற்காலி இருந்தது. அதில் யாரும் உட்கார முடியாது. பின்னிரண்டு கால்களும் இல்லாமல் யாரால் எப்படி உட்கார இயலும்? அதை முழு மூடனின் தலையில் கட்டி விட எண்ணினான் கடைக்காரன்.

''நாலு கால் உள்ள நாற்காலி, இரண்டு கால் உள்ள நம்மை விட வேகமாக ஓடிப் போய் விடும். நாணயம்



இல்லாதது. மனிதனுக்கு உண்மையாக இருப்பது இரண்டு கால் நாற்காலியே. அது போட்ட இடத்தில் சுவர் ஓரமாக இருக்கும்'' என்றான்.

மூடன் நாலு கால் நாற்காலியையே விரும்பி வாங்கி எடுத்துக் கொண்டு போனான். போகும் வழியில் அவனுக்கு தாகம் எடுத்தது. ஒரு குளக் கரையில் நாற்காலியை வைத்து விட்டு, தண்ணீர் குடிக்க இறங்கினான். திரும்பி வந்து பார்த்த போது நாற்காலியைக் காணவில்லை!

பின்தொடர்ந்து வந்த கடைக்காரன் தான், நாற்காலியை எடுத்துக் கொண்டு வந்து தன் கடையில் வைத்துக் கொண்டான். மூடன் கடைக்கு வந்தான். நாற்காலியைப் பார்த்ததும் அசந்து போனான்.

''நீங்க முதல்லேயே எச்சரிக்கை பண்ணினீங்க. நாலு கால் நாற்காலி நாணயமில்லாததுங்க. ஓடிப் போயிடும். ரெண்டு கால் நாற்காலிதான் நேர்மையானதுன்னு சொன்னீங்க. நான் கேட்கலை. எனக்குப் புத்தி வந்தது. நாணயமான ரெண்டு கால் நாற்காலியையே கொடுங்க'' என்று அந்த உடைசல் ரெண்டு கால் நாற்காலியைக் கேட்டு வாங்கிக் கொண்டு போனான் மூடன்!

- கணேஷ்.

சிங்கமும், எறும்பும்

ஒரு காட்டில் எல்லா விலங்குகளும் தங்களுடைய ராஜாவான சிங்கத்தை வணங்கிப் போற்ற, ஒன்று இரண்டு வந்தன. அவைகளுடன் எறும்பும் வந்தது. மற்ற விலங்குகளின் வணக்



கத்தை ஏற்றுக் கொண்டு, எறும்பின் வணக்கத்தை மட்டும் ஏற்றுக் கொள்ளாமல் அதை அற்பமாக எண்ணி விரட்டியடித்தது சிங்கம்.

எறும்புக் கூட்டத் தலைவன் இதையறிந்து மிகவும் கோபப்பட்டு, சிங்கத்தின் செவிக்குள் நுழைந்து அரிக்கச் சொல்லி, ஒரு மண் புழுவை ஏவியனுப்பியது. எறும்புக் கூட்டத் தலைவனின் கட்டளையை ஏற்று மண்புழுவும் சிங்கத்தின் செவிக்குள் நுழைந்து அரிக்க ஆரம்பித்தது. சிங்கம் வலிதாங்காது துடிதுடித்து கர்ஜித்த போது, எல்லா மிருகங்களும், உதவி செய்யவும், பகையாளியை நசுக்கவும் முழக்கமிட்டுக் கொண்டு சிங்கத்திடம் வந்து சேர்ந்தன. ஆனால் சிங்கத்தின் செவிக்குள் அடைந்து கிடக்கும் மண்புழுவைக் கொல்ல எந்த மிருக இனத்தாலும் ஒன்றும் செய்ய இயலவில்லை. கடைசியில் சிங்கம் தன் தவறை உணர்ந்து, எறும்புக் கூட்டத் தலைவனை அணுகி மன்னிப்புக் கேட்டது.

எறும்புக் கூட்டத் தலைவனும் சிங்க ராஜாவைக் காக்க ஆவன செய்யுமாறு ஒரு சிறிய எறும்புக்கு ஆணையிட்டது. சிறிய எறும்பு சிங்கத்தின் காதுக்குள் நுழைந்து மண் புழுவை அழைத்துக் கொண்டு வெளியே வந்தது.

சிங்க ராஜா எறும்பின் பெருமையை உணர்ந்து கொண்டது.

எல்லா மிருகங்களையும், அவற்றுக்கென்று நிர்ணயிக்கப்பட்ட இடங்களில் மட்டுமே வாழ சிங்கராஜா அனுமதித்திருந்தது. ஆனால் எறும்புக் கூட்டத்திற்கு மட்டும் பூமியில் எங்கு வேண்டுமானாலும், எந்த இடத்திலேயும் தன்னிச்சையாக வாழக் கூடிய தனிச் சலுகையை அளித்துப் பெருமைப்படுத்தியது சிங்கராஜா.

- அ. முஸ்தபா.

நினைத்து நினைத்து சிரித்தேன்!

தினசரி வாழ்க்கையில் பல சின்னச் சின்ன சம்பவங்கள் நமக்குப் பெரும் சிரிப்பை ஏற்படுத்தும். சிந்திக்கவும் வைக்கும். மிக வினோதமான, சிரிப்பை உண்டு பண்ணக்கூடிய, தங்களுக்கு நேர்ந்த சில அனுபவங்களை இங்கே சில சிறுவர்கள் உங்களுடன் பகிர்ந்து கொள்கின்றனர்.

எஸ். ஸ்வேதா :

டில்லிக்கு வந்த புதிது. என் அண்ணனும், நானும் ஒரு நாள் வெளியே சென்றிருந்தோம். பஜாரில் சாமான்களெல்லாம் வாங்கிவிட்டு, வீடு திரும்ப பஸ் ஸ்டாப்புக்கு வந்தோம். ஒரே கூட்டம். நான் பெண்கள் அதிகமாக இருந்த இடத்தில் ஒதுங்கிக் கொண்டேன். கண்டக்டர் வந்தபோது எனக்கு மட்டும் ஒரு டிக்கட் வாங்கிக் கொண்டேன். அவ்வளவு கூட்டத்திலும் நான் டிக்கட் வாங்குவதை மட்டும் என் அண்ணன் பார்த்திருக்கிறான். அவனுக்கும் சேர்த்து டிக்கட் வாங்கியிருப்பேன் என நினைத்து அவன் பாவம் டிக்கட் வாங்கவில்லை.

இறங்கும் போது மாட்டிக் கொண்டான்.

அவனுக்கு டிக்கட் இல்லை.

''பார்த்தால் காலேஜ் ஸ்டண்ட் போல இருக்கிறாய். டிக்கட் வாங்க வேண்டாமா?'' கண்டக்டர் கேட்டார். பேச்சில் கடுமை இல்லை. காலேஜ் ஸ்டூண்ட் என்று சொன்னால் விட்டு விடு வார் என்று என் அண்ணனுக்கு தோன்றியது. இத்தனைக்கும் அண்ணன் காலே ஜில் படிக்கவில்லை.

இதற்குள் ''எந்த காலேஜ்?'' கண்டக்டர் கேட்டார்.

என் அண்ணனும் டில்லிக்குப் புதிது. ஏதோ காதில் கேட்டிருந்த காலேஜின் பெயரைச் சொல்லித் தப்பிக்க, ''கமலா நேரு காலேஜ்'' என்றான்.

எல்லோரும் 'பக்'கென்று சிரித்தார்கள். எங்களுக்குக் காரணம் தெரியவில்லை. பிறகுதான் தெரிந்தது. கமலா நேரு காலேஜ் பெண்கள் கல்லூரி என்று!

★ எஸ். ஸ்வேதா





★ ஆர். பாலாஜி

இப்போது நினைத்தாலும், எனக்குச் சிரிப்பு. அண்ணாவுக்கோ வெட்கம்!

டி. செல்வகணேஷ் :

என் வகுப்பில் படிக்கும் நண்பன் ஒருவன் ரேங்க் கார்டில் அப்பாவின் கையெழுத்தை வாங்காமல் தாத்தாவின் கையெழுத்தையே வாங்கி வருவான்.



✱ வெங்கடேஷ்

காரணம், வாங்கிய மார்க்கை அப்பாவிடம் காட்டினால் அடி வாங்க வேண்டும்! தாத்தாவுக்குக் கண் தெரியாது. ஒரு நாள் குட்டு வெளிப்பட்டது. டீச்சர் கேட்டார், "ஏன் நீ அப்பாவிடம் கையெழுத்து வாங்காமல் தாத்தாவிடமே கையெழுத்து வாங்குகிறாய்?"



✱ செல்வகணேஷ்



✱ விஜய் ஆனந்த்

என் நண்பன் சொன்னான், "அப்பா கையெழுத்தைவிட அப்பாவுக்கு அப்பா கையெழுத்து உயர்ந்ததல்லவா?"

நாங்கள் மட்டுமல்ல... டீச்சரும் சிரித்தார்கள்!

வெங்கடேஷ் :

நான் நான்காம் வகுப்பில் படிக்கும் போது நடந்த ஒரு சம்பவம் என் ஞாபகத்திற்கு வருகிறது. எங்களுக்கு லஞ்ச் சாப்பிட மதியம் 12 மணிக்கு விடுவார்கள். அப்பொழுது எல்லா அம்மாக்களும் தங்கள் குழந்தைகளுக்கு சாப்பாடு கொண்டு வருவார்கள். ஆனால் அந்நேரத்தில் சங்கர் என்னும் ஒரு மாணவன் மட்டும் காணாமல் போய் விட்டான். அவ னுடைய தாயார் தன் பையன் மட்டும் காணவில்லையே என்று பதறிவிட்டார். அவனுடைய தந்தையும் இவ்விஷயத்தை தொலைபேசி மூலமாக அறிந்து பள்ளிக்கு வந்து விட்டார். எல்லா ஆசிரியர்களும் அவனைத் தேடுவதிலேயே இருந்தனர். அவன் தாயாரும் தந்தையாரும் பள்ளியில் அழுது கொண்டிருந் தார்கள். மாலையில் 3.30 மணிக்கு பள்ளி விடுவார்கள். மூன்று மணிக்கு சங்கர் நிதானமாகப் பள்ளிக்கு வந்தான். எல்லாரும் அவனை "எங்கே சென்றாய்?" என்று கேட்டனர். "என்னை இரண்டு திருடர்கள் இழுத்துப் போய்விட்டனர். அவர்களில் ஒருவனுக்குக் கன்னத்தில் ஒரு பெரிய மச்சம் இருக்கும்" என்று அழுது கொண்டே கூறினான் சங்கர். உடனே எங்கள் ஆசிரியர், "உடனே கிளம்பு போலீஸ் ஸ்டேஷனுக்கு. புகார்

செய்து விட்டு வரலாம்'' என்று கூறியதும், பையன் பயந்து விட்டான்.

''டீச்சர்! என்னை மன்னிச்சுடுங்க டீச்சர்! நான் சொன்னதெல்லாம் பொய். சும்மா ஜாலியா ஊர் சுற்றத்தான் யாருக்கும் தெரியாம போனேன். போலீஸெல்லாம் வேண்டாம். இனிமேல் இது மாதிரி செய்ய மாட்டேன்'' என்றான்.

நண்பர்கள் எல்லோரும் சிரித்தனர். ஆசிரியர், ''இரண்டு திருடர்கள் உன்னை அழைத்துப் போகவில்லை; நீதான் மூன்றாவது திருடன்!'' என்று அவனைக் கேலி செய்தார். வகுப்பே சிரித்தது.

ஆர். பாலாஜி :

ஒரு கோடை விடுமுறைக்கு ராமநாதபுரம் போயிருந்தோம். ஒரு நாள் மாலை தெருவில் விளையாடிக் கொண்டிருந்தோம். அங்கே ஒரு நாய் வந்தது. நாயைக் கண்டதும் ஆளுக்கொருபக்கம் ஓடினோம். என் அண்ணன் அரவிந்தனை நாய் விடாமல் துரத்தியது. ஒருவர் அண்ணனைப் பார்த்து, ''பயப்படாதே, அதோ இருக்கிறதே குதிரைக்குட்டி. அதன் மேலே ஏறிக் கொள்'' என்றார். அரவிந்துக்குச் சந்தேகம். ''இது குதிரைக் குட்டியா?'' என்று கேட்டான்.

''ஆமாம் இது வெ.மூ. குதிரை'' என்றார் அவர் சிரித்தபடி.

அவன் யோசிக்கவில்லை. பக்கத்திலிருந்த துணி மூட்டை மீது ஏறி குதிரைக் குட்டி மீது தாவினான். நாய் ஓடி விட்டது.

நாங்கள் அங்கே போனோம். எங்கள் நண்பர்கள் கைதட்டி ''ஓடியா'' என்று சிரித்தனர்.

பெரியவர்கள் சிரித்ததால் நானும் சிரித்தேன்.

''தம்பி, வெள்ளி மூக்குக் குதிரை பார்த்தீர்களா?'' என்றார் பெரியவர்.

''ஐயய்ய அரவிந்தனுக்கு கழுதை சவாரி'', என்றான் ஒருவன்.

''ஐய... கழுதையா?'' என்று கீழே குதித்தான் அரவிந்தன். மீண்டும் நாங்கள் சிரித்தோம். ஆமாம் அரவிந்தன் நாய்க்குப் பயந்து ஏறியது வெள்ளி மூக்குக் குதிரைதான்!

கே. விஜய் ஆனந்த் :

ஒரிசாவிலிருந்து எங்கள் சிற்றப்பா வந்திருந்தார். வீட்டில் ஒரே குஷி. நிறைய பழங்களெல்லாம் வாங்கி வந்திருந்தார். என்னிடம் வாழைப்பழம் ஒன்றைக் கொடுத்தார்.

''விஜய், பழத்தை அவிழ்த்து விட்டுச் சாப்பிடு'' என்றார்.

எனக்குப் புரியவில்லை.

வெளியிலிருந்து வந்ததால் போட்டிருந்த நிஜாரை அவிழ்த்துவிட்டு தோய்த்துக் காய வைத்திருந்த வேறு நிஜாரைப் போட்டுக் கொண்டு வரச் சொல்கிறார் என்று அப்படியே நிஜாரை மாற்றிக் கொண்டேன்.

''ஏன் இன்னும் பழத்தைச் சாப்பிடவில்லை?'' என்று கேட்ட சிற்றப்பா மறுபடி ''சீக்கிரம் அவிழ்த்துச் சாப்பிட்டு விட்டுவா, இன்னும் ஒன்று தருகிறேன்'' என்றார்.

ஒரிசா வாழைப்பழத்தை ஆடையை எல்லாம் அவிழ்த்துத்தான் சாப்பிட வேண்டும் போலிருக்கிறது என்று நினைத்து அம்மாவிடம் போய்ச் சொன்னேன். அம்மா சிரித்துக் கொண்டே வாழைப்பழத்தை வாங்கி தோலை உரித்துச் சாப்பிடச் சொன்னாள். ''அவிழ்த்துச் சாப்பிடு'' என்றால் ''தோலை உரித்துச் சாப்பிடு'' என்று அர்த்தமா?

ஒரிசா சிற்றப்பாவின் தமிழை நினைத்து இப்போது கூடச் சிரிக்கிறேன்

தொகுப்பு : ரமாமணி பார்த்தசாரதி



''திருட்டு நடப்பதைத் தடுக்கத்தான் தெரு விளக்கைப் போட்டாங்க....''

''அப்புறம்?''


''இப்போ அதுவும் திருட்டு போய்விட்டது!''


''???''


- கோ. குப்புசாமி.


செவ்வகங்களைச் சேருங்கள் - போட்டி

இந்தப் பதினான்கு துண்டுகளும் 3" X 3" செவ்வகங்களிலிருந்து எடுக்கப்பட்டவை. இவற்றை ஒட்டினால் 3" X 3" அளவில் 4 செவ்வகங்கள் கிடைக்கும். இந்தத் துண்டுகளை வெட்டி எடுத்து ஒட்டி 4 செவ்வகங்களாக்கி ஆசிரியர், கோகுலம், 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097 என்ற முகவரிக்கு, கூப்பனுடன் அனுப்புங்கள். பரிசு உண்டு. ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.









செவ்வகங்களைச் சேருங்கள் - போட்டி

பெயர் :

வயது :

முகவரி :

பின்கோடு :

முடிவு தேதி : 15.9.93



ஜவஹர் இல்லத்தில்தான் கேம்ப்!

★ 'முதலில் தொட்டது' கதை படு சூப்பர். படங்கள் வேறு கண்களுக்கு விருந்தாக இருந்தன! - காமராசவல்லி மாத்தூர், ரெ. இராமதேசிகன்.

★ பரபரப்புடன் படிக்கத் தூண்டுகிறது 'அபிராமியின் அட்டிகை!' - சென்னை - 90, ஸ்ரீநிவாஸ் பிரபு மற்றும் பலர்.

★ உழைத்துச் சாப்பிடுவதே சிறந்தது என்பதை உணர்த்திய 'மந்திரத் தீப்பெட்டி'யின் கதை, படங்கள் எல்லாமே ஜோர்! - மேலப்பாதி எஸ். நாகராஜன், சூரமங்கலம். (பேட்) பி. தமிழரசன், சீர்காழி, ஜே. பலராமன், அம்மையார்குப்பம், மா. வெ. கிருஷ்ணன், திருத்தங்கல் எஸ். தீபன்சக்ரவர்த்தி, காமராசவல்லி மாத்தூர் ரெ. பட்டாபிராமன், வீரகனூர் ஆ. சுரேஷ், ஐ. ரவி, ரா. கணேசன், சங்கராபுரம், கே. கலை, வெள்ளிடெங்கு ஆர். முருகானந்தம், பள்ளிதேவி யலூர் பி. தமிழரசன்.

★ அயல்நாட்டுப் பத்திரிகைகளைப் பார்ப்பது போன்ற தோற்றத்தை அட்டை ஏற்படுத்தி அசத்தி விட்டது! கட்டுரை எங்களுக்குப் பயனுள்ள தகவல்களை அளித்தது. இனி கோடை விடுமுறையில் ஜவகர் இல்லத்தில்தான் காம்ப்! - ஜோதிநகர் ப. கணேஷ், பெரம்பூர் எம். முத்துக்காளத்தி, கள்ளிக்குப்பம் க. வீரராகவன், எட்டமாடி வ. ராஜாத்தி, தருமபுரி எம். சோமசுந்தரம், கரியாப்பட்டினம் சிவ. ஜெய்சங்கர், மேலப்பாதி ராஜலட்சுமி நாகராஜன்.

★ 'அறிவு தெளிந்தது' பயனுள்ள படைப்பு. அம்மையார்குப்பம் மா. வெ. கிருஷ்ணன், நாகை தேவிப்பிரியா, சிங்காபுரம் ஆ. முருகன், குருணி குளத்துப்பட்டி ம. குதுபுதீன் அலி அகமத்.

★ திமிங்கலத்தின் வயிற்றில் மூன்று நாட்கள் இருந்து பிழைத்தவர் கதை வியப்பானது. முகமது நபிகளின் முதாதையரான யூனூஸ் நபி என்பவர் 40 நாட்கள் இருந்து உயிருடன் வெளியே வந்ததற்கு ''குர்ஆனில்'' ஆதாரம் உள்ளது. - மதுரை எம். அகமது அலி.

★ ஆகஸ்ட் மாத இதழில் சுதந்திர தினத்தைப் பற்றி எதுவுமே இல்லையே! - செவ்வாய்பேட்டை பொ. அமராவதி, கண்ணம்பள்ளி ரகுராமன்.
(தலையங்கத்தை மீண்டும் ஒருமுறை படியுங்கள் - ஆசிரியர்.)

★ 'தன் கையே' புதிய சிந்தனையை, நம்பிக்கையை ஊக்குவித்தது! - கச்சேரி நாடி எஸ். சிவகுமார், சேலம் எம்.கே. வேங்கவேல், கல்பாடி க. செந்தில்குமார்.


★ 'யாருக்கு வேணும்' கதையை எழுதிய கைலாஷுக்குப் பாராட்டு. எதையும் அலட்சியப்படுத்தக் கூடாது என்பதை அறிவுறுத்தியது! - திருக்கண்ணங்குடி பா. சரவணகுமரன், மதுரை டி.ஆர். ரமேஷ்குமார் - ஆலப்பாக்கம் கி. சிவா.

★ ஆழியின் ''மனிதனின் மூளை'' இதுவரை அறியாத பல தகவல்களை அளித்தது. இதுபோல் காது, இதயம் போன்றவற்றைப் பற்றியும் ஆழி அளிக்கலாமே? - ஊட்டி ந. அசோக்பாபு, தம்மம்பட்டி க. கிருஷ்ணமூர்த்தி, அகரக்கடம்பனூர் ஆர். சத்தியன்.

★ 'விரும்பியதைக் கேள்' கதையில் சிறுவன் ''வெள்ளாட்டுக் கிடாவுடன் பேசலாம்'' என்று காளிடம் கூறு கிறான். ஆனால் படத்தில் ஒரு பெண் ஆட்டின் படம் இருக் கிறதே! - நாகர்கோவில் எம். எஸ். விஸ்வேஸ்வரன் மற்றும் பலர்.

(கவனக்குறைவால் ஏற்படும் எந்த ஒரு சிறு தவறையும் கோகுலம் வாசகர்களின் பார்வையில் இருந்து மறைக்க முடியாது என்பது உறுதியாகிறது. கோட்டை விட்டதற்கு வருந்துகிறோம். சுட்டிக்காட்டிய வாசகர்களுக்கு நன்றி! - ஆசிரியர்.)

பரதன் அச்சகத்தில் பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக அச்சிட்டு வெளியிடுபவர் : வி. முரளி.
ஆசிரியர் : கி. ராஜேந்திரன்.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - [illegible]. தொலைபேசி - ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்க்குலேஷன் மானேஜர் : 2345623; விளம்பர [illegible] 2345622; டைரக்டர் : 2345621.
ஆண்டுச் சந்தா - உள்நாடு : ரூ. 36/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. [illegible] விமானத் தபால் ரூ. 360/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 18/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. [illegible], விமானத் தபால் ரூ. 180/-.


உருவாக்குங்கள் புதுமுகங்களை 'எக்கோ' விரலால்!
'எக்கோ' ஸ்கெட்ச் பேனாக்களால் முகமூடிகளை உருவாக்குவது எளிதானது மட்டுமல்ல,
அது மிகவும் மகிழ்ச்சி அளிக்கக் கூடியது!
"எக்கோ" பளிச்சிடும் பல வண்ணங்களில் 12, 24 மற்றும் 30 பேனாக்கள் கொண்ட பெட்டிகளில் கிடைக்கிறது.
அனைத்திற்கும் மேலான சிறப்பு, "எக்கோ" நீர் அடிப்படையிலானது, நச்சுத் தன்மையற்றது...
ஆகவே, நீங்கள் உபயோகிக்க முற்றிலும் பாதுகாப்பானது.
சற்று நினைத்துப் பாருங்கள், எவ்வளவு தாய்மார்கள் அதை விரும்புகிறார்கள்!
"எக்கோ" என்றாலே எல்லையற்ற களிப்பு!
Ekco

REGISTERED NO. TN MS (S) 281
Registered as Newspaper in Srilanka

